# உரிமைத் தமிழ்த் தேசம்

தமிழ்த் தேசிய விடுதலை இயக்கத் திங்களேடு

உரிமை: 4தேசம்: 1 திருவள்ளுவர்ஆண்டு 2051 ஐப்பசி / அக்டோபர் 2020 ஆசிரியர்: **தியாகு** பொறுப்பாசிரியர்: சமந்தா


தோழர் தியாகுவின் அறிவுக் குரல் கேட்க https://www.youtube.com/watch?v=NaMbPqrXqPo&feature=youtu.be

## தேசத்தின் குரல்

### சூரப்பாவின் பகற்கொள்ளை! பறிபோகும் அண்ணா பல்கலை!




தமிழ்நாட்டின் பெருமித அடையாளங்களில் ஒன்று அண்ணா பொறியியல் பல்கலைக்கழகம். மிகச் சிறந்த அறிவியல் தொழில்நுட்ப வல்லுநர்களை உலகிற்களித்து, சமூக நீதியின் சிறப்பை மெய்ப்பித்துக் காட்டிய கல்வி நிறுவனம். தமிழ்வழிப் பொறியியல் கற்றுத் தர முடியுமா என்ற அறைகூவலை ஏற்று

## உள்ளே...


1. தேசத்தின் குரல் -1
2. செவ்வணக்கம் தோழர் தேவேந்திரன்! -4
3. வரம்பின்றித் தொடரும் வதை -10
4. செங்காட்டான் குறிப்புகள் -20
5. இந்தியை எதிர்ப்பது ஏன்? எப்படி? -23
6. இந்தியாவில் காலப் பயன்பாடு வெளிப்படுத்தும் பாலினப் பாகுபாடு -27
7. கியூபாவின் புரட்சிப் பெண்கள் (8) -31
8. ஒரு கூர்வாளின் நிழலில் தமிழினி அக்கா! -35
9. நக்வெய்ன் மார்க்சியப் பள்ளியில்(11) -63
10. டாலருக்கு வந்த வாழ்வு(6) -73



பதிவு எண் :R.Dis. No. 1964/2014

அதற்கான ஆக்கப் பணிகளை முன்னெடுத்தவர்கள் இப்பல்கலைக் கழகத்தின் பேராசிரியர்கள். தமிழ்நாட்டு மக்களுக்குச் சொந்தமான அண்ணா பல்கலைக்கழகம் இந்தியப் பேரரசின் கண்களை நெடுநாளாகவே உறுத்திக் கொண்டிருந்தது, அண்ணா பல்கலைக் கழகத்தைக் கைப்பற்ற தில்லிக்காரர்கள் வகுத்த சூழ்ச்சித் திட்டம்தான் அதனை 'உயராய்வு நிறுவனம்' ஆக்குவதன் பேரால் நடுவண் கல்வி அமைச்சகம் எடுத்துக் கொள்வது. இந்தத் திட்டத்தை நிறைவேற்றி முடிக்க ஏவப்பட்ட கருவிதான் துணைவேந்தர் சூரப்பா.

இந்த சூரப்பா தமிழக அரசிடம் இசைவு பெறாமலே அண்ணா பல்கலைக் கழகத்தை ஒப்படைக்க இந்திய அரசின் கல்வித் துறைக்கு உறுதிப் பத்திரம் எழுதி அனுப்புகிறார். கடைத் தேங்காயை எடுத்து வழிப் பிள்ளையாருக்கு உடைத்த கதைதான்! சூரப்பா உடைக்கும் சூரைத் தேங்காய்!
அண்ணா பல்கலைக் கழகத்தை உயராய்வு நிறுவனமாக மாற்ற இந்திய அரசுக்குத் தமிழக அரசு 1,570 கோடி செலுத்த வேண்டுமாம்! அதில் 1,000 கோடி உடனே தர வேண்டுமாம்! அந்தத் தொகையைத் தமிழக அரசிடம் கேட்க வேண்டாம், நானே கொடுக்கிறேன், தவணை முறையில் ஆண்டுக்கு 314 கோடியென ஐந்தாண்டுகளில் கொடுத்து விடுகிறேன் என்கிறார் சூரப்பா! எப்படிக் கொடுப்பாராம்? அண்ணா பல்கலைக்கழகத்துக்கு உறுப்புக் கல்லூரிகளிலிருந்து கிடைக்கும் இணைப்புக் கட்டணம், மாணவர்களிடமிருந்து தண்டும் கல்விக் கட்டணம், தேர்வுக் கட்டணம் ஆகியவற்றைக் கொண்டு தில்லிக்குக் கப்பம் கட்டுவதுதான் சூரப்பாவின் திட்டம்! இது தன்னுடைய சுடர்மிகு கண்டுபிடிப்பு என்று பீற்றிக் கொண்டு, தமிழ்நாட்டுக்குத் தனது கொடை என்றும் அறிவித்துக் கொள்கிறார்.

எல்லாமே நயவஞ்சக நாடகம் என்பதைத் தமிழர்கள் அறிவார்கள். மாநில அரசைக் கேட்காமலே கர்நாடகத்தைச் சேர்ந்த சூரப்பாவை இந்தப் பதவிக்குக் கொண்டுவந்தவர் தில்லியின் 'வைஸ்ராய்' பன்வாரிலால் புரோகித். குடியாட்சியத்துக்குப் புறம்பாகத் தமிழ்நாட்டைச் சிதைக்கவும் தமிழர்களைப் பழிவாங்கவும் இந்தப் புரோகிதரை அனுப்பிய மோதி-அமித்ஷா கும்பலின் சூதுப் பகடைதான் சூரப்பா!

தானடித்த மூப்பாக சூரப்பா செயலாக்க முற்பட்டுள்ள இத்திட்டத்தைத் தமிழக அரசு ஏற்கவில்லை. ஆனால் வெறும் சிணுங்கலால் மட்டும் சூழ்ச்சி வலையறுக்க முடியாது.

சூரப்பாவையும் அவரை ஏவிய ஆளுநரையும் ஆளுநரின் ஆளுநர்களையும் கடுமையாக எதிர்த்திட வேண்டும். அண்ணா பல்கலைக் கழகம் 'உயராய்வு நிறுவனம்' ஆக அறிவிக்கப்படுவதால் 69 விழுக்காடு இடஒதுக்கீடுவழிச் சமூக நீதி பறிபோய் விடும் என்பதை மட்டும் இந்த எதிர்ப்புக்குக் காரணமாகக் காட்டுவது போதாது. கல்வித் துறையில் மிச்சமுள்ள தமிழ்நாட்டுத் தன்னாட்சியும் பறிபோகிறது என்பதே அடிப்படைக் காரணம்.

அண்ணா பல்கலைக் கழகச் சிக்கல் தொடர்பாக ஆராய அமைச்சர் குழு அமைத்திருப்பதாகச் சொல்கிறார் எடப்படியார்! நெளியும் புழுவுக்குள்ள மரியாதை கூட இந்தக் குழுவுக்கு இருக்கப் போவதில்லை. அண்ணா பல்கலைக் கழகத்தை எக்காரணத்தை முன்னிட்டும் விட்டுத்தர மாட்டோம் என்று தமிழக அரசு திட்டவட்டமாக அறிவிக்க வேண்டும். சூரப்பாவையும் புரட்டுப் புரோகிதரையும் வெளிப்படையாகக் கண்டிக்க வேண்டும். அமைச்சரவையிலும் சட்டப் பேரவையிலும் அனைத்துக் கட்சிக் கூட்டம் கூட்டியும் கண்டனத் தீர்மானம் இயற்ற வேண்டும். சூரப்பாவின் செயல் அரசமைப்புச் சட்டத்துக்குப் புறம்பானது என்ற கருத்தின் அடிப்படையில் அதனை நீக்கம் செய்யுமாறு உயர் நீதிமன்றத்தை நாடுவது பற்றியும் கருதிப் பார்க்கலாம்.

தமிழ்நாட்டில் பார்ப்பனிய ஆற்றல்கள் தவிர கிட்டத்தட்ட அனைவருமே சூரப்பாவின் அடாவடி சூரத்தனத்தைக் கண்டித்துள்ளனர். ஆனால், இந்த ஆளுநரும் இவருக்குப் பின்னாலுள்ள இந்தியப் பாசிச ஆட்சியாளர்களும் செய்து வரும் பிற நகர்வுகளையும் இணைத்துப் பார்க்கும் போது அண்ணா பல்கலைக் கழகத்தை அவ்வளவு எளிதில் பாதுகாத்து விட முடியாது என்பதைப் புரிந்து கொள்ளலாம். தமிழர் இறைமை மீட்பு என்பது கல்வித் துறையில் மட்டுமென்றாலும் தமிழ்மக்களின் ஒன்றுபட்ட உறுதியான போராட்டத்தால் மட்டுமே மெய்ப்படும். இதற்கு மாற்று அடிமைத்தனமும் அழிவுமே தவிர வேறில்லை என்பதைத் தமிழ் மக்களிடம் தெளிவாக எடுத்துச் சொல்வோம்!

# செவ்வணக்கம் தோழர் தேவேந்திரன்!



பெருந்தொற்றுக் காலத்தில் இயக்கமும் நானும் சந்தித்த இழப்புகளில் ஆகப் பெரியது தோழர் தேவேந்திரனின் மறைவு! சற்றும் எதிர்பாராதது! கோவிட்-19 தொற்றியதையும் அதற்காகச் சில நாள் இஎஸ்ஐ மருத்துவமனையில் இருந்து வீடு திரும்பியதையும் அவராக எனக்குச் சொல்லவே இல்லை. கனடாவிலிருந்து தோழர் கோபால் சொல்லித்தான் தெரிந்து கொண்டேன். பிறகு அழைத்து விசாரித்த போது அவருக்கே உரிய சிரிப்புடன் "அது ஒன்றும் செய்தியே இல்லை தோழர்" என்று சொல்லி முடித்து விட்டார். பிறகு 2020 செப்டெம்பர் 26ஆம் நாள் புலனத்தில் அவர் அனுப்பிய செய்தி:

**"உண்மைகளைத் தெரிந்து கொள்ளுங்கள்!**

**நல்லவர்களை மனதாரப் பாராட்டுங்கள்!**

**கோவை ESI அரசு மருத்துவமனையில் 7 நாட்கள் கொரொனாவுக்காக சிகிச்சை பெற்று வீடு திரும்பினேன். உள் அனுமதித்தவுடன் 5 நாட்களுக்கு வேண்டிய மருந்துகளைத்**

**தந்து படுக்கைக்கு அனுப்புகின்றனர். மறுநாள் சி.டி ஸ்கேன், இ.சி.ஜி., ரத்தப் பரிசோதனைகளை எடுத்து சரியான சிகிச்சைகளைத் தருகின்றனர். காலை 5.30 சூடாக பால், 8.30 தரமான உணவு, 9,00 கபசுரக் குடிநீர்,10.00 கூழ் 11.30 பழம்+ ஜூஸ், 12.00 சூப் (ரசம்) 1.30 முட்டையுடன் உணவு, 3.30 சுண்டல், 4.00 சூடாக பானம், 8.30 உணவு. பலமுறை தேடிவந்து உடல் பரிசோதனைகள். மருத்துவரின் கனிவான நம்பிக்கை தரும் பேச்சு! செவிலியர்களின் ஓயாத உழைப்பு, அன்பான உபசரிப்பு! துப்புரவுச் சகோதரர்களின் தியாகமும் நேர்மையும். 2ஆவது தளத்தில் தங்கி சிகிச்சை பெற்றேன். கழிவறை முதல் அனைத்து இடங்களையும் மிக சுத்தமாக வைத்து உள்ளனர். சுமார் 400 க்கும் மேற்பட்ட நோயாளிகளை வைத்து இந்த அளவு சிறப்பாகச் செயல்படுத்தி வரும் (Deen) தலைமை மருத்துவரை உளமார வாழ்த்துவோம். தனது உயிரைப் பெரிதெனக் கருதாமல் பிறர் வாழ சேவையாற்றும் மருத்துவமனை ஊழியர்களும் குடும்பத்தினரும் அனைத்து நலன்களும் பெற்று வாழ மனமார்ந்த வாழ்த்துக்கள்.**

**க. தேவேந்திரன், தந்தை பெரியார் படிப்பகம். கோவை-2**

**குறிப்பு: வீட்டில் இருந்து இருசக்கர வாகனத்தில் புறப்பட்டுச் சென்று**
**மீண்டும் வீடு வந்து சேரும் வரை எனக்கான செலவு என்பது**
**ரூ. 200 மட்டுமே!!!**

இதன் பிறகு செப்டம்பர் 27ஆம் நாள் கொரோனா கேள்வி பதில்கள் என்ற தலைப்பில் சிவகங்கை மருத்துவர் ஏ.பி. ஃபரூக் அப்துல்லாவின் விளக்கங்களைப் பகிர்ந்திருந்தார். ஓரிரு நாள் கழித்துத் தொலைபேசியில் அழைத்து “நீங்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் தோழர்” என்றார். “சரி, ஊர் சுற்றாமல் சில நாளாவது வீட்டிலேயே ஓய்வெடுங்கள்” என்றேன். ஒரு சிரிப்புதான் விடையாக வந்தது.

அக்டோபர் 15ஆம் நாள் காலை போத்தனூர் பாவாணர் பைந்தமிழ்ப் பாசறைத் தோழர்கள் அழைத்து அந்தக் கொடுஞ்செய்தியைச் சொன்னார்கள். ஆடிப் போனேன். மற்ற கோவைத் தோழர்களை அழைத்துத் துயரச் செய்தியை உறுதி செய்து கொண்டேன். தோழரின் மகன் குரு பேசினார். “அப்பா சில நாள்தான் வீட்டில் தங்கினார். பிறகு ஊர் சுற்றக் கிளம்பி விட்டார், நேற்றுக்கூட திருவாரூர் போய் வந்தார்” என்றார். இறுதி நிகழ்வில் இயக்கம் சார்பில் தோழர்

பாரதி கலந்து கொண்டார்.

எங்கள் நெருக்கத்தை நன்கறிந்த மருத்துவர் மணிகண்டன் என்னை அழைத்து ஆறுதல் சொன்னதோடு கோவையில் கடைசியாக நான் கலந்து கொண்ட நிகழ்ச்சியின் படங்களை அனுப்பியிருந்தார். ஆம், கொரோனா தொடங்குமுன் கோவையில் கடைசியாக நான் கலந்து கொண்டது தோழர் தேவேந்திரன் பெரியார் படிப்பகத்தில் நடத்திய நிகழ்ச்சியில்தான்! 2019 அக்டோபர் 13ஆம் நாள் காலை வேலாண்டிப்பாளையம் குறிஞ்சி மகளிர் சிந்தனைக் களத்தில் ”கீழடிக்குக் கீழே” எனும் தலைப்பில் பேசிய பின் மாலையில் தோழர் தேவேந்திரன் பணித்தவாறு தந்தை பெரியார் படிப்பகத்தில் திருவள்ளுவர் படம் திறந்து வைத்துப் பேசினேன். அதுதான் இருவரும் சேர்ந்து கலந்து கொண்ட கடைசிப் பொது நிகழ்ச்சி!

தோழர் தேவேந்திரன் பற்றிச் சொல்வதற்கு நிறைய உண்டு. 1993ஆம் ஆண்டு திலீபன் மன்றம், விடுதலைக் குயில்கள் இணைந்து தமிழ் தமிழர் இயக்கம் கண்ட போது கோவையில் பெரியநாயக்கன்பாளையத்தில் அவர் இல்லத்தில் கோவைத் தோழர்களுடனான சந்திப்பு நிகழ்ந்தது முதல் எங்கள் நட்பு தொடங்கியது. மறுப்புகளையும் எதிரப்புகளையும் புறந்தள்ளி இணைப்புக்கு உறுதியாகத் துணைநின்றார் தோழர் தேவேந்திரன். தமிழ் தமிழர் இயக்கத்தின் மாவட்டச் செயலாளராகவும், தலைமைக் குழு உறுப்பினராகவும், பொருளாளராகவும் அவர் ஆற்றிய பணிகள் அளப்பரியவை.

* இயக்கத்தின் இரண்டாம் மாநாட்டைக் கோவை (ஆர் எஸ் புரம் சின்னசாமி கல்யாண மண்டபத்தில்) அவர் முன்னின்று சிறப்பாக நடத்தினார்.

* திருமூர்த்தி அணை அருகே ஒரு காட்டுக் கோயிலில் ஒன்றுபட்ட இயக்கத்தின் முதல் அரசியல் வகுப்பை அவர்தான் ஒழுங்கு செய்தார். ”அப்பா இந்தக் கோயிலுக்காக வழக்கு நடத்திக் கொடுத்தவர்” என்றார். தோழர் தேவேந்திரனின் தந்தையார் வழக்கறிஞரும் கோவை மாவட்ட திராவிடர் கழகத் தலைவராக இருந்தவருமான கஸ்தூரி ஐயா! தந்தை பெரியார் தங்கள் வீட்டில் தங்கியதைப் பெருமையுடன் குறிப்பிடுவார் தேவேந்திரன்.

* ”தன்னுரிமையா? தேசிய விடுதலையா?” என்ற விவாதம் முதலில் உட்கட்சி அளவிலும், பிறகு பொது அளவிலும் நடந்து கொண்டிருந்த போது அவர் அனைத்தையும் கூர்மையாகக் கவனித்து வந்தார். ஆனால் தன்னை அவர் வெளிப்படுத்திக் கொண்டதில்லை. ’இயக்கம் இரண்டாகப் பிளவுபட்டு விடுமோ’ என்பதுதான் அவருக்குப் பெருங்கவலையாக இருந்தது. இறுதியாக திருச்சிராப்பள்ளி சிறப்புப் பேரவையில் வாக்கெடுப்பு நடத்துமுன் “இதைத்

தள்ளிப்போட முடியாதா?” என்று என்னிடம் கேட்டார். அதற்கு முன் அம்பத்தூர் பேரவையில் வாக்கெடுப்பு நடத்தப்பட்டு ’தேசிய விடுதலை’ தோற்றுத் ’தன்னுரிமை’ ஒரு வாக்கு வேறுபாட்டில் முடிவான போது, இயக்கத் திங்களேட்டில் பொது விவாதம் நடத்த வேண்டும் என்ற என் வலியுறுத்தல் ஏற்கப்பட்டு அவ்வாறே விவாதமும் நடைபெற்றது. இறுதியில் ஒரு முடிவெடுக்கத்தான் திருச்சியில் சிறப்புப் பேரவை கூட்டப்பட்டது. ”இனி எப்படி தேவேந்திரன் தள்ளிவைக்க முடியும்?” என்று கேட்டேன். வாக்குப் பெட்டி வழி கமுக்க வாக்கெடுப்பு நடத்துவதற்கான மூவர் குழுவில் தோழர் தேவேந்திரனும் ஒருவர். ஒரு வாக்கு வேறுபாட்டில் ’தேசிய விடுதலை’ வென்று, அடுத்த சில நாளில் தோழர் சுபவீ பிரிந்து சென்றார். தோழர் தேவேந்திரன் என்ன செய்யப் போகிறாரோ? என்ற கவலை பல தோழர்களுக்கு இருந்தது. எனக்கில்லை. அவரது தேர்ந்த தெளிவு எனக்குத் தெரியும்.

* கோவையில் முத்தமிழ்க் கலைவிழாவுக்காக ஒரு திங்களுக்கு மேல் அவரோடு இருசக்கர வண்டியில் கோவை முழுக்க அலைந்த போது எங்களுக்கிடையே ஆழ்ந்த புரிதலும் வலுவான நெருக்கமும் வளர்ந்தன. அந்தக் கலைவிழா கோவையில் முழுநாள் நிகழ்ச்சியாகச் சீரும் சிறப்புமாய் நடந்து முடிந்தது. ஆனால் “ஆபரேசன் சக்சஸ், பேஷண்ட் அவுட்” என்று தோழர் தேவேந்திரன் சோகச் சிரிப்புடன் கூறியதன் பொருள் எனக்குத்தான் தெரியும், இயக்கம் பெருங்கடன் பட்டிருந்தது, கலைவிழாவுக்காகப் பொருள் சேர்த்து செலவு போக மிஞ்சியதில் கடனடைக்கலாம் என்று திட்டம். முடிவில் கணக்குப் பார்த்த போது கலைவிழாவுக்காகப் புதிய கடன் பட்டிருந்ததைத்தான் தேவேந்திரன் அப்படிச் சொன்னார்.

* இயக்கத் தோழர்கள் அனைவரோடும் தோழர் தேவேந்திரனின் குடும்ப உறவைக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும். சுதாவுக்கும் திலீபாவுக்கும் ’தேவேந்திரன் மாமா’ இல்லாமல் எதுவும் நடக்காது. திலீபா கோவை அரசினர் பொறியியல் கல்லூரியில் படித்த நாலாண்டுக் காலமும் அவளுக்கு அவர்தான் எல்லா வகையிலும் காப்பாளராக இருந்தார். அவளின் காதலையும் திருமணத்தையும் இருவரும் சேர்ந்தே வாழ்த்தினோம். அவரைக் கடைசியாகப் பார்த்தது கூட திலீபா மைத்துனர் திருமண வரவேற்புக்காக சென்ற ஆண்டு நவம்பரில் கோவை சென்றிருந்த போதுதான்!

* 2008-09 ஈழத் தமிழின அழிப்புப் போர் நம்மில் பலரையும் போலவே தோழர் தேவேந்திரனையும் மிகக் கடுமையாகப் பாதித்தது. இந்திய சிங்களக் கொடியெரிப்புப் போராட்டம் நடத்தத் தமிழ்த் தேசிய விடுதலை இயக்கமும் தமிழ்த் தேசப் பொதுவுடைமைக்

கட்சியும் தீர்மானித்த போது தோழர் தேவேந்திரன் அதில் நேராகப் பங்கேற்றுத் தளைப்பட வேண்டாம் என்று அறிவுறுத்தினோம். ஆனால் கொடியெரிப்பு நிகழ்வின் போது அருகே நின்று கொண்டிருந்த அவரையும் பிடித்துப் போய் தோழர்கள் பாரதி, குணா, தமிழரசன், சங்கர், திருவள்ளுவன் உள்ளிட்டோருடன் கோவைச் சிறையிலடைத்து விட்டனர். அபத்தமான பிணை நிபந்தனைகளை ஏற்று வெளியே வருவதில்லை என்ற முடிவில் உறுதியாகத் த.தே.வி.இ. சார்பில் தோழர் பாரதியும் த.தே.பொ.க. சார்பில் தமிழரசனும் உள்ளே இருப்பது, மற்றவர்கள் வெளியே வருவது என்ற முடிவின் படி தோழர் தேவேந்திரனும் மற்றவர்களும் வெளியே வந்தனர்.

* தோழர் தேவேந்திரன் தன் ஈழப்பற்றினால் ஒவ்வொரு ஈழத் தமிழரிடமும் அன்பும் அக்கறையும் கொண்டவராக விளங்கினார். இந்த ஆண்டு சனவரி-பிப்ரவரியில் கனடாவிலிருந்து வந்திருந்த தோழர் கோபால் சில நாள் கோவையில் தங்க வேண்டியிருந்த போது நான் அவரைத் தோழர் தேவேந்திரனிடம்தான் அனுப்பி வைத்தேன். "உங்களுக்கோ குடும்பத்தினருக்கோ ஏதும் இடர்ப்பாடா?" என்று கேட்ட போது, "ஈழத்தமிழர் ஒருவருக்கு எங்களால் முடிந்ததைச் செய்வதைப் பெருமையாக நினைக்கிறேன் தோழர்" என்றார்.

* அவர் இறுதி வரை செயலாளராகப் பணையாற்றிய தந்தை பெரியார் படிப்பகம் திமுக சார்பு அமைப்பாக இருந்து, பிறகு மதிமுக சார்பு அமைப்பாக மாறி, பிறகு மீண்டும் திமுக சார்பு அமைப்பான போதிலும், தோழர் தேவேந்திரன்தான் தொடர்ந்து செயலாளராக இருந்து வந்தார். இனவழிப்புப் போர்க் காலத்தில் தனக்கு ஏற்பட்ட மனத்துன்பத்தை என்னிடம் பகிர்ந்து கொண்டார். "படிப்பகத்தில் மற்றவர்கள் என்ன நினைக்கிறார்கள்?" என்று நான் கேட்ட போது "அவர்களுக்கும் இதே துன்பம்தான்" என்றார். படிப்பகம் பகுத்தறிவு, தமிழ்ப் பணி, குருதிக்கொடை ஆகியவற்றுடன் நின்று கொண்டதால் அரசியல் மாறுபடுகளை மீறி ஒற்றுமையாகச் செயல்பட முடிந்தது. அந்த ஒற்றுமையின் அடையாளமே செயலாளர் தோழர் தேவேந்திரன்தான்.

* அரசியல் வகையிலோ அமைப்பு வகையிலோ ஏற்படும் மாறுபாடுகளுக்காக எவரிடமும் கசப்பு பாராட்டாத அருங்குணம் தோழர் தேவேந்திரனுக்கே உரிய தனிச் சிறப்பு. ஒரு கட்டத்தில் கொச்சையான இனவாத நோக்கில் அவரைத் தனிமைப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டு அது ஏற்கப்படாத போது அமைப்பை விட்டு வெளியேறிய தோழர்களிடம் கூட இறுதி வரை நட்புடன் பழகி வந்தார்.

**"அன்பின் வழியது உயிர்நிலை"** என்ற குறள்நெறியின் ஆளுருவம் -- மந்தநேயத்தின்

கொடுமுடி -- தோழமையன்பின் தூய அடையாளம் -- தோழர் தேவேந்திரனுக்குத் தமிழ்த் தேசிய விடுதலை இயக்கத்தின் செவ்வணக்கம்!

---

## தோழர் சமந்தாவின் சூழலியல் தொடர் வகுப்பு:



**உரிமைத் தமிழ்த் தேசம் பொறுப்பாசிரியரும் சூழல் அரண் முன்னெடுப்பாளருமாகிய தோழர் சமந்தா சூழலியல் அறிவும் உணர்வும் ஊட்டும் வகையில் இணைய வழியில் சூழலியல் வகுப்பு நடத்துகிறார். சென்ற 23/10/2020 வெள்ளிக் கிழமை இரவு 4 மணிக்கு 'சூம்' செயலியைப் பயன்படுத்தி அவர் நடத்திய முதல் வகுப்பு அதில் கலந்து கொண்ட் அனைவருக்கும் பெரும் பயனளித்தது. நிகர்நிலை சந்திப்புக்கு வர இயலாத நூற்றுக் கணக்கானோர் முகநூல் நேரலை வழியாகக் கண்டு பயனடைந்தனர். வெள்ளிக் கிழமை தோறும் தொடர் வகுப்பாக இதனை முன்னெடுக்க அவர் இசைந்துள்ளார். இரண்டாம் வகுப்பு 30/10 வெள்ளி இரவு நடைபெறுகிறது. ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் அதே நேரம் தொடர் வகுப்பு இடம்பெறும். (Zoom id: 838 5733 8543. Passcode: 12345.) பங்கேற்றுப் பயன்பெற வாருங்கள்!**

-- ***தியாகு***

# வரம்பின்றித் தொடரும் வதை:

**சமந்தா**

கோவிட்- 19தாக்கத்தால் மோசமாக்கப்பட்ட பொருளாதாரத் தேக்க நிலையால் இந்தியப் பொருளாதாரம் இந்த நிதியாண்டின் முதல் காலாண்டில் 22.8 சதவீதத்திற்கு வீழ்ந்த போதும் அரசோ தலைமை வங்கியோ மத்திய அரசின் நிதிப் பற்றாக்குறையைப் பணமாக்குவதற்கான எந்த அடியும் முன்வைக்கவில்லை, அதற்குரிய நேரம் வந்தால் செய்வோம் என்றும், கடைசி வாய்ப்பாகத்தான் அதைப் பயன்படுத்த வேண்டும் என்றும் மத்திய வங்கியின் ஆளுநரும் அதைத் தள்ளிப் போடுகிறார். எதற்காகக் காத்திருக்கிறார்கள்? பொருளாதாரம் மேலும் 50 சதவீதத்திற்கும் மேல் வீழவேண்டும் என்பதற்கா? வருமுன் காக்கத்தான் முடியவில்லை, வந்த பின்னாவது உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளாதது பொறுப்பின்மையின் உச்சக்கட்டமே ஆகும். நிதியமைச்சருக்கு மட்டும் அரசின் சரியான நடவடிக்கைகளால் பொருளாதாரம் வடிவ மீட்சி அடைவதாகத் தெரிகிறதாம். பிரதமரோ எதைப் பற்றியும் கவலைப்படாமல் மன்- கி-பாத்தில் சலிக்காமல் கதையளந்து வருகிறார்.

இந்த நிதியாண்டில் மத்திய அரசின் நிதிப் பற்றாக்குறை 8-9 சதவீதம் அதிகரிக்கும் என பலதரப்பு நிறுவனங்களாலும் கணக்கிடப்பட்டுள்ளது. மத்திய அரசின் வரிவருவாய் 30 சதவீதத்திற்கு மேல் குறைந்துள்ளது. நிதிப் பற்றாக்குறை அதிகமாகிறது என்று அரசு செலவினங்களை மேலும் குறைத்தால் பொருளாதார மீட்சி தடைப்படுவதுடன் அரசின் வருவாய் மேலும் குறையும், நிதிப் பற்றாக்குறை மேலும் அதிகரிக்கும். அது அடுத்தடுத்து வருவாயைக் குறைத்து நிதிப் பற்றாக்குறையை அதிகமாக்கும் சூனிய சுழற்சிக்கே இட்டுச்செல்லும்.

மத்திய அரசு 2018-19ஆம் ஆண்டிற்கான 40% செஸ் வரி வருவாயை உரிய முறையில் ஒதுக்கீடு செய்யாமல் இன்னும் இந்தியாவின் ஒருங்கிணைந்த தொகுப்பு நிதியிலே வைத்திருப்பது ஜி.எஸ்.டி சட்ட நெறிகளுக்கு புறம்பானது எனத் தலைமைக் கணக்காயரின் அறிக்கை தெரிவிக்கிறது. ஆனால் நிதி அமைச்சகம் அதை மறுத்துள்ளது. மாநிலங்களுக்குக் கொடுக்க வேண்டிய 1.51 லட்சம் கோடி ஜி.எஸ்.டி. 'நிவாரண'த் தொகையைத் தலைமை வங்கியிடம் கடன் பெற்று அளிக்க வேண்டிய பொறுப்பு மத்திய அரசுக்கு உள்ளது. ஆனால் மத்திய அரசு மாநிலங்களின் கடன் சுமையை மேலும் அதிகரிக்கும் படி இரு வாய்ப்புகளையே திணித்தது.

**இப்பொழுது கடன் பெறுவதற்கான எந்த வாய்ப்பையும் தேர்வு செய்யாத மாநிலங்களுக்கு 2022 ஜூன் வரை ஜி.எஸ்.டி நிவாரணம் வழங்கப்படாது என வஞ்சித்து பெயரளவுக்கே உள்ள இந்தியக் கூட்டாட்சி அமைப்பை மொத்தமாகத் தகர்த்துள்ளது.** பிரதமர் நரேந்திர மோடி அவர்களோ இந்தியாவில் பன்மைத்துவத்தை அழித்து விட்டு, ஜனநாயக முகமூடியுடன் ஐநா அவையில் பன்மைத்துவச் சீர்திருத்தம் வேண்டும் எனக் கோருகிறார்.

உலகளவில் கொரோனா நோய்க்கான மருந்துகளின் மொத்த உற்பத்தியில் சரிபாதியைப் பெறுவதற்கான ஒப்பந்தங்களை அமெரிக்கா, பிரிட்டன், ஆஸ்திரேலியா, ஹாங்காங், ஜப்பான், ஸ்விட்சர்லாந்து, இஸ்ரேல் உள்ளிட்ட வளர்ந்த நாடுகள் பெற்று விட்டன .அவை வாங்கியது போக எஞ்சியுள்ளதைத்தான் மற்ற நாடுகள் பகிர்ந்து கொள்ள வேண்டும். உலகம் முழுவதும் பரவியிருக்கும் ஒரு கொள்ளை நோய்க்கான தடுப்பு மருந்தானது, அனைத்து நாட்டு மக்களுக்கும் கிடைக்க வேண்டும். குறிப்பிட்ட சில நாடுகளுக்கு மட்டும் பணத்துக்காக மருந்துகளை வழங்குவது மனித உரிமைகளுக்கு எதிரானதாகும். என ஆக்ஸ்ஃபார்ம் ஆய்வறிக்கை தெரிவித்துள்ளது. கோவிட்-19ஆல் உலகே கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கும் நிலையில் கூட உலக சுகாதார அமைப்புக்கு நிலுவைத் தொகையில் 62 மில்லியன் டாலருக்கு மேல் தர முடியாது என்று பேரம் பேசுகிறார் ட்ரம்ப்.

இந்தியாவின் சுகாதாரத் துறை அமைச்சர் ஹர்ஷவர்தன் மாநிலங்கள் சுகாதாரத்திற்கான ஒதுக்கீடுகளை 8 சதவீதம் உயர்த்த வேண்டும் என்றும் அதன் மூலம் 2025க்குள் சுகாதாரத்திற்கான ஒதுக்கீட்டை மொத்த ஜிடிபியில் 2.5 சதவீதமாக உயர்த்த முடியும் என்றும் கூறியுள்ளார். கோவிட்-19 வந்த பிறகு மருத்துவச் செலவுகளுக்காக வெறும் 7,000 கோடியை மட்டுமே ஒதுக்கியது மத்திய அரசு. மாநிலங்களுக்கு உரிய நிவாரணத் தொகை வழங்காமல், மாநிலங்களின் வரி பெறும் உரிமைகளையும் பறித்து விட்டு, சுகாதாரத்திற்கான ஒதுக்கீடுகளை 8 சதவீதம் உயர்த்த வேண்டும் என மாநிலங்களைக் கேட்பது அநீதியின் உச்சம் அல்லவா?.

மத்திய அரசு, 11,269 கோடி ஜி.எஸ்.டி நிவாரணத் தொகை உட்பட 23,763.36 கோடி ரூபாயைத் தமிழ்நாட்டிற்கு வழங்காமல் உள்ளது. முன்னுரிமைப் பிரிவுகளுக்கு வழங்கப்படும் கடன் மார்ச் 31, 2024 முதல் 75 சதவீதமாக அதிகரிக்கப்படும் என்று தலைமை வங்கி அறிவித்தது. கோவிட்-19 தாக்கத்தால் நலிந்த பிரிவினருக்கும், பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கும் உடனடிக் கடன்

நிவாரணம் அளிக்காமல் 4 வருடம் காத்திருக்கச் சொல்லுகிறது தலைமை வங்கியின் இந்தப் புதிய விதி. வங்கிச் சீர்திருத்தத்தை உடனடியாக செயல்படுத்தாமல் தள்ளிப் போடுவதற்கான வாய்ப்பாகவே இதைப் பார்க்க வேண்டும். நான்கு வருடங்களுக்கிடையில் அடைய வேண்டிய இடைக்கால இலக்குகளைத் தலைமை வங்கி அறிவிக்காதது ஏன்? பாஜக அரசு ஜனநாயகத்துக்கு முற்றிலும் புறம்பான முறையிலேயே தேசிய அளவில் ஒவ்வொன்றையும் நடைமுறைப்படுத்துகிறது. ஜி,எஸ்.டி வரி எந்த முன்னேற்பாடும் இல்லாமல் திடீர் முறையில் அமலாக்கப்பட்டது, பண மதிப்பிழப்பும் எந்த முன்னறிவிப்புமின்றி திடீரென்று அறிவிக்கப்பட்டது, பொது முடக்கமும் முன்னறிவிப்பின்றி நான்கு மணி நேரத்துக்குள் பிறப்பிக்கப்பட்டது, தேசிய அளவில் திடீர் மாற்றங்களே திணிக்கப்படும் போது வங்கித் துறையில் ஒரு நெறிமுறையை நடைமுறைப்படுத்த 4 வருடங்கள் தேவையா? அது வரை பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி செய்ய என்ன மாற்றுத் திட்டங்கள் உள்ளன?

முன்னுரிமைக் கடன் பிரிவில் புதிய திருத்தங்கள் தொடர்பாக, செப்டம்பர் 4ஆம் தேதி ரிசர்வ் வங்கி வெளியிட்ட அறிக்கையின் சில பிரிவுகள் தமிழக மாவட்டங்களுக்குக் கடன் வழங்கும் அளவைக் குறைக்கும் விதமாய்ப் பாரபட்சமாக அமைந்துள்ளன. அதில் 1-ஏ உறுப்பின் படி 2022ஆம் ஆண்டு முதல் முன்னுரிமைக் கடன் பிரிவில் குறைந்த கடன் பெறும் (ஒரு நபருக்கு 6,000 ரூபாய்க்குக் குறைவாகக் கடன் பெறும்) மாவட்டங்களுக்கு (184) கடனை 125 சதவீதமாக அதிகரிக்க வேண்டும் என்றும், ஏற்கெனவே கடனளவு அதிகரித்து வழங்கப்படும் (ஒரு நபருக்கு 25,000 ரூபாய்க்குக் குறைவாகக் கடன் பெறும்) மாவட்டங்களுக்கு (205) கடன் 90 சதவீதமாகக் குறைக்கப்படும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. தமிழகத்தில் உள்ள 32 மாவட்டங்களும் (38 மாவட்டங்களாக பிரிக்கப்படுவதற்கு முன்பு) முன்னுரிமைக் கடன் அதிகம் வழங்கப்படும் மாவட்டங்களாக வகைப்படுத்தப்பட்டிருப்பதால் அனைத்து மாவட்டங்களுக்கும் கடன் வழங்குவது குறைக்கப்படும் சூழல் ஏற்பட்டுள்ளது. இந்த வகையில் இதர மாநிலங்களுடன் ஒப்பிடும் போது தமிழகம் தனிமைப்படுத்தப்பட்டுள்ளது. இந்தியாவில் ஒப்பீட்டளவில் பொருளாதார வளர்ச்சி மேம்பட்டு காணப்படும் மாநிலமாக தமிழ்நாடு உள்ளது. இந்திய அமைப்பில் நீடிப்பதற்கு தமிழ்நாடு மிகப்பெரும் விலை கொடுத்து வருகிறது. கோவிட் தாக்கத்தில் பாதிக்கப்பட்டுப் பொருளாதாரம் சரிவடைந்த நிலையில் கடனளவைக் குறைப்பது பொருளாதார மீட்சியை பாதிக்கும் என்பதால் கடனளவைக் குறுக்கும் நடவடிக்கைகளை மத்திய

வங்கி கைவிட வேண்டும்.

மத்திய அரசு எல்பிஜி மானியத்தை நிறுத்தியுள்ளது. இதன் மூலம் நடப்பு நிதியாண்டில் ஏறக்குறைய ரூ. 20ஆயிரம் கோடி மிச்சமாகும். கச்சா எண்ணெய் விலைச் சரிவைச் சாதகமாக்கி ரூ. 5,000கோடியைச் சேமித்தோம் என தர்மேந்திர பிரதான் பெருமிதம் கொள்கிறார். இவற்றை கொரோனா நோய்த் தடுப்புக்குத்தான் பயன்படுத்துவார்கள் என்பதற்கு என்ன உத்தரவாதம்?. பி.எம் கேர்ஸூக்கு நிதியளித்தவர்களுக்கு வரிவிலக்கு அளிக்கப்படும் எனத் தெரிவித்துள்ளது மத்திய அரசு. பி.எம் கேர்ஸூக்கு யார் நிதி வழங்கினார்கள் என்பதில் வெளிப்படைத்தன்மை இல்லாத போது, நிதியளித்தவர்கள்தான் வரிவிலக்கு பெறுகிறார்களா என்பதை எவ்வாறு உறுதிப்படுத்த முடியும்?

பெட்ரோல் டீசல் விலை உயர்வை நிர்ணயிக்கும் பொறுப்பு எண்ணெய் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டதன் மூலம் தினமும் பெட்ரோல், டீசல் விலை மாற்றப்பட்டு வருகிறது. மண்ணெண்ணெயும் விட்டு வைக்கப்படவில்லை, அக்டோபர் முதல் நியாயவிலைக் கடைகளில், மண்ணெண்ணெய் ஒரு லிட்டருக்கு 1.50 ரூபாய் உயர்த்தப்பட்டு 16.50 ரூபாய்க்கு விற்கப்படவுள்ளது. பொருட்களின் விலைவாசியும் ஏறி ஏறிச் செல்கிறது.. ஆனால் 500 ரூபாயில் பொருளாதார மீட்சி பெறச் சொல்கிறது பாஜக அரசு. கோவிட்-19 பொருளாதார நெருக்கடியிலும் இந்தியாவின் செல்வந்தர்களின் சொத்து அதிகரித்துத்தான் வருகிறது. ஐ.ஐ.எ.ஃப்.எல் ஹூருன் பெருஞ்செல்வந்தர்கள் பட்டியலில் 161 புதுமுகங்கள் சேர்ந்ததால் பெரும் கோடீஸ்வரர்களின் எண்ணிக்கை இருமடங்காகியுள்ளது. முகேஷ் அம்பானியின் சொத்து மதிப்பு 73% அதிகரித்துள்ளது. பொதுமுடக்கத்திற்குப் பிறகு ஒவ்வொரு மணி நேரத்திலும் அவர் 90 கோடி சம்பாதித்துள்ளார்.

மலிவு விலை பொதுப் போக்குவரத்துக்கு, இரயில்களையே மக்கள் நம்பியுள்ள நிலையில், அதிலிருந்து எளிய மக்களை விலக்கும் விதமாக விமானக் கட்டணங்களில் வசூலிக்கப்படுவது போல் இரயில்வே கட்டணங்களிலும் பயன்பாட்டுக் கட்டணம் வசூலிக்க இருப்பதும், இரயில்வே தடத்தில் தனியார் இரயில்களை அனுமதிக்க இருப்பதும் கடும் கண்டனத்திற்குரியது. இரயில்வே நிலையங்களில் மறுவளர்ச்சித் திட்டங்களில் அயல் நாட்டு முதலீடுகளை வரவேற்றுள்ளது மத்திய அரசு. தனியார்மய விற்பனையை ஊக்குவிக்க ஏர் இந்தியாவின் பெருமளவுக்

கடன்களை வாங்க அரசு தயாராக உள்ளதாம், அப்படியென்றால் ஏர் இந்தியாவை அரசே ஏற்று நடத்த எது தடையாக உள்ளது? பாஜக அரசின் தவறான பொருளாதார அணுகுமுறைதான்!

பாஜக அரசு இந்த நிதி ஆண்டில் 2.1 லட்சம் கோடி அரசுப் பங்குகளை தனியார்மயப்படுத்த இலக்கு நிர்ணயித்தது, எல்.ஐ.சி, ஐடிபிஐ வங்கிகளின் பங்குகளையும் பாரத் பெட்ரோலிய நிறுவனத்தில் அரசின் 52.98 சதவீதப் பங்குகள் அனைத்தையும் விற்பனை செய்ய பாஜக அரசு முடிவு செய்துள்ளது. எல்.ஐ.சியின் 25% அரசுப் பங்குகளைத் தனியார்மயப்படுத்தி பட்ஜெட் பற்றாக்குறையைக் குறைக்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளதாம். ஈரலை விற்றுச் சாராயம் வாங்கும் கதையாகத்தான் பாஜக அரசின் தனியார்மயத் திட்டங்களும் நடவடிக்கைகளும் உள்ளன. ரகுராம் ராஜனும், விரல் ஆச்சர்யாவும் வங்கிகளைச் சீரமைக்க அவற்றின் அரசுப் பங்குகளை 50 சதவீதத்திற்கும் கீழ் குறைக்க வேண்டும் எனப் பரிந்துரைப்பதன் மூலம் கார்ப்பரேட்டுகளுக்கான தங்கள் ஆதரவையே வெளிப்படுத்துகிறார்கள்.

மக்களவையில் நிறைவேற்றப்பட்ட விவசாயம் சார்ந்த மசோதாக்கள் விவசாயிகளை இடைத்தரகர்களிடம் இருந்து விடுவித்து, அவர்களின் வருமானத்தை அதிகரிக்கும் என்கிறார் மோடி. உண்மையில் இடைத் தரகர் வேலையை மோடி அரசுதான் செய்து வருகிறது. மக்களுக்கும் பெருமுதலாளிகளுக்கு இடையிலான தரகு ஒப்பந்தங்களையே பெருமளவில் நாடாளுமன்றத்தில் இயற்றி வருகிறது. விவசாயம் மாநிலப் பட்டியலில் இருந்த போதும் மாநிலங்களின் இசைவில்லாமல், எதிர்க்கட்சிகளின் எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல் விவசாயிகளையும், நுகர்வோர்களையும் பெரிதும் பாதிக்கும் சட்டங்கள் இயற்றி எதேச்சதிகாரத்தில் மன்னராட்சியையும் விஞ்சியுள்ளது பாஜக அரசு.

விவசாயிகள் விளைபொருள் விற்பனை மற்றும் வணிக (மேம்பாடு மற்றும் வசதி) மசோதா அரசு கொள்முதல் செய்வதற்கான எந்த உத்தரவாதமும் அளிக்காமல் விவசாய சந்தையை முற்றிலும் தனியார்மயப்படுத்த வழிவகுக்கிறது. இதனால் அரசு சார்பில் செயல்பட்ட மண்டிகள் மூடப்படும். வேளாண் விளைபொருட்களுக்குக் குறைந்தபட்ச விலையை உறுதி செய்யும் பொறுப்பிலிருந்தும், நுகர்வோருக்குக் குறைந்த விலையில் அத்தியாவசியப் பொருட்கள் கிடைப்பதை உறுதி செய்யும் பொறுப்பிலிருந்தும் முற்றிலும் தன்னை விடுவித்துக் கொண்டது பாஜக அரசு. இதனால் சுதந்திரம் பெற்றது விவசாயிகள் அல்ல, தனியார் சந்தைகளே. இதன்

மூலம் விலையை நிர்ணயிக்கும் உரிமை அரசிடமிருந்து விவசாயிகளுக்குச் செல்லவில்லை, அரசின் கையிலிருந்து முற்றிலும் தனியார் கைக்கே சென்றுள்ளது. அரசின் உதவியுடன் விலைநிர்ணயம் செய்யும் அமைப்புமுறை விவசாய விளைபொருட்களுக்குக் குறைந்தபட்ச ஆதார விலை அளிப்பதன் மூலம் தனியார் சந்தைகளின் விலைவீழ்ச்சியிலிருந்து விவசாயிகளைப் பாதுகாத்து வந்தது. இதனை நீக்கும் விதமாகத் தற்பொழுது விவசாய சந்தைகள் முற்றிலுமாகத் தனியார் மயமாக்கப்படுவதால் விலைநிர்ணயம் செய்யும் முற்றுரிமை தனியார் பெருநிறுவனங்களிடம் சென்று விடும். இதனால் ஏற்படும் விலைவீழ்ச்சி விவசாயிகளை மேலும் கடுமையாகப் பாதிக்கும். ஆனால் இது வெறும் விவசாயச் சந்தைப் பிரச்னை மட்டுமன்று, விவசாயச் சந்தைகள் முற்றிலும் தனியார் மயமாக்கப்படுவதால் பொது விநியோக முறையும் முடிவுக்கு வந்து விடும். உணவு கார்ப்பரேசன் விவசாயிகளிடம் குறைந்தபட்ச ஆதார விலை தந்து விவசாய விளைபொருட்களைக் கொள்முதல் செய்வதன் மூலமே பொது விநியோக முறை செயல்பட்டு வந்தது. குடும்ப அட்டைகளின் மூலம் மாதம்தோறும் மலிவு விலையில் உணவுப் பொருட்களைப் பெற்று வாழும் கோடிக்கணக்கான ஏழை எளிய மக்களின் வயிற்றில் மண் வார்க்கவுள்ளது இச்சட்டம்.

விவசாயிகள் (அதிகாரப்படுத்தல் மற்றும் பாதுகாப்பு) விலை உறுதி மற்றும் வேளாண் சேவைகளின் ஒப்பந்த மசோதா, 2020 விவசாயிகள் விற்பனையாளர்களுடன் செய்து கொள்ளும் ஒப்பந்த அடிப்படையில் சாகுபடி செய்யுமாறு விவசாயிகளை நிர்ப்பந்திருக்கிறது. இதனால் நிலத்தில் என்ன உற்பத்தி செய்ய வேண்டும், எவ்வளவு உற்பத்தி செய்ய வேண்டும் என்பதனைத்தையும் தீர்மானிக்கும் அதிகாரம் விவசாயிகளிடமிருந்து விற்பனையாளர்களிடம் செல்கிறது. இதனால் பணப்பயிர்களை சாகுபடி செய்வதே ஊக்குவிக்கப்படும் என்பதால், இந்தியா உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெற்ற நிலை அழிவதற்கும் காரணமாகலாம்.

அத்தியாவசியப் பொருட்கள் திருத்த மசோதாவில், சட்டத் திருத்தத்தின் மூலம் அத்தியாவசியப் பொருட்கள் பட்டியலிலிருந்து வெங்காயம், உருளைக் கிழங்கு, தானியங்கள், எண்ணெய் வித்துக்கள், பருப்பு வகைகள் ஆகியவற்றை உற்பத்தி செய்வதற்கும், அவற்றைத் தனியார் பதுக்கி வைப்பதற்கும் எந்தவிதமான கட்டுப்பாடும் இனிமேல் விதிக்கப்படாது. எனவே பெருமுதலாளிகளும், இடைத் தரகர்களும் பதுக்கி விலையுயர்வை ஏற்படுத்தவும் ஊக வணிகத்தின் மூலம் இடைத்தரகர், பெருவணிகர்களின் இலாபத்தை அதிகப்படுத்தவுமே

வழிவகுக்கும். இந்தியாவில் 70 சதவீதத்திற்கும் மேற்பட்டோர் விவசாயத் துறையையே சார்ந்துள்ளனர். நிறைவேற்றப்பட்ட இம்மூன்று மசோதாக்களாலும் பாதிக்கப்படப் போவது விவசாயிகள் மட்டும் அல்ல, விலைவாசி உயர்வால் நுகர்வோரும் கடுமையாக பாதிக்கப்படவுள்ளனர். இதனால் பொது விநியோக முறை மூடப்பட்டு, இந்தியாவின் உணவுத் தன்னிறைவும், உணவுப் பாதுகாப்பும் அழிக்கப்பட்டு மக்கள் மேலும் வறுமை நிலைக்கு தள்ளப்படும் நிலையே ஏற்படும்.

மார்ச்சிலிருந்து ஜூன் வரை ஒரு கோடிக்கும் மேலான புலம்பெயர் தொழிலாளர்கள் கால்நடையாக வீடுகளுக்குச் சென்றதாக சாலைப் போக்குவரத்துத் துறை அமைச்சர் வி.கே. சிங் சொல்கிறார். ஆனால் எத்தனைப் பேர் இறந்தனர் என்பது குறித்த தரவுகள் அரசிடம் இல்லையாம். புலம்பெயர் தொழிலாளர்களுக்குத் தேவையான உணவு, குடிநீர், மருத்துவ வசதிகள், காலணிகள் வழங்கப்பட்டதாகவும், அவர்கள் ஓய்வு எடுப்பதற்காகத் தனி இடங்கள் அமைத்துத் தரப்பட்டதாகவும். அவர்கள் சொந்த மாநிலம் செல்வதற்குப் பேருந்துப் போக்குவரத்து, இரயில் போக்குவரத்து வசதியும் செய்து கொடுக்கப்பட்டதாகவும் பெரும் பொய்களை அடுக்கிக் கடுமையாகத் துன்புற்று 900க்கும் மேலான புலம்பெயர் தொழிலாளர்கள் இறந்த உண்மையை  மறைத்துள்ளார்.

நூறு நாள் வேலைக்கான வேண்டல் புலம்பெயர் தொழிலாளர்காளின் இடப்பெயர்வால் 38.8% அதிகரித்துள்ளது. ஆனால் இந்தக் குறைந்தபட்ச வேலை உத்தரவாதத்தைக் கூட விரிவுபடுத்துவதில் அக்கறை காட்டவில்லை மத்திய அரசு ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்திற்கான வேலை நாட்களை அதிகரிக்க வாய்ப்பில்லை எனக் கைவிரித்து விட்டார் கிராமப்புற மேம்பாட்டுத் துறை அமைச்சர் நரேந்தர்சிங் தோமர். உழைப்புச் சக்தியின் பங்கேற்பு குறைந்து வேலைச் சந்தை குறுகியதால் வேலையின்மை குறைந்துள்ளதே தவிர புதிய வேலைவாய்ப்புகள் அதிகரித்ததால் அல்ல என்பதையும் இங்கு குறிப்பிட வேண்டும்.

முதலாளிகள் செய்யும் குற்றம் குற்றமாகக் கருதப்படாது ஆனால் தொழிலாளிகளோ செய்யாத குற்றத்துக்குத் தண்டிக்கப்படுவார்கள் எனும் விதத்தில்தான் நிறுவனச் சட்டத் திருத்தமும், தொழிலாளர் சார்ந்த மூன்று சட்ட மசோதாக்களும் நிறைவேற்றப்பட்டுள்ளன. தொழிலாளர் சார்ந்த நான்கு மசோதாக்களையும் ஒரே நேரத்தில் டிசம்பரில் நடைமுறைப்படுத்த உள்ளதாக

அமைச்சர் சந்தோஷ் கங்க்வார் தெரிவித்துள்ளார்.

தொழிலாளர் சார்ந்த மூன்று மசோதாக்கள்: 1. தொழிலக உறவுகள் குறித்த நெறிகள் மசோதா, 2. சமூகப் பாதுகாப்பு நெறிகள் மசோதா, 3. தொழில் பாதுகாப்பு, உடல் நலம், வேலை நிலைமைகள், நெறிகள் குறித்த மசோதா.

தொழிலக உறவுகள் குறித்த நெறிகள் மசோதாவின் படி, 300க்கு குறைந்த எண்ணிக்கையில் பணியாளர்களைக் கொண்ட தொழிலகங்கள் தொழிலாளர் வேலை நிலைகள் குறித்த எந்த நெறிமுறையையும் கடைபிடிக்கத் தேவையில்லை. இதனால் அத்தொழிலாளர்களின் அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டு, பாதுகாப்பற்ற சூழலில் வேலை செய்யுமாறு நிர்பந்திக்கப்பட்டு, உழைப்புச் சுரண்டலை தீவிரப்படுத்தும் நிலை ஏற்படும். 300க்கும் குறைந்த எண்ணிக்கையில் பணியாளர்களை கொண்ட தொழிலகங்கள் வேலைக்கான ஒப்பந்த உத்தரவாதத்தை அளிக்க வேண்டிய அவசியமில்லை. பணியாளர்களை வேலைநீக்கம் செய்யவோ, நிறுவனத்தை மூடவோ அரசிடம் அனுமதி பெறத் தேவையில்லை. தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்வதற்கான உரிமையும் பறிக்கப்பட்டுள்ளது.

தொழில் பாதுகாப்பு, உடல் நலம், வேலை நிலைமைகள் குறித்த நெறி மசோதாவில் புலம்பெயர் தொழிலாளர்களுக்குத் தங்கும் வசதி ஏற்படுத்துவது கட்டாயம் என்ற உத்தரவாதம் நீக்கப்பட்டுள்ளது, அவர்களின் இடப்பெயர்வுக்கான படித்தொகையும் நீக்கப்பட்டுள்ளது.

நிறுவனச் சட்டத்திலும் முதலாளிகள் தொழில் செய்வதை எளிமைப்படுத்தும் விதமாகத் திருத்தங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இச்சட்டத் திருத்தத்தின் படி, சில சட்ட நெறிகளை மீறுவது குற்றச் செயலாகக் கருதப்படாது. உதாரணமாக சட்டத்திற்கு புறம்பான முறையில் பங்குதாரரின் உரிமைகள் மாற்றப்பட்டால் அது குற்றமாகக் கருதப்படாது. சட்டநெறி மீறலுக்கு முன்னர் அளித்து வந்த சிறைத் தண்டனை நீக்கப்பட்டதுடன் அதற்கான அபராதத் தொகையும் குறைக்கப்பட்டுள்ளது. இந்தியப் பெருநிறுவனங்கள் வெளிநாட்டு பங்குச் சந்தைகளில் நேரடியாகப் பட்டியலிடப்பட அனுமதி, பெருநிறுவன சமூக பொறுப்பு நடைமுறைகளின் ஒழுங்குமுறைகள் தளர்த்தப்பட்டுள்ளன.

**<u>பணவீக்கம்:</u>**

ஆகஸ்டு மாத்த்தில் நுகர்வோர் குறியீடு அடிப்படையிலான சில்லறை பணவீக்கத்தின் அளவு 6.73 சதவீதத்திலும், உணவுப் பொருட்களின் விலைவாசி உயர்வு 9.27 சதவீதத்திலும் உள்ளது. பருப்பு வகைகளின் விலைவாசி 14.44 சதவீதமும், காய்கறிகளின் விலைவாசி உயர்வு 11.41 சதவீதமும் அதிகரித்துள்ளது. தமிழ்நாட்டில் பணவீக்கம் 7.06 சதவீதத்தில் உள்ளது.

**<u>ஆகஸ்டில் உற்பத்தி நிலை:</u>**

தொழில் மற்றும் உள்நாட்டு வர்த்தக மேம்பாட்டு அமைச்சகத்தால் வெளியிடப்பட்ட அறிக்கையின் படி, முதன்மைத் தொழில்துறைகளின் உற்பத்தி ஆகஸ்டில் 8.5 சதவீதம் வீழ்ச்சியடைந்துள்ளது; ஏப்ரல் முதல் ஆகஸ்டு வரையிலான காலத்தில் 17.8 சதவீதம் சரிவைக் கண்டுள்ளது. நிலக்கரி மற்றும் உரம் தவிர மற்ற அனைத்துத் துறைகளின் உற்பத்தி வளர்ச்சி எதிர்மறையாக உள்ளது. நிலக்கரி உற்பத்தி 3.6 சதவீதமும், உரவுற்பத்தி 7.3 சதவீதமும் நேர்நிறை வளர்ச்சி பெற்றுள்ளது.சுத்திகரிப்பு பொருட்களின் உற்பத்தி 19.1 சதவீதம் வீழ்ந்துள்ளது, அதற்கு அடுத்தபடியாக சிமெண்ட் உற்பத்தி 14.6 சதவீதமும், இயற்கை எரிவாயு உற்பத்தி 9.5 சதவீதமும், கச்சா எண்ணெய் உற்பத்தி சதவீதமும் 6.3, எஃகு உற்பத்தி 6.3 சதவீதமும், மின்சாரத்துறை 2.7 சதவீதமும் வீழ்ச்சி அடைந்துள்ளன.

**<u>ஜூலையில் உற்பத்தி நிலை:</u>**

புள்ளியியல் அமைச்சகத்தால் வெளியிடப்பட்ட தொழில்துறை உற்பத்திக் குறியீட்டு அறிக்கையின் படி முதன்மைத் துறைகளின் உற்பத்தி 10.4 சதவீதம் வீழ்ச்சியடைந்துள்ளது. அதில் சுரங்கத் துறையில் 13.0 சதவீதமும், செய்பொருளாக்கத் துறையில் 11.1 சதவீதமும், மின்சாரத் துறையில் 2.5 சதவீதமும் வீழ்ச்சி பதிவு செய்யப்பட்டுள்ளது. மருந்துப் பொருட்கள், புகையிலை தவிர மற்ற அனைத்துப் பொருட்களின் உற்பத்தியும் எதிர்மறையாகப் பதிவாகியுள்ளது.

பயன்பாட்டு அடிப்படையிலான வகைப்பாட்டில் உடனடி நுகர்வுப் பொருட்களின் உற்பத்தி 6.7 சதவீதம் உயர்ந்துள்ளது. உடனடி நுகர்வுப் பொருட்களைத் தவிர மற்ற அனைத்துப் பொருட்களின் உற்பத்தியும் எதிர்மறையாக உள்ளது. மூலதனப் பொருட்கள் (22.8 %), முதன்மை பொருட்கள் (10.9%), இடைநிலைப் பொருட்கள் (12.5%), கட்டுமானப் பொருட்கள் (10.6%), நீடித்த

நுகர்வுப் பொருட்கள் (23.6%) ஆகியவற்றின் உற்பத்தியும் வீழ்ச்சி அடைந்துள்ளது.

மேக் இன் இந்தியா திட்டத்தின் மூலம் இந்தியாவிலேயே அனைத்தையும் உற்பத்தி செய்யும் விதமாகத் தொழில்நுட்பத்தை மேம்படுத்தியுள்ளோம், தற்சார்புப் பொருளாதாரத்தை ஏற்படுத்தியுள்ளோம் எனக் கூவி வருகிறது. ஆனால் தரவுகள் அதைப் பொய்யாக்கியுள்ளன. ஒரு நாட்டின் தற்சார்பையும், பொருளாதார வளர்ச்சியையும் நிர்ணயிப்பதாக செய்பொருளாக்கத்துறை உள்ளது. இந்தியப் பொருளாதாரத்தில் இந்த உற்பத்தித் துறையின் பங்கு 2007இல் அதிகபட்சமாக 24.30 சதவீதம் இருந்தது 2019ல் 13.72 சதவீதத்திற்குச் சரிந்து குறைந்தபட்சமாக ஏப்ரல் 2020ல் 66.6 சதவீத வீழ்ச்சியைக் கண்டுள்ளது. இதன் மூலம் பாஜக அரசு ஆட்சிக்கு வந்த பிறகு செய்பொருள் உற்பத்தித் துறை கடுமையாக வீழ்ச்சியடைந்திருப்பதை அறிய முடியும். இது கோவிட்-19 தாக்கத்தின் விளைவு மட்டுமல்ல, கோவிட்-19க்கு முன்பே 2019இல் செய்பொருள் உற்பத்தித் துறையில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. செய்பொருள் உற்பத்தித் துறையினை மேம்படுத்தவோ அல்லது உள்ள நிலையிலாவது காக்கவோ எந்தச் சிறப்பு திட்டங்களும் பாஜக அரசிடம் இல்லை. அந்நிய முதலீடுகளும், தனியார்மயமுமே அனைத்துப் பொருளாதாரப் பிரச்சனைகளுக்குமான சர்வரோக நிவாரணி என பாஜக அரசு கண்மூடித்தனமாக நம்புகிறது. புதுமைகளைப் புகுத்தும் புத்தாக்க நடவடிக்கைகளின் மூலம் தொழில் நுட்பத்தை மேம்படுத்தி நாட்டின் உற்பத்தித் திறனை அதிகரிக்கும் நடைமுறைகளை அனைத்து துறைகளிலும், குறிப்பாக முதன்மையான உற்பத்தித் துறைகளில் மேற்கொண்டால் சிறப்பாக இருக்கும். ஆனால் பாதுகாப்புத் துறையில் மட்டுமே புத்தாக்கத்தையும், 'தற்சார்பையும்' ஊக்குவிக்கும் பாஜக அரசின் அணுகுமுறைகளும், நடவடிக்கைகளும், இந்தியா இஸ்ரேலின் பாதையில் பயணிக்கிறதோ என்ற ஐயப்பாட்டை உறுதிசெய்கிறது. தற்போது ராஷ்ட்ரிய ராகாஷ் இராணுவப் பல்கலைக்கழகத்தை ஏற்படுத்துவதற்கான மசோதா தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்தியாவின் அயலுறவுக் கொள்கைகளில் ஏற்பட்ட தலைகீழ் திருப்பத்தின் வெளிப்பாடாக இராணுவத் தளவாட உற்பத்தியில் இந்தியா-இஸ்ரேல் ஒத்துழைப்பு நடவடிக்கைகள் அமைந்துள்ளன. பாஜக அரசு பாதுகாப்புத் துறையில் அரசின் அனுமதி பெறாமல் செய்யக் கூடிய நேரடி அந்நிய முதலீடுகளுக்கான உச்ச வரம்பை 74 சதவீதமாகத் தளர்த்தியுள்ளது. 74 சதவீதத்திற்கு மேல் முதலீடு செய்யவே அரசின் அனுமதி தேவை என்று நெறிகளை தளர்த்தி அதைத் தற்சார்பென்று கொண்டாடுவதில் துளியேனும் தர்க்கப் பொருத்தம் உள்ளதா?.

## செங்காட்டான் குறிப்புகள்

**<u>வேல் வேல்!</u>**

"தமிழகத்தில் தாமரை மலர்ந்திட வெற்றிவேல் யாத்திரை" நடத்தப் போகிறதாம் பாரதிய சனதா கட்சி. நவம்பர் 6ஆம் நாள் திருத்தணி முருகன் கோயிலிலிருந்து யாத்திரை புறப்படுகிறதாம். ரத யாத்திரை தொடங்கி பாசக நடத்தும் யாத்திரை ஒவ்வொன்றும் வகுப்புவாத வன்முறையைத் தூண்டும் வகையிலேயே அமைந்திருப்பதைக் காரணங்காட்டி வேல் யாத்திரைக்குத் தடை விதிக்க வேண்டும் என்ற கோரிக்கையை விசிக சிபிஎம் உள்ளிட்ட கட்சிகள் எழுப்பியுள்ளன. அரசியல், குடியியல் உரிமைகள் என்ற நோக்கில் இந்தத் தடைக் கோரிக்கையை ஆதரிக்க இயலாது என்றே நினைக்கிறேன். மாறாக பாசக பாசிச மத வெறி அரசியலுக்கு எதிராக மக்களைத் திரட்டுவதில்தான் கவனம் செலுத்த வேண்டும். நேர் எதிரான பகைவர்களைக் கூட அரசு எந்திரத்தைப் பயன்படுத்தி ஒடுக்குவதில் நமக்கு உடன்பாடில்லை. அரசியலை அரசியலால் சந்திப்பதுதான் நெடுங்கால நோக்கில் பயனுள்ளதாக இருக்கும்.

நிற்க, வேல் யாத்திரை செல்வோர் வழியெல்லாம் வேலவனை வேண்டிப் பாடுவதற்கு ஒரு பாடலைப் பரிந்துரைக்கலாம் என நினைக்கிறேன். இது பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் எழுதிய பாடல். 30-12-80ல் திருச்சி வானொலி நிலைய ஒலிபரப்பில் இசைமணி சீர்காழி கோவிந்தராசன் இதனைப் பாடினார்.




**"வேலய்யா - வடி**
**வேலய்யா - உன்னை**
**வேண்டி வந்தேன் - ஒரு**
**வேலையா(ய்)**

**கோலத் திணைப்புனத்தில்**
**ஆலோலம் பாடிய**
**கோதை வள்ளிக் காதலா**

**சாதித் தடை கடந்த (வேலய்யா)**

**ஆறுமுகத்தோடும்**

**ஈராறு கரத்தோடும்**

**ஆடும் மயிலோடும்**

**அணி வெல்லும் வேலோடும்**

**மாறாதுணை வந்து**

**வணங்கும் மனிதர் - சொந்த**

**வாழ்வில் மட்டும் சாதி மயக்கம்**

**வந்ததேனையா?"**

**சரிதானா முருகா? (இந்த முருகன் வேறு முருகன்!)**



**<u>செம்மைக்கு வெற்றி! பெண்மைக்கு வெற்றி!</u>**

அண்மையில் உலகெங்கும் முற்போக்காளர்களுக்கு உவகையும் ஊக்கமும் தந்திருப்பது பொலிவியத் தேர்தலில் குமுகியர்கள் (சோசலிஸ்டுகள்) அடைந்துள்ள வரலாற்றுச் சிறப்பு மிக்க வெற்றி. குமுகியம் நோக்கிய இயக்கம் (Movement Towards Socialism) 52.4 விழுக்காடு வாக்குகள் பெற்று வலதுசாரி இடைக்கால ஆட்சியைத் தோற்கடித்தது. வெற்றி பெற்ற வேட்பாளர் லூயி ஆர்ஸ். அமெரிக்க ஆதரவோடு ஆட்சிக் கவிழ்ப்பு செய்யப்பட்ட ஈவா மொரேல்ஸ் இப்போது நாடு திரும்புகிறார். முதலியம் புவிக்கு அழிவு தரும், குமுகியம் வாழ்வு தரும் என்று அவர் முழங்கியுள்ளார். அமெரிக்க சி ஐ ஏ ஓநாயிடம் எச்சரிக்கையாக இருங்கள் பொலிவியர்களே!



பொலிவிய வெற்றியில் குறிப்பிடத்தக்க ஒரு செய்தி: நாடாளுமன்றத்துக்கு வெற்றி பெற்றிருப்பவர்களில் பாதிக்கு மேற்பட்டவர்கள் பெண்கள்! பெண்மை வெல்கென்று கூத்திடுவாயா பாரதி?

**மனுநீதியை வைத்துத் தோலுரிப்போம்!**

கடந்த செப்டம்பர் 27ஆம் நாள் பெரியார் குறித்த வலையரங்கு ஒன்றில் உரையாற்றிய விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தோழர் தொல். திருமாவளவன் மனுநீதி நூலில் பெண்கள் அனைவரையும் பிறப்பு அடிப்படையில் இழிவுபடுத்திய ஒரு பகுதியை படித்துக் காட்டியுள்ளார். இந்தக் காணொலியை எடுத்துப் போட்டு, திருமாவளவன் பெண்களை இழிவுபடுத்தி விட்டதாக பார்ப்பனிய மண்டுகங்கள் கூச்சலிட்டு வருகின்றன. மனுஸ்மிருத்தி குறித்து விவாதிப்பதை



வரவேற்கலாம். திருமாவளவனின் குற்றாய்வு சரியானது என்றே கருதுகிறோம். கருத்தைக் கருத்தால் சந்திக்க எவர் வேண்டுமானாலும் முன்வரட்டும். அதே போது வழக்குப் பூச்சாண்டி காட்டுவதெல்லாம் எடுபடாது. எச். ராஜா விரல் நீட்டிய பக்க்மெல்லாம் காவல் துறையை ஏவுவது தமிழக அரசுக்கு நல்லதில்லை. மறுபுறம் மனுஸ்மிருத்தியைத் தடை செய்! என்பதை ஒருவகை எதிர்ப்பின் அடையாளமாக் கொள்ளலாமே தவிர, குடியாட்சிய நோக்கிலும் அறிவியல் நோக்கிலும் பொருள் பொதிந்த கோரிக்கையாக்க் கருத முடியாது. இதைத் தடை செய்! அதைத் தடை செய்! இவரைக் கைது செய்! அவரைக் கைது செய்! என்று ஏட்டிக்குப் போட்டியாகக் கோரிக்கை எழுப்புவதைப் பழக்கமாக்குவது நலம்சூழ் அரசியலுக்குக் கேடுதான்!

## இந்தியை எதிர்ப்பது ஏன்? எப்படி?

**தியாகு**

ஐயமே வேண்டாம், இந்தித் திணிப்பை எதிர்ப்பதைத்தான் இந்தியை எதிர்ப்பது என்று சொல்கிறோம். நம் தலையில் ஏறி உட்கார்ந்து நம்மை ஆள நினைக்காத எந்த மொழியையும் எதிர்க்க வேண்டிய தேவை நமக்கில்லை அல்லவா?

சரி, இந்தியை எதிர்ப்பது இந்தி எதிர்ப்பாளர்களாகத் தம்மைக் காட்டிக் கொள்கிறவர்களால் எப்படிப் புரிந்து கொள்ளப்படுகிறது? இந்திய அரசின் தேசியக் கல்விக் கொள்கை-2020 என்பதைத் தமிழ்நாட்டரசு எதிர்ப்பதாக முதலமைச்சர் சொல்கிறார். ஏனென்றால் மும்மொழிக் கொள்கையை ஒருபோதும் ஏற்க மாட்டோம் என்கிறார். அதாவது கல்வி நிலையங்களில் தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளோடு மூன்றாவது மொழியாக இந்தியும் கற்றுத் தரப்படுவதைத்தான் இந்தித் திணிப்பு என்று முதல்வர் புரிந்து கொள்கிறார். அவர் மட்டுமல்ல, தமிழ்நாட்டில் இந்தித் திணிப்பை எதிர்ப்பது என்றால் இந்தி படிப்பதை எதிர்ப்பது என்றுதான் பலரும் புரிந்து கொண்டுள்ளனர்.

மறுபுறம், இந்திக்கு ஆதரவானவர்களும் இந்தியைப் படித்தால் என்ன? என்றுதான் நயமாகக் கேட்கிறார்கள். ஆக இந்தி எதிர்ப்பு என்பதும் இந்தி ஆதரவு என்பதும் இந்தி மொழியைக் கற்பது பற்றிய விவாதமாகச் சுருங்கிக் கிடக்கிறது.

உண்மையில் தமிழ்நாட்டில் இந்தித் திணிப்பும் அதற்கு எதிரான போராட்டமும் வரலாற்று வழியில் தொடங்கியது இந்தி கற்பது தொடர்பான சிக்கலை மையப்படுத்திதான். 1938ஆம் ஆண்டு இராஜகோபாலாச்சாரி தலைமையிலான சென்னை மாகாண அரசாங்கம் இந்திக் கல்வியை நுழைத்த போது அதற்கு எதிராகத் தமிழறிஞர்களும் தந்தை பெரியார் தலைமையிலான சுய மரியாதை இயக்கத்தாரும் நடத்திய போராட்டம்தான் முதல் மொழிப் போர் என்று போற்றப்படுகிறது.

இந்த மொழிப் போராட்டத்தின் உச்சத்தில்தான் 1939 செப்டெம்பர் 11ஆம் நாள் தந்தை பெரியாரும் மறைமலையடிகள், சோமசுந்தர பாரதியார் உள்ளிட்ட தமிழ் அறிஞர்களும் “தமிழ்நாடு தமிழருக்கே!” என்று முழக்கம் தந்தனர். இதன் பொருள் என்ன? மொழிப் போராட்டம் என்பது வெறும் பயில்மொழி (பாட மொழி) தொடர்பானது மட்டுமல்ல, அது மொத்தத்தில் மொழி தொடர்பானது மட்டுமல்ல. இறுதி நோக்கில் அது இனம் தொடர்பானது, தமிழ்க் காப்பு என்பதன் சாறம் தமிழின மீட்பு என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். எளிமையாகச் சொன்னால் இந்தித் திணிப்பை எதிர்த்துத் தமிழ்த் தேசிய இனத்தைக் காக்க வேண்டுமானால் தமிழ்த் தேசிய இறைமையை மீட்க வேண்டும்.

இரண்டாம் மொழிப் போர் என்று போற்றப்படும் 1965ஆம் ஆண்டின் மாணவர்-மக்கள்

எழுச்சி இந்தி ஆட்சிமொழி ஆவது தொடர்பானதே தவிர இந்தி படிப்பது தொடர்பானதன்று. இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 17ஆம் பகுதியில் உறுப்பு 343 இந்தியை இந்தியாவின் அலுவல் மொழி ஆக்குகிறது. அலுவல் மொழி ஆவதாலேயே இந்தி ஆட்சி மொழியும் ஆகி விடுகிறது. இந்தச் சட்டபிரிவை எரிக்கும் போராட்டத்தை திமுக நடத்தியது, மாணவர் தலைவர்களும் அவ்வாறே செய்தனர். போராட்டம் நடைபெற்ற ஐம்பது நாளும் அரசின் கொடிய அடக்குமுறைக்குப் பலியாகி நூற்றுக்கணக்கானோர் மண்ணில் சாய்ந்த பொழுதுகளில் இந்தி ஒழிக! தமிழ் வாழ்க! என்றுதான் மாணவர்களும் மக்களும் முழங்கினார்கள்.

மொழியின் அதிகாரம் என்பது வெறும் மொழியின் அதிகாரம் மட்டுமன்று. மொழி ஒடுக்குமுறை என்பது வெறும் மொழி ஒடுக்குமுறை மட்டுமன்று, அது ஓர் இனத்தின் மீதான தேசிய ஒடுக்குமுறை ஆகும். இந்தியை அரியணை ஏற்றுவதற்கு எதிரான போராட்டம் என்பது இந்தியப் பேரரசின் தேசிய ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டமும், புறநிலையில் தமிழ்த் தேசிய இறைமை மீட்புக்கான போராட்டமும் ஆகும்.

இந்தியை ஏன் எதிர்க்க வேண்டும்? என்பதற்கு தமிழ்நாட்டின் முதல் இரு மொழிப் போர்களும் தந்த இந்த வரலாற்றுப் பாடத்தைக் கற்றுக் கொண்டோமா? நினைவிலாவது கொண்டோமா? மொழிப் போராட்டத்தின் அலைவிளிம்பில் ஏறி 1967 பொதுத் தேர்தலில் காங்கிரசையும் காமராசரையும் தோற்கடித்து ஆட்சிப் பொறுப்பேற்ற திமுக தலைவர் அறிஞர் அண்ணா கல்விக் கூடங்களில் இந்திப் பயில்மொழியை நீக்கினார், அதனைத் தன் ஆட்சியின் வெற்றியடைவுகளில் ஒன்றாகவும் கருதிக் கொண்டார். ஆனால் இந்திய அரசமைப்பின் 17ஆவது பகுதியை நீக்கவோ திருத்தவோ அவரால் ஒன்றும் செய்ய முடியவில்லை. இந்தியையே ஆட்சிமொழியாக உறுதி செய்து ஆங்கிலம் துணை ஆட்சிமொழி என்ற தூண்டில் புழுவை வீசிய சவகர்லால் நேருவின் மோசடியான உறுதிமொழியை வலியுறுத்துவதோடு அண்ணா நின்று கொண்டார்.

1967 தொடங்கி இது வரை தமிழ்நாட்டை 'ஆள்வது' திராவிடக் கட்சிகளே! இந்திய நடுவணரசிலும் அவை மாறி மாறிப் பங்கு வகித்துள்ளன. ஆனால் அரசமைப்புச் சட்டத்தின் இந்தித் திணிப்பு விதிகளை மாற்றவோ தளர்த்தவோ தணிக்கவோ அவை துரும்பையும் கிள்ளிப்போடவில்லை. இந்தித் திணிப்பு என்ற அடிப்படைச் சிக்கலை வெறும் இந்திப் படிப்புச் சிக்கலாகச் சுருக்கி மும்மொழி இருமொழி என்று பசப்பித் தமிழினத்தின் அடிமைநிலையை மறைக்கத்தான் இந்தக் கட்சிகள் பாடுபடுகின்றன.

எதிர்க் கோணத்திலிருந்து அணுகிப் பார்த்தால், இந்தியாவை ஆள்வோர் மும்மொழிக்

கொள்கை என்கிறார்களே, அது என்ன? இனி இந்தியாவின் ஆட்சிமொழிகளாக மூன்று மொழிகள் இடம்பெறுமா? அதற்கேற்ப அரசமைப்புச் சட்டம் திருத்தப்படுமா? இந்தி மட்டுமே ஆட்சிமொழி என்பது ஒற்றை மொழிக் கொள்கை அல்லவா? ஆங்கிலத்தைத் துணைக்கு வைத்துக் கொண்டால் கூட இருமொழிக் கொள்கைதானே?

உச்ச நீதிமன்றத்திலும் உயர் நீதிமன்றங்களிலும் ஆங்கிலம் மட்டும்தான் ஆட்சிமொழி என்று இந்திய அரசமைப்புச் சட்டம் சொல்கிறது. இனி ஆங்கிலத்தோடு இன்னும் இரு மொழிகளைச் சேர்த்து உயர் நீதித்துறையில் மும்மொழிக் கொள்கை கடைப்பிடிக்கப்படுமா? கல்வி மொழியையே எடுத்துக் கொண்டால், இந்தியத் தொழில்நுட்பக் கழகம் (ஐஐடி), இந்திய மேலாண்மைக் கழகம் (ஐஐஎம்). அனைத்திந்திய மருத்துவ அறிவியல் கழகம் (எய்ம்ஸ்) போன்ற கல்விக் கழகங்களில் ஆங்கிலம் மட்டுமே பயிற்று மொழி என்ற நிலை ஒழிக்கப்பட்டு மூன்று பயிற்றுமொழிகள் அறிமுகம் செய்யப்படுமா? தொடக்கக் கல்வியில் தாய்மொழிக் கல்வி, அதுவும் இயன்றவிடத்தே என்பதுதான் தேசியக் கல்விக் கொள்கை - 2020.

எப்படிப் பார்த்தாலும் மும்மொழிக் கொள்கை என்பது ஒரு மோசடியே. ஏற்கெனவே கல்வித் துறையில் கோலோச்சிக் கொண்டிருக்கும் ஆங்கிலத் திணிப்பை உறுதி செய்து, இந்தியையும் வருணதர்மப் பண்பாட்டின் கருவியான சமற்கிருதத்தையும் திணிப்பதுதான் மும்மொழிக் கொள்கையின் நோக்கம். தாய்மொழியை ஓரங்கட்டுவதன் மூலம் அதனை மட்டுமே நம்பியிருக்கும் உழைக்கும் மக்களை, ஒடுக்குண்ட மக்களை ஓரங்கட்டுவதுதான் மும்மொழிக் கொள்கையின் நிகர விளைவாக இருக்கும். இருமொழிக் கொள்கை ஏற்கெனவே இதைத்தான் செய்து கொண்டிருக்கிறது, மும்மொழிக் கொள்கை இன்னும் கூட முனைப்பாக இதையே செய்யும்.

ஒரு பேரம் பேசப்படுகிறது. தமிழர்கள் இந்தி படித்தால் வடவர்கள் தமிழ் அல்லது வேறொரு மொழி படிப்பார்களாம். தமிழர்களிடையே இந்தி படிக்கும் ஆர்வம் எழக் காரணம் உண்டு. ஏனென்றால் இந்தி இந்நாட்டின் ஆட்சிமொழி. ஆனால் இந்திக்காரர்கள் தமிழ் கற்க இப்படியொரு தூண்டுதல் இல்லை. ஏனென்றால் தமிழ் இந்தியாவின் ஆட்சிமொழியன்று. தமிழ்நாட்டிலே கூட முழுமையான ஆட்சிமொழியன்று. இந்தியோ ஆங்கிலமோ படிக்க ஏற்படும் தூண்டுதல் தமிழ் படிக்க ஏற்படாது. சாஸ்திரி பவனில் மட்டுமல்ல, புனித ஜார்ஜ் கோட்டையிலும் கூட தமிழ் தெரியாமலே குப்பை கொட்ட முடியும் என்னும் போது தமிழரல்லாதவர் தமிழ் படிக்க வேண்டிய தேவை எழாது. தமிழர்களுக்கே கூட அந்தத் தேவை தேய்ந்து போய்க் கொண்டிருக்கிறது என்பதே உண்மை.

கல்வித் துறையில் தொடக்க நிலையில் தமிழை ஒரு பயில்மொழியாகக் கொண்டாலே போதும் என்கிற அவலநிலைக்கு நாம் தள்ளி விடப்பட்டுள்ளோம். தமிழே தமிழ்நாட்டின் கல்வி மொழியாக இருக்க வேண்டும், அதுவே அனைத்து நிலைகளிலும் அனைத்து வகைப் படிப்புகளுக்கும் பயிற்றுமொழியாகவும் முதல் பயில்மொழியாகவும் இருக்க வேண்டும் என்ற குறிக்கோள் மெய்ப்படப் பெருந்தடையாக இருப்பது தமிழர்கள் மீதான தேசிய ஒடுக்குமுறையே.

இது எவ்வாறு சமூகநீதிக்கு வேட்டு வைக்கிறது என்பதை விளங்கிக் கொள்ள அண்மைய சான்று ஒன்றைக் காண்போம். மருத்துவக் கல்வியில் அனைத்திந்தியப் பங்கீடு (All India Quota) ஒன்றை உச்ச நீதிமன்றம் ஏற்படுத்தியது; அதில் பட்டியலின மக்களுக்கும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் இட ஒதுக்கீடு வழங்கப்படாதது தெரியவந்து, உயர் நீதிமன்றத்தில் வழக்காடினோம். தமிழ்நாட்டில் தமிழ்வழியில் மட்டுமே மருத்துவக் கல்வி பெற முடியும் என்ற நிலை இருந்திருக்குமானால் அனைத்திந்தியப் பங்கீடு என்ற ஒன்றே வந்திருக்காது அல்லவா? ஆங்கிலவழிக் கல்வியால் பறிபோனது தமிழ் நலன் மட்டுமன்று, சமூக நீதியும்தான்.

இந்தி தமிழ்நாட்டிலும் கூட நாடப்படுவதற்கு அடிப்படை அது ஆளும் மொழியாக இருப்பதே. தமிழ் தமிழ்நாட்டிலேயே கூட நாடப்படாமைக்கு அடிப்படை அது ஆளும் மொழியாக இல்லை என்பதுதான். எங்கும் தமிழ் எதிலும் தமிழ் என்ற முழக்கம் மெய்ப்பட வேண்டுமானால் தமிழ்நாட்டில் தமிழ்நாட்டரசு மட்டுமல்ல, இந்திய அரசும் தமிழில் இயங்கும் நிலை வேண்டும். கீழமை, மேலமை நீதிமன்றங்களில் மட்டுமல்ல, உச்ச நீதிமன்றம் வரை எல்லா நிலைகளிலும் தமிழ் நீதிமொழியாக வேண்டும், கல்வியில் ஆங்கிலமோ இந்தியோ ஆட்சி செய்யாமல் தமிழே ஆட்சி செய்ய வேண்டும். நம் தேவைக்கு ஏற்ப அயல்மொழியை இரண்டாம் பயில்மொழியாகக் கற்கலாம்.

என் மொழியே என்னை ஆளட்டும் என்பது யாருக்கேனும் கலக்கம் தருமானால் அவர்கள் எனக்கே தெரியாமல் என் தலையில் ஏறி அமர்ந்திருப்பவர்களாகத்தான் இருக்க வேண்டும். அவர்களை இறங்கச் சொல்வோம், இறங்க மறுத்தால் இறக்கி விட்டு மறு வேலை பார்ப்போம்.

இந்தியை எதிர்ப்பது, இந்தித் திணிப்பை எதிர்ப்பது ஒரு மொழியைப் படிப்பதற்கான எதிர்ப்பன்று. அது நம் தேசிய இனத்தை அடக்கியாளும் வல்லாளுமையை எதிர்ப்பதாகும். பறிபோன நம் தேசிய இறைமையை மீட்கப் போராடுவதாகும். நன்றி: ***அரண் செய்***

## இந்தியாவில் காலப் பயன்பாடு வெளிப்படுத்தும் பாலினப் பாகுபாடு:

சமந்தா

புள்ளியியல் அமைச்சகத்தால் இந்தியாவில் காலப் பயன்பாடு குறித்த அறிக்கை வெளியிடப்பட்டது. இதற்கான கணக்கெடுப்பு ஜனவரி-டிசம்பர் 2019ல் மேற்கொள்ளப்பட்டது. 1,38,799 வீடுகளில் (கிராமங்களில்: 82,897, நகரங்களில்: 55,902) 4,47,250 நபர்களிடம் (கிராமங்களில்: 2,73,195 நகரங்களில்:1,74,055) பெறப்பட்ட தரவுகளின் அடிப்படையில் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்வின் மூலம் இந்தியர்கள் ஒரு நாளை எவ்வாறு கழிக்கின்றனர், சராசரியாக எத்தனை சதவீதத்தினர் வேலைகளில் ஈடுபடுகின்றனர், எவ்வளவு நேரம் ஈடுபடுகின்றனர் என்ற முடிவுகள் பெறப்பட்டுள்ளன. ஆய்வின் மூலம் பெறப்பட்ட முடிவுகள் பின்வருமாறு: ஊதியமற்ற வீட்டு வேலைகளில் பெண்களில் 81.2 சதவீதத்தினரும், ஆண்களில் 26.1 சதவீதத்தினரும் ஈடுபடுகின்றனர். வீடுகளில் பிறரைப் பராமரிக்கும் வேலைகளில் பெண்களில் 27.6 சதவீதத்தினரும், ஆண்களில் 14.0 சதவீதத்தினரும் ஈடுபடுகின்றனர். ஊதியமற்ற வீட்டு வேலைகளில் சராசரியாகப் பெண்கள் 299 நிமிடங்களும், ஆண்கள் 97 நிமிடங்களும் ஈடுபடுகின்றனர். வீடுகளில் பிறரைப் பராமரிக்கும் வேலைகளில் சராசரியாக பெண்கள் 134 நிமிடங்களும், ஆண்கள் 76 நிமிடங்களும் ஈடுபடுகின்றனர். ஊதியமற்ற தன்னார்வலர், பயிற்சி மற்றும் பிற வேலைகளில் 2.0 சதவீத பெண்களும், 2.7 சதவீத ஆண்களும் ஈடுபடுகின்றனர். ஊதியமற்ற தன்னார்வலர், பயிற்சி மற்றும் பிற வேலைகளில் சராசரியாக பெண்கள் 99 நிமிடங்களும், பெண்களும் 102 நிமிடங்களும் ஆண்களும் ஈடுபடுகின்றனர். ஊதியமுள்ள வேலைகளில் சராசரியாக 57.3 சதவீத ஆண்களும், 18.4 சதவீதப் பெண்களும் ஈடுபட்டு வருகின்றனர். ஊதியமுள்ள வேலைகளில் ஆண்கள் 459 நிமிடங்களும் ( 7 மணி நேரத்திற்கு மேல்), பெண்கள் 333 நிமிடங்களும் ஈடுபடுகின்றனர். 21ஆம் நூற்றாண்டிலும் கூட இந்தியாவில் பெண்களில் 81.2 சதவீதத்தினர் ஊதியமற்ற வீட்டு வேலைகளைச் செய்யும் போக்கு காணப்படுகிறது. பெண்களின் மீது சமூகம் வீட்டுப் பணி, அலுவல் பணி என்ற இரட்டைச் சுமையைச் சுமத்துகிறது. ஒட்டுமொத்த இந்தியாவையும் ஆய்வுக்குட்படுத்தினால் பாலினப் பாகுபாடு இன்னும் அதிகமாகக் கூட இருக்கலாம். பாலினச் சமத்துவம் நோக்கிய பயணத்தில் இந்தியா இன்னும் வெகுதூரம் செல்லவேண்டியுள்ளது என்ற போதிலும், அது உங்கள் வீட்டிலிருந்துதான் தொடங்குகிறது என்பதை ஒரு போதும் மறந்து விடக் கூடாது. வீட்டு வேலைகளை அனைத்துப் பாலினரும் சரிநிகராகப் பங்கிட்டுக் கொள்ளும் நிலையை ஏற்படுத்தி பெண்களை இரட்டைச் சுமையிலிருந்து விடுவிப்போம். பெண்களின் முன்னேற்றத்திற்குத் தடையாக இருக்க மாட்டோம் என உறுதி ஏற்று அதன் படி செயல்படுவோம்.

## அயர்லாந்துக் குடியரசிய சின் பெயின் அமைப்பின் தலைவர்

### தே டால்டன் எழுதுகிறார்:

பாபி சாண்ட்ஸ் குறித்தும் 1981 பட்டினிப் போராட்டம் குறித்தும் சில சொற்கள். பட்டினிப் போராட்டம் பற்றி முதலில் கேள்விப்பட்ட போது எனக்கு 9 வயது. இரண்டாம் பட்டினிப் போராட்டத்தில் பாபி சாண்ட்ஸ் இறந்த போது எனக்குப் பத்து வயது. அந்த நிகழ்ச்சி என் மீது ஆழ்ந்த தாக்கம் கொண்டது. எனக்கு அந்தச் சிறு வயதில் நடந்த ஒரு நிகழ்ச்சி கூட நினைவில் உள்ளது: அயர்லாந்திய நாட்டுப் பண்ணுக்கு நாங்கள் அனைவரும் நின்ற போது பள்ளி முதல்வர் எங்களுக்கெல்லாம் ஒரு செய்தியை அறிவித்தார்: அந்த நேரத்தில் வெறும் நூறு மைல் தொலைவில் இளம் அயர்லாந்தியர்கள் பிரித்தானியச் சிறை ஒன்றில் பட்டினிப் போராட்டம் நடத்தி மடிந்து கொண்டிருக்கின்றார்கள் என்ற செய்தி! நாட்டுப் பண்ணுக்காக நின்று கொண்டிருந்த போதே அந்த நினைவுகள் தலைக்குள் நுழைந்து அலைமோதின. அந்த உணர்வு, அந்த மனக் கொதிப்பு இப்போதும் நினைவுள்ளது. அந்த நிகழ்வுகள் எல்லாம், குறிப்பாக பாபி சாண்ட்சும் அவருடைய ஒன்பது தோழர்களும் இறந்து போனது என் மீது ஆழ்ந்த தாக்கம் கொண்டதோடு, என் அரசியல் சிந்தையிலும் அளாவல் கொண்டது. நானே பெரிதும் குடியரசியக் கொள்கை கொண்ட குடும்பத்தில் பிறந்து அயர்லாந்திய வரலாற்றில் ஆழ்ந்த அக்கறையை வளர்த்துக் கொண்டவன் என்றாலும், இந்த நிகழ்ச்சி எனக்கும் என் வளர்ச்சிக்கும் வித்தாயிற்று.



அப்படித் தொடங்கிய என் அரசியல் ஆர்வம் என் பதின்ம வயதுகள் ஏறிச் சென்ற போது தொடர்ந்து வளர்ந்து செழித்தது. அயர்லாந்திய வரலாற்றிலும் என்னைச் சுற்றி நடப்பவற்றிலும் மென்மேலும் மூழ்கலானேன், இறுதியில் குடியரசியர்களுடன் இணைந்து, நானே குடியரசியச்



செயற்பாட்டாளன் ஆகி விட்டேன். ஆம், 1981ஆம் ஆண்டுப் பட்டினிப் போராட்டம் அயர்லாந்தில் பெரும் விளைவு கொண்டது. அது நெடுந்தாக்கம் உண்டுபண்ணிய நிகழ்ச்சிகளில் ஒன்றாயிற்று.

இது அரசியல் போராட்டம் அன்று, தேசிய விடுதலைப் போர் அன்று, வெறும் குற்றத் தொழிற்பாடுதான் என்ற பிரித்தானியரின் வாதத்தை மறுப்பதே பாபி சாண்ட்சும் அவர்தம் தோழர்களும் நடத்திய போராட்டத்தின் இறுதி நோக்கம் எனக் கொள்கிறேன். குடியரசியச் சிறைக் கைதிகளின் அரசியல் தகுநிலையை அகற்றி, அவர்கள் அரசியல் கைதிகள் என்பதை மறுத்து, அவர்களைக் குற்றவாளிகளாகக் கருதுவது பிரித்தானிய அரசின் நோக்கங்களில் ஒன்று. இப்படிச் செய்வதன் மூலம் விரிவான போராட்டத்தைக் குற்றச் செயலாகக் கருதச் செய்வது அதன் நோக்கம். பாபி சாண்ட்சும் அவர் தோழர்களும் இதை ஏற்க மாட்டார்கள் என்பதில் ஐயமில்லை. அயர்லாந்தில் முன்பே 1917ஆம் ஆண்டு தொடங்கிப் பட்டினிப் போராட்டங்கள் நடந்துள்ளன. அயர்லாந்தியக் குடியரசியர்கள் பலர் இதே அரசியல் தகுநிலை உரிமைக்கான பட்டினிப் போராட்டத்தில் உயிர் கொடுத்தனர்.

ஆகவே 1981ஆம் ஆண்டு பாபி சாண்ட்சும் அவர் தோழர்களும் பட்டினிப் போராட்டம் தொடங்கிய போது, இது தங்கள் சாவு வரை செல்லக் கூடும் என்பதை நன்கறிந்தே தொடங்கினார்கள். வருந்தத்தக்க முறையில் அவர்களில் 10 தோழர்கள் இறந்தே போயினர். பாபி சாண்ட்ஸ் பொதுமக்களின் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதால் போராட்டத்தின் அரசியல் தன்மை மேலும் அழுத்தம் பெற்றது. 1981 ஏப்ரல் மாதம் நடைபெற்ற அந்தப் புகழார்ந்த இடைத் தேர்தலில் 30,000த்துக்கு மேல் வாக்குகள் பெற்று அவர் வெற்றி பெற்றார். சாண்ட்ஸ் இப்போது

நாடாளுமன்றப் பிரதிநிதி ஆகி விட்டார், இது ஓர் அரசியல் போராட்டம் என்ற உண்மையே மீண்டும் அழுத்தம் பெற்றது என்பதை நான் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

அவர்கள் அடிப்படையிலேயே அரசியல் கைதிகள்; இவ்வளவு காலமும் அவர்கள் சொல்லிக்கொண்டிருந்ததையே இது உறுதி செய்தது. பாபி சாண்ட்சும் கீரன் தோகர்த்தியும் நாடாளுமன்றப் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட போதிலும் பட்டினிப் போராட்டத்தில் சாக விடப்பட்டார்கள், இது பாரிய குற்றங்களில் ஒன்று, எமது நாட்டில் பொதுமக்களின் பிரதிநிதிகளைக் கூட சாக விடுவார்கள் என்பது பிரித்தானிய அரசு செய்த பல குற்றங்களில் ஒன்று. இறுதியில் பிரித்தானிய அரசு அவர்கள் உண்மையில் அரசியல் கைதிகளே என்பதை ஏற்றுக் கொண்டு 'எச்' சிறைக் கொட்டடிகளுக்கு அரசியல் தகுநிலையை மீட்டளிக்க வேண்டியதாயிற்று.

ஆக, இக்காரணத்தால், 1981 என்பது முகன்மையானது, அயர்லாந்திய வரலாற்றில் ஓர் உச்சப் புள்ளியாகத் திகழ்வது. அது அயர்லாந்திய மக்களின் ஒரு முழுத் தலைமுறையையும் அரசியலாக்கி, அந்த நாட்டின் ஒரு பகுதியை பிரித்தானியர் வன்கவர்வு செய்து வைதிருப்பது வருத்தத்துக்குரிய வரலாறு மட்டுமன்று, நாளது வரை தொடரும் மெய்ந்நடப்பின் பகுதியும் ஆகும் என்பதை அவர்களுக்கு நினைவூட்டவும் செய்தது. இன்றளவும் அயர்லாந்தில் அரசியல் கைதிகள் உள்ளனர்.

மேலும், நான் தமிழ் மக்களுக்குத் தோழமை தெரிவிக்க விழைகிறேன். ஆண்டுக் கணக்கிலும் பத்தாண்டுக் கணக்கிலும் அயர்லாந்தியக் குடியரசியர்கள் தமிழ்மக்களின் போராட்டத்தை உற்றுக் கவனித்து வருகின்றார்கள். இந்நாள் வரைக்கும் இதுவே தொடர்கிறது. உறுதியாகத் தமிழ் மக்களுக்கு இன்றும் துணை நிற்போம்! தேசிய இறைமைக்கும், விடுமைக்கும் தன்னாட்சிக்குமான உரிமைக்குத் துணைநிற்போம்!

சமந்தா

## கியூபாவின் புரட்சிப் பெண்கள் (8):

## பாஸ்டொரிடா நியுனெஸ் கோன்சலஸ்:

1921 ஏப்ரல் 27ஆம் நாள் ஹவானாவில் உள்ள மரியானோவின் பொசிடோஸில் பாஸ்டொரிடா நியுனெஸ் கோன்சலஸ் பிறந்தார். ஐந்து வயதிலேயே தன் தாயை இழந்து விட்டார். 1933 ஆகஸ்டில் நியுனெஸ், தன் பன்னிரண்டாவது வயதில், அதிபர் ஜெரார்டோ மச்சாடோவின் சர்வாதிகாரத்திற்கு எதிரான ஆர்ப்பாட்டத்தில் தனது தந்தையுடன் பங்கேற்றார். இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு அவர் கியூப மக்கள் கட்சியின் (ஆர்த்தடாக்ஸ்) தலைவரான எட்வர்டோ சிபஸை சந்தித்துள்ளார்.



நியுனெஸ் ஆர்த்தடாக்ஸ் கட்சியில் இணைந்து 1940களில் தீவிரமாக செயல்பட்டார். பின்னர் ஜூலை 26 இயக்கத்தில் இணைந்தார். மார்த்தியின் கொள்கைகளில் பற்றுறுதி மிக்கவரான நியுனெஸ், மார்த்தி பெண்கள் முன்னணியை நிறுவினார். ஜூலை 26 இயக்கத்தின் ஆபத்தான தலைமறைவு வேலைகளை நியுனெஸ் மேற்கொண்டார். ஏப்ரல் 1958ல் நடைபெற்ற வேலைநிறுத்தப் போராட்டத்தை ஒருங்கிணைத்தார். வேலைநிறுத்தம் தோல்வியடைந்த போது, லா பிளாட்டாவில் உள்ள கெரில்லாப் போராளிகளின் தலைமையகத்திற்கு அவர் பாதுகாப்புக்காக மாற்றப்பட்டார். அதன் பிறகு சியரா மேஸ்ட்ராவில் கிளர்ச்சிப் படையில் சேர்ந்தார். முகாம் சுத்தம் செய்தல், சீருடைகள் தைத்தல் போன்ற அனைத்துப் பணிகளும் செய்தார். போர்ச் செலவுகளுக்கான வரி திரட்டும் பணியும் அவருக்கு அளிக்கப்பட்டது. அவர் இரசீதுகளுடன் ஆவணப்படுத்தி 4 மில்லியன் கியூப பெசோக்கள் திரட்டினார்.

புரட்சியின் வெற்றிக்குப் பிறகு 1959 பிப்ரவரியில் உருவாக்கப்பட்ட தேசிய சேமிப்பு மற்றும் வீட்டுவசதி அமைப்பின் இயக்குநராக நியுனெஸ் நியமிக்கப்பட்டார். அதன் மூலம் நாடு முழுவதும் குடிமக்களுக்கு வீடுகள் கட்டித் தரும் பணியில் பெரும்பங்காற்றினார்.

விடுதலைப் போராட்டத்தில் புரட்சியின் வெற்றிக்காக ஆபத்து நிறைந்த அசாதாரணப்

பணிகளைத் திறம்பட நிறைவேற்றியதன் காரணமாக, இராணுவத்தில் அவர் முதல் லெப்டினன்ட் பதவி வகித்தார். தன் இளமைக் காலத்தில் கொண்டிருந்த அதே உறுதியுடன் ஓய்வு பெறும் வரை மற்ற முக்கியப் பணிகளைத் தொடர்ந்தார். 2000ஆம் ஆண்டில், அவருக்குத் தேசிய தொழிலாளர் தலைவர் விருது வழங்கப்பட்டது.

2010 டிசம்பர் 26ஆம் நாள், மூளை இரத்தக்கசிவால் பாதிக்கப்பட்டு உயிரிழந்தார். அவரது உடல் தகனம் செய்யப்பட்டு இறுதிச் சாம்பல் கிழக்கு ஹவானாவில் உள்ள காமிலோ சியென்ஃபுகோஸ் ரெபார்டோ நுழைவாயிலில் உள்ள தேசிய தலைவர் ஹொசே மார்த்தியின் சிலையை சுற்றிலும் தூவப்பட்டது.

## அசெலா தெ லாஸ் சந்தோஸ் தமயோ:



1929 செப்டம்பர் 10ஆம் நாளில் பிறந்தார் அசெலா தெ லாஸ் சந்தோஸ் தமயோ. அவர் வில்மா எஸ்பான் மற்றும் ஃபிராங்க் பயஸ் ஆகியோரின் நெருங்கிய நண்பராகவும் இருந்தார்.

சந்தோஸ் தமயோ, கிழக்குப் பல்கலைக்கழகத்தில் மாணவர் போராட்டங்களில் கலந்து கொண்டார், 1952 மார்ச் 10ஆம் நாள் ஆட்சிக் கவிழ்ப்புக்கு எதிரான போராட்டங்களில் தீவிரமாக பங்கேற்று சக போராளிகளுடன் கைது செய்யப்பட்டார். அவர் ஃபிராங்க் பயஸுடன் இணைந்து செயல்பட்டார். ஃபிராங்க் பயஸ் தலைமையில் ஜூலை 26 இயக்கத்தில் இணைந்த குழுவில் அவரும் இருந்தார். மன்கடா தாக்குதலில் இருந்து தப்பியவர்களுக்கு அனைத்து சாத்தியமான வழிகளிலும் உதவுவதற்கான புரட்சிக் குழுவுடன் இணைந்து செயல்பட்டார். சந்தோஸ் தமயோ 1954ஆம் ஆண்டு கல்வியியலில் முனைவர் பட்டம் பெற்றார்.

சந்தோஸ் தமயோ 1956 நவம்பர் 30ஆம் நாள் சாண்டியாகோவில் நடந்த எழுச்சியில் பங்கேற்றார். பிறகு சியரா மேஸ்ட்ராவில் கெரில்லாப் போராளிகளுடன் இணைந்து

போராட்டத்தில் ஈடுபட்டார். 1958 ஆகஸ்டில் தளபதி ரவுல் காஸ்ட்ரோ தலைமையிலான பிராங்க் பயஸ் இரண்டாம் கிழக்கு முன்னணிப்படையில் சேர்ந்தார். முதல் கிழக்கு முன்னணிப் படைக்குத் தேவையான ஆயுதங்கள், சீருடைகள் மற்றும் மருந்துகளை வழங்கினார். 1958ஆம் ஆண்டில் (ஜனவரி-ஆகஸ்ட்), புரட்சிகரப் பெண்கள் குழுவுடன் சேர்ந்து, மியாமிக்கும் கியூபாவிற்கும் இடையில் தொடர்ச்சியான பயணங்களை மேற்கொண்டு ஆடைகளில் மறைத்து ஆயுதங்கள் கடத்தினார்.

**<u>கல்விப் பணி:</u>**

இரண்டாம் கிழக்கு முன்னணியில் கல்வித் துறையை இயக்கும் பொறுப்பும் சந்தோஸ் தமயோவுக்கு வழங்கப்பட்டது. பாத்திஸ்டாவின் கொடுங்கோன்மையால் மூடப்பட்ட பள்ளிகளை மீண்டும் திறப்பதிலும் முதல் தேசிய எழுத்தறிவுப் பிரசாரத்திலும் சந்தோஸ் தமயோ முக்கியப் பங்காற்றியுள்ளார். அவரது தலைமையில் குழந்தைகளுக்காக 400க்கும் மேற்பட்ட பள்ளிகள் உருவாக்கப்பட்டன பல்வேறு முகாம்களில் உள்ள போராளிகளின் எழுத்தறிவுக்காகவும் குழுக்கள் உருவாக்கப்பட்டன. புரட்சி வெற்றி பெறும் வரை அவர் கிழக்கு மாகாணக் கல்விக் கண்காணிப்பாளராகச் செயல்பட்டார்.

புரட்சியின் வெற்றிக்குப் பிறகு அவர் முக்கியமான நிர்வாக பொறுப்புகளில் ஈடுபட்டார். கியூப கம்யூனிஸ்ட் கட்சியின் நிறுவனராகவும், மத்தியக் குழு உறுப்பினராகவும் செயல்பட்டார். 1960ஆம் ஆண்டில் கியூப மகளிர் கூட்டமைப்பையும் அதன் தேசியச் செயலகத்தையும் உருவாக்குவதில் வில்மாவுடன் இணைந்து பணியாற்றினார், அதன் அமைப்பாளராகவும் பின்னர் 1966ஆம் ஆண்டு வரை பொதுச் செயலாளராகவும் பணியாற்றினார். அதன் பிறகு புரட்சிகர ஆயுதப்படைகளின் அமைச்சகத்தின் காமிலோ சீன்ஃபுகோஸ் இராணுவப் பள்ளியின்

தலைவராகவும், கல்வி இயக்குநரகத்தின் தலைவராகவும் பொறுப்பு வகித்தார். சந்தோஸ் தமயோ தளபதியாகப் பதவி உயர்வும் பெற்றார்.

1970ஆம் ஆண்டில் சந்தோஸ் தமயோ கல்வி அமைச்சகத்தின் அமைச்சராகவும், ஆசிரியர் பயிற்சித் துறையின் பொது இயக்குநராகவும் நியமிக்கப்பட்டார். அவர் புரட்சிகர இராணுவப் படையின் வரலாற்று அலுவலகத்தின் ஆய்வாளராகவும் பணியாற்றினார். கியூபப் புரட்சிப் போராளிகள் அமைப்பின் தேசியத் தலைமையகத்தின் உறுப்பினராகவும் செயல்பட்டார். கியூபாவின் புரட்சிகரக் கல்வியமைப்பின் நிறுவனராக முக்கியப் பங்காற்றியுள்ளார். 2018 ஜனவரி 15ஆம் நாள் கியூபாவின் கல்வியாளர் கூட்டமைப்பு சந்தோஸ் தமயோவுக்கு தேசியக் கல்வியியல் விருது அளித்து சிறப்பித்தது. கியூபாவின் நாயகியாக போற்றப்படும் அவர் அனா பெடன் கோர்ட் விருது, மரியானா கிராஜலஸ் விருது உட்பட பல்வேறு விருதுகளால் சிறப்பிக்கப்பட்டார்.

கியூபாவின் சிறந்த கல்வியாளராகவும் புரட்சியாளராகவும், செயல்பட்ட அவர் 2020 ஜனவரி 23ஆம் நாள் தனது 90ஆம் வயதில் ஹவானாவில் காலமானார். அவரது விருப்பத்திற்கு இணங்க, அவரது உடல் தகனம் செய்யப்பட்டு சாண்டியாகோவில் உள்ள ஃபிராங்க் பயஸ் இரண்டாம் முன்னணிக்கான கல்லறையில் அடக்கம் செய்யப்பட்டது.

கியூபப் புரட்சிக்காக அயராது பாடுபட்டுத் தங்கள் வாழ்வை அர்ப்பணித்த வீராங்கனைகளான நியுனெஸ் கோன்சலஸையும், சந்தோஸ் தமயோவையும் என்றென்றும் போற்றிடுவோம்.

(தொடரும்)

## ஒரு கூர்வாளின் நிழலில்

# தமிழினி அக்கா!



### தோழர் அமரன்:

இலங்கையின் வடக்கே கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பரந்தனில் தாய் சின்னம்மா, தந்தை சுப்பிரமணியம் தம்பதிகளுக்கு மூத்த மகளாகப் பிறந்தவர் தமிழினி (சிவகாமி ஜெயக்குமரன்). 1991இல் இந்துமகா வித்தியாலயத்தில் படித்துக் கொண்டிருந்த பொழுது தமீழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இணைந்து போராளியானார். இளம் வயதிலேயே பல போர்க்களங்களில் சமராடிய அனுபவங்களோடு, பின்னாளில் விடுதலைப் புலிகளின் அரசியல் துறை மகளிர் பிரிவுப் பொறுப்பாளராகச் செயல்பட்டவர். விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன், அன்ரன் பாலசிங்கம், அடேல் பாலசிங்கம் உட்படப் புலிகள் இயக்கத்தின் உயர்மட்டத் தலைவர்களிடத்திலும், மக்களிடத்திலும் அபிமானம் பெற்ற தலைவராக விளங்கியவர்.

அந்தக் காலகட்டத்தில் நடைபெற்ற பல்வேறு உயர்மட்;டச் சந்திப்புகளிலும் இயக்க அரசியல் நிகழ்வுகளிலும் பங்கேற்றவர். சர்வதேச மற்றும் உள்நாட்டுத் தலைவர்களிடமும் பிரதிநிதிகளிடமும் நன்கு பரிச்சயமானவர். புலிகளின் போர்த் தோல்வியை அடுத்துப் பல்லாயிரக்கணக்கான போராளிகளுடன் இலங்கை அரசின் சிறைச்சாலைகளிலும் புனர்வாழ்வு முகாமிலும் நான்காண்டுகள் அடைபட்டிருந்து 2013இல் விடுவிக்கப்பட்டதும் திருமணம் செய்து கொண்டார். புற்றுநோயால் அவதியுற்ற தமிழினி 2015இல் மரணமடைவதற்கு சில மாதங்களுக்கு முன்பு "ஆயிரக்கணக்கான போராளிகளின் தீரம் மிகுந்த உயிர் அர்ப்பணிப்புகளின் மூலமும், இலட்சோபலட்சம் மக்களது பேராதரவுடனும் கட்டியெழுப்பப்பட்ட ஒரு போராட்ட இயக்கம் ஏன் தோற்கடிக்கப்பட்டது என்பதற்கான உண்மையான காரணங்கள் வெளிக்கொணரப்பட வேண்டும் என்பதற்காக" புலிகளின் தோல்வியிலிருந்து தான் கற்றுக்கொண்ட போராட்ட அனுபவங்களையும் புதிய சிந்தனைகளையும் தன் சாட்சியாக 'ஒரு கூர்வாளின் நிழலில்' என்னும் தலைப்பில் ஒரு நூலாகப் படைத்தளித்துள்ளார். தமிழினி இவற்றினூடே தன் இயக்க அனுபவங்களையும் விமர்சனத்துக்கு உள்ளாக்குகின்றார். விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்த முக்கியமான தலைவர்கள் வேறு எவரும் தம் இயக்கத்தைப் பற்றி இவ்வளவு நேர்த்தியாக சுயவிமர்சனம் செய்யாதிருக்கும் நிலையில், தமிழீழ விடுதலைப் புலிகள்

அமைப்பைச் சேர்ந்த பெண் போராளியொருவரின் முதல் சுயசரிதை என்பதால் தமிழினியின் இந்நூல் வாசிப்பின் வழி முக்கியத்துவம் பெறுகின்றது. சிலர் எழுதியிருப்பினும், அவையெல்லாம் இயக்கத்தின் வீர வரலாற்றையும், வெற்றியையும் முன்னிலைப்படுத்தும் படைப்புகளாகவே அமைந்துள்ளன.

தமிழினியின் ‘ஒரு கூர்வாளின் நிழலில்’ என்னும் சுயசரிதை நூல் பலத்த வாதப்பிரதிவாதங்களைக் கிளப்பினாலும், தமிழிலக்கிய உலகில் முக்கியமானதொரு நூலாகத் தன்னை நிலைநிறுத்திக்கொண்டுள்ளது. மேலோட்டமாகப் பார்த்தால், இயக்கம் பற்றிய தமிழினியின் விமர்சனங்கள் காரசாரமாக இல்லாதிருப்பது போல் தோன்றினாலும், சற்று ஆழ்ந்து நோக்கினால் மிகவும் கடுமையான விமர்சனங்கள் பொதிந்திருப்பது தெரியவரும். விடுதலைப் புலிகளின் தலைவரை மதிப்புடன் குரிப்பிடுகின்றார், அவரைத் தனிப்பட்ட முறையில் விமர்சிக்கவில்லை எனினும், தமிழினி அவர்கள் கொள்கையளவில் விடுதலைப் புலிகளின் அமைப்பையும், அது கடைப்பிடித்த வழிகளையும் விமர்சித்திருக்கின்றார்.

அந்த அமைப்பில் போராடி, இறுதியில் நிராதரவாகக் கைவிடப்பட்டு, இராணுவத்திடம் சரணடைந்து, சிறை வாழ்க்கை, தடுப்பு முகாம் வாழ்க்கை, புனர்வாழ்வு எனப் பல்வேறு பரிமாணங்களின் வழிச்சென்று மீண்டும் சமூகத்திற்குள் நுழைந்த இவரைச் சமூகம் எதிர்கொண்ட விதம் அதிர்ச்சியூட்டுகின்றது. இந்நிலையில் அவரது வாழ்க்கை அனுபவங்களின் அடிப்படையில் தமிழினி என்னும் பெண் போராளி ஒருவர் மனந்திறந்த நிலையில் தன் வாழ்வில் நடந்தவற்றை ஆராய்ந்து முடிவுக்கு வருவதற்கும் தன் சிந்தையில் நினைத்தவாறு கூறுவதற்கும் முழு உரிமையுள்ளது. அவரது கருத்துகளை வாசிப்பு வெளியில் வீற்றிருப்பவர்கள் ஏற்கலாம் அல்லது ஏற்காமலும் இருக்கலாம்.

தமிழினி தன் சுயசரிதையில் தான் ஏன் விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் தலைமையின் கீழ் ஆயுதம் தாங்கிப் போராடப் புறப்பட்டேன் என்பதிலிருந்து, 2009இல் முள்ளிவாய்க்காலில் யுத்தம் முடிவுக்கு வந்ததையும், அதன் பின்னரான தடுப்புமுகாம், புனர்வாழ்வு முகாம் போன்ற அனுபவங்களையும், சிறை வாழ்வின் பின்னர் தன் கடந்த கால வாழ்க்கையினை மீளாய்வு செய்தது வரை தன்னிலைகளைப் பல பரிமாணங்களில் விவரித்திருக்கின்றார். இந்நூலில் தமிழினி தன் குடும்பம், பள்ளி வாழ்க்கை, தான் பிறந்த நகரம் எவ்வாறு போர்க்களமாக மாறுகின்றது, தான் இணைந்த இயக்க வாழ்க்கையின் புரிதல், இயக்கத்திலிருந்த அரசியல் மற்றும் ஆயுதப் போராளிகளின் நிலைகள், விடுதலைப் புலிகளின்

வெற்றிகரமான போர்களில் ஈடுபட்ட தனது வாழ்வனுபங்கள், யுத்தத்தின் இறுதிக்கால இயக்கத்தின் நிலை, மக்களின் நிலை எனப் பல்வேறு விதமான அனுபவங்களினூடே யுத்தத்தின் பின்னரான தன் வாழ்வின் முக்கிய நிகழ்வுகள் அனைத்தையும் பெருமளவு இந்நூலில் விவரித்திருக்கின்றார். மிகுதியான பக்கங்களை உடைய பெரிய அளவிலான நூல் என்றில்லா விட்டாலும், அத்தியாயம் ஒவ்வொன்றுமே விரிவான தகவல்களை உள்ளடக்கியதாக அமைந்துள்ளது.

அந்த வகையில் கட்டுக்கோப்பானதொரு சுயசரிதையாக இயற்றப்பட்டிருக்கும் இந்நூல், உலகளாவிய பெண் சுயசரிதைப் படைப்புகளினூடே முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுவதோடு, தமிழினியின் எழுத்தாற்றல் இலக்கியச் சிறப்புமிக்கதொரு இடத்தில் அவரை இந்நூலின் வழியாக நிலைநிறுத்தியுள்ளது.

தமிழினி தன் அறிவுக்கும், ஆளுமைக்கும் உட்பட்டு தான் அறிந்த தகவல்கள் மற்றும் தரவுகளை அடிப்படையாக வைத்து தான் இயற்றிய நூலினை ‘ஒரு கூர்வாளின் நிழலில்’ என்னும் தலைப்பில் ஒரு போராளியாக நேர்மையாகப் பதிவு செய்திருக்கின்றார். தான் சார்ந்த செயற்பாடுகளில் ஏற்பட்ட தவறுகளைக் கூட தலைமையின் தலையில் ஏற்றித் தன்னைக் காப்பாற்றிக் கொள்ள ஒருபோதும் அவர் நினைத்ததில்லை.

“போராட்டத்தை முழுவதுமாகத் தன்னகப்படுத்திக் கொண்ட விடுதலைப்புலிகள் இயக்கத்தில் நானும் ஓர் உறுப்பினராக இருந்தேன். போராட்டத்தின் இறுதி இருபது வருடங்கள் நானும் ஒரு சாட்சியாகப் போருக்குள்ளே வாழ்ந்திருக்கிறேன். **போராளிகளான நாங்கள் எமது மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளைக் காப்பாற்றத் தவறி விட்டோம். கையிலெடுத்த ஆயுதங்களைக் பாதுகாத்துக் கொள்வதற்காக எமது அரசியல் இலட்சியத்தைத் தோற்கடித்து விட்டோம்**" எனக் கூறுவதிலிருந்து நடந்தவற்றுக்கான அனைத்திலும் தனக்கும் பங்கிருப்பதை ஒரு பொறுப்புணர்வவோடு ஆரம்பத்திலேயே ஏற்றுக்கொண்டுதான் தன் சுயசரிதையைத் தொடர்கின்றார். அதற்காக வருத்தமும் அடைகின்றார்.

எனவே, தமிழினி ஒரு போராளியாகத் தனது நூலில் அனைத்தையும் நேர்மையாகப் பதிவு செய்திருக்கின்றார் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை.

அதே நேரத்தில் இயக்கத்தின் எழுச்சிக் காலங்களில் எவரும் இயக்க நடவடிக்கைகளை

எதிர்த்துக் கேட்கும் பூரண சுதந்திரம் பெற்றிருந்ததாகத் தான் அறியவில்லை எனத் தமிழினி தன்நூலில் ஆங்காங்கே குறிப்பிட்டிருக்கின்றார். சில சமயங்களில் தன்னால் இயக்கத் தலைமையின் முடிவுகளை ஏற்க முடியா விட்டாலும், இயக்கக் கொள்கையை தான் ஏற்றுக்கொண்டதால் எந்நிலைமையிலும் இயக்கத்திற்காக அமைதியாகச் செயற்பட்டதையும் சுட்டிக்காட்டுகிறார். மேலும், தமிழினி தனது நூலில் விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும் மக்களுக்குமிடையே அதிக முரண்பாடுகளை ஏற்படுத்திய கட்டாய ஆட்சேர்ப்பு நிலை பற்றிக் குறிப்பிடும் பொழுது தனது எதிரான கருத்துகள் காரணமாகத் தன்னை வேறு துறைக்கு மாற்றியதாகக் குறிப்பிடுகின்றார்.

சமாதானக் காலகட்டத்தில் விடுதலைப்புலிகளின் ஆட்பற்றாக்குறையைத் தீர்ப்பதற்காகச் செயற்படுத்தப்பட்ட 'கட்டாய ஆட்சேர்ப்பு' போராளிகளுக்கிடையில் விமர்சனங்களையும் முரண்பாடுகளையும்" ஏற்படுத்தியதாகக் கூறுகின்றார்.

அத்துடன் "தலைவர் எடுத்த மிகத் தவறான முடிவுகளில் முக்கியமானது கட்டாய ஆட்சேர்ப்பு என்பது என் நிலைப்பாடு, இந்தக் காரியத்தில் சூழ்நிலைக் கைதிகளாகப் பல போராளிகளும், பொறுப்பாளர்களும் மன விருப்பின்றியே செயற்பட்டுக் கொண்டிருந்தனர்" என்றும் தமிழினி கூறுகிறார். இந்தச் செயல்பாடுகளில் மட்டும் இவரது முரண்பட்ட கருத்துநிலை காரணமாக அரசியல்துறை மகளிர் பொறுப்பாளராக மற்றொரு பெண் போராளி தன் இடத்தில் நியமிக்கப்பட்டதாகவும் தமிழினி குறிப்பிடுகின்றார்.

தமிழினி தன் படைப்பின் வழி கூறப்பட்டுள்ளவற்றில் எவையெவை உண்மை என்பதனை நாம் பெரிதாக ஆராயத் தேவையில்லை. அதேநேரத்தில், அவர் கூறாத விசயங்களைச் சுட்டிக்காட்டி அவற்றுக்கு எதிராக உண்மையான ஆதாரங்கள் இருப்பின் தமிழினி ஏன் எழுதவில்லை என்று கேட்பதில் எந்த அர்த்தமுமில்லை. ஏனெனில் தன் வாழ்க்கையையே மக்களுக்காக ஒப்படைத்துக் கொண்ட ஒரு பெண் போராளியின் நேர்மையான உணர்வுகளை அது கொச்சைப்படுத்துவதாக அமைந்து விடும்.

தன் வாழ்வில் பல்வேறு அவமானங்களை, துயரங்களை, தோல்விகளை அடைந்திருந்த நிலையிலும் தான் யாருக்காகப் போராடினாரோ அம்மக்கள்மீது கொண்டிருந்த பற்றினால் உடல்நிலை ஒத்துழைக்காத குறுகிய காலச் சூழ்நிலையிலும் தனது வாழ்வில் தன்னை அதிகம்

பாதித்த உணர்வுகளை அடுத்த தலைமுறையினருக்கு எழுத்தின் வழி அறியத் தந்திருக்கிறார் என்றால் அவரது நோக்கத்திற்கு முதலில் தலைவணங்க வேண்டும்.

தமிழினி தன் எழுத்தினூடே ஒரு தலைமையின் அடிப்படையில் கட்டியெழுப்பட்ட அமைப்பினையும், அவ்வமைப்பின் அரசியலினையும் நியாயமாக கேள்விக்குட்படுத்தியிருக்கின்றார். முற்போக்குத் தேசியத் தத்துவம் என்னும் அடிப்படையிலும் அவற்றை விவரித்து அதன் பண்புகளையும் அவர் குறிப்பிடுகின்றார். அதாவது,

முற்போக்குத் தேசியமானது ஏகாதிபத்திய எதிர்ப்பினைக் கொண்டதாக இருக்க வேண்டும்.

அந்நிய ஆதிக்க சக்திகளின் (சீனா இந்தியா போன்ற) நலன்களுக்குச் சேவை செய்வதாக ஒருபோதும் இருக்கக் கூடாது.

சமூக முரண்பாடுகள் விசயத்தில் போதிய தெளிவு இருக்கும் அதே சமயத்தில் ஒடுக்கப்படும் மக்களுக்குச் சார்பாகவும் அது விளங்க வேண்டும்.

ஏனைய தேசியங்களுக்கு ஈடான சம உரிமையை வேண்டும் அதே நேரம் ஏனைய தேசியங்களை அடக்குவதை, வெறுப்பதை மையமாகக் கொண்டு செயற்படக் கூடாது.

சமூகத்தில் இருக்கும் ஏற்றத்தாழ்வு விசயத்தில் பல்வேறு வகையான தப்பெண்ணங்கள் இருக்கும். இவற்றைக் கடந்து செயற்படும் வகையில் தெளிவு கொண்டிருக்க வேண்டும்.

முற்போக்குத் தேசியத்துக்குரிய உயர்ந்த மானுட விழுமியங்களைப் போராட்டத்தினூடு உருவாக்க வேண்டும். அதாவது விரிவான கருத்துப் பரிமாறல்களை அனுமதிக்க வேண்டும். ஜனநாயகம் நிலவ வேண்டும். வன்முறை மற்றும் சித்திரவதைகளை நியாயப்படுத்தவோ அனுமதிக்கவோ கூடாது என்பார்.

இவ்விதமான முற்போக்குத் தேசியத்திற்குரிய பண்புகளின் அடிப்படையில் நூலில் கூறப்பட்டுள்ள தலைமை மற்றும் அரசியல் சார்ந்த முக்கியக் குற்றச்சாட்டுகளை நூலைப் பற்றிக் குறிப்பிடாமல் நூலில் இடம்பெற்ற செய்திகளைக் கொண்டு அணுகுவதே அறிவார்ந்த செயலாகும்.

பதிவு எண் :R.Dis. No. 1964/2014

ஒரு நாட்டின் சமூக, அரசியல், பொருளியல் சூழல் காரணமாக ஒரு போராளி ஏன் உருவாகின்றார் என்பதற்கான உளவியல் காரணங்களை விவரிப்பதால் இந்நூல் உலக இலக்கியத்தினூடே முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகின்றது. ஆரம்பத்தில் கல்வி கற்றுக் கல்வியால் ஏதேனும் சாதிக்க வேண்டுமென்ற எண்ணத்துடன் இருந்த தமிழினியை இராணுவத்தினரின் எறிகணைத் தாக்குதல்கள், இந்தியப் படையினரின் தாக்குதல்கள், போரில் சாவைத் தழுவிக் கொண்ட ஆண், பெண் போராளிகளின் நிலை… இவையெல்லாம் அவரது மனத்தைப் படிப்படியாக மாற்றுவதை இந்நூல் விவரிக்கின்றது.

பாடசாலையில் படிக்கும் போது புலிகளின் மாணவர் அமைப்பில் இணைந்து செயற்பட்ட தமிழினி, ஒரு கட்டத்தில் "ஆண், பெண் வேறுபாடில்லாமல் தினசரி நூற்றுக்கணக்கான இளைஞர்களும், யுவதிகளும் தமதுயிரைக் கொடுத்துக் கொண்டிருந்த சூழ்நிலையில் வெறும் பார்வையாளராக இருப்பது எனது மனதில் பெரும் குற்ற உணர்ச்சியை ஏற்படுத்தியது." அதனால் தொடர்ந்து படிக்கக் கூடிய சூழ்நிலையும் உருவாகுமென தான் நினைக்கவில்லை. ஒரு குடும்பத்தில் ஒருவராவது போராடச் சென்றால்தான் அடுத்த சகோதரர்களாவது நிம்மதியாக வாழ முடியுமென தான் நம்பியதாகக் குறிப்பிடுகிறார். இவ்வாறு பள்ளிக்குச் சென்ற மாணவியொருத்தி எவ்விதம் ஆயுதம் தாங்கிய போராளியாகப் பரிணாமம் அடைகின்றார் என்பதை ஒரு வாக்குமூலமாகவே தனது நூலில் குறிப்பிடுகின்றார்.
இயக்கம் முழுவதும் தலைமையை மையமாக வைத்துக் கட்டமைக்கப்பட்டிருந்ததை அவர் கேள்விக்குட்படுத்துகின்றார்.

ஆரம்பத்தில் ஏனைய இயக்கப் போராளிகளைப் போல் அவரும் ஒரு தலைமை என்னும் அடிப்படையில்தான் இயங்குகின்றார். ஆனால் அதுவே பின்னர் பேரழிவுகளுக்குக் காரணமாக விளங்கும் போது அவரால் அதனை ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

"எத்தனையோ நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்து ஒரு போராட்டத்தை முப்பது வருடத்திற்கும் மேலாகப் பெரும் படைபலத்துடன் கட்டி வளர்த்தவர் என்ற பிரமிப்போடுதான் என்னைப் போன்ற பல்லாயிரக்கணக்கான போராளிகளும், மக்களும் தலைவரைப் பார்த்தோம். தலைவர் எடுத்த முடிவுகள் பல சந்தர்ப்பங்களில் விமர்சனத்துக்குள்ளாகும் போதும், அவர் மக்களின் நலனுக்காகவும், நாட்டின் விடுதலைக்காகவும்தான் இப்படியான முடிவுகளை

எடுக்கின்றார் எனவும், தலைவர் ஒரு முடிவு எடுத்தால் அதில் நிச்சயமாக ஒரு நியாயம் இருக்கும் எனவும் ஒவ்வொரு போராளியும் எவ்வித ஐயப்பாடுமின்றி நம்பினோம். தலைவர் எடுக்கும் முடிவுகளை விமர்சிப்பதோ, கேள்வி கேட்பதோ தெய்வக்குற்றம் இழைப்பதற்குச் சமமானதாக இயக்கத்தினுள்ளே கருதப்பட்டது."

இந்தப் போக்கின் வளர்ச்சியே இயக்கத்தின் உள்ளேயான விவாதத்தையும் விமர்சனத்தையும் இல்லாதொழித்து மிக அவலமான முடிவுக்கு வழிவகுத்தது. எல்லாம் அவர்தான் எனக் கொண்டாடியது மட்டுமில்லாமல் இறுதித் தோல்விக்கும் அவரே காரணம் என்ற குற்றத்தையும் வரலாறு அவர் மீது சுமத்தி நிற்க வேண்டியதாயிற்று என்பார் தமிழினி (பக்கம் 164).

இதைப் பற்றி மேலும் கூறும் பொழுது, "எத்தனையோ இலட்சம் பேருடைய இரத்தமும் கண்ணீரும் இயக்கத்தினுடைய வளர்ச்சிக்கு நீர் பாய்ச்சியிருக்கிறது. அப்படியிருக்கையில் விடுதலைப் புலிகள் இயக்கமும், தமிழ் மக்களுக்கான ஆயுதப் போராட்டமும் தனியொரு மனிதனுடைய விருப்பு வெறுப்புகளுக்கு மட்டுமே கட்டுப்பட்டு நின்றதும், அவருடைய விருப்புவெறுப்புகளுக்கேற்ற தீர்மானங்களின் படியே வழிநடத்தப்பட்டதும் எத்தகைய மோசமான இன அழிவை ஏற்படுத்தியிருந்தது" எனத் தன் சுயசரிதையின் வழி கடுமையாகச் சாடியிருக்கிறார் தமிழினி.

இவ்வாறான அவரது எண்ணங்கள் தனிப்பட்ட மனிதர் மீதான வெறுப்பன்று எனவும், தான் சார்ந்திருந்த இயக்கத்தினூடான அதன் கட்டமைப்பு மீதான சாடல்களே ஆகும் எனவும் தெளிவாகிறது. ஏனெனில், "கள முனையில் நின்று எந்தக் கேள்விகளும் கேட்காது எமது சக போராளிகள் தமதுயிரை அர்ப்பணித்துக் கொண்டிருந்தார்கள். அத்தியாகங்களுக்கு முன்னால் வேறு எதுவுமே எழுந்து நிற்க முடியாதிருந்தது. வீர மரணம் அடையும் வரை விடுதலைப்புலிகள் இயக்கத்தின் விசுவாசமிக்க போராளியாகக் கடமையாற்ற வேண்டும் என்பதைத் தவிர எனது சிந்தனைகளில் வேறு எதுவுமே தென்படவில்லை" எனத் தமிழினி கூறுவது போரின் உச்சக் காலக்கட்ட எதார்த்தத்தினை வெளிப்படுத்தும் விதமாக அமைந்துள்ளது.

இயக்கம் பற்றிய சுயவிமர்சனங்களில் முக்கியமானது சில பயிற்சி முகாம்களில் நடைபெற்ற அத்துமீறல்கள் என்பார் தமிழினி. ஏனெனில், தனது நெருங்கிய தோழியான சாம்பவி தனது பயிற்சி முகாம் அனுபவங்களைத் தன்னிடம் கூறும் பொழுது, "குறுகிய மனப்பாங்கும்,

வக்கிர குணம் கொண்டவர்களின் கரங்களில் ஆயுதங்களும் அதிகாரமும் போய்ச்சேரும் போது எத்தகைய அத்துமீறல்கள் நடைபெறும் என்பதற்கு அந்தப் பயிற்சி முகாமின் ஒருசில ஆசிரியர்கள் உதாரணமாக இருந்தனர். அரசியல் போராளிகளாகப் பணியாற்றிய பின்னர் ஆயுதப் பயிற்சி பெறுவதற்காக வந்தார்கள் என்ற காரணத்துக்காக வயது வித்தியாசமின்றி பயிற்சி பெறுவோர் அங்கே கொடூரமான முறையில் நடத்தப்பட்டனர்.

இரத்தக் காயங்கள் ஏற்படுமளவுக்கு அடியுதைகளும், மனதை நோகடிக்கும் குரூரமான வார்த்தைகளும், தனிப்பட்ட பழிவாங்கல்களும் என அந்த மகளிர் பயிற்சி முகாமில் அரங்கேறிய சம்பவங்கள் ஒட்டுமொத்தமான பெண் போராளிகளுக்கும் மிகத் தவறான முன்னுதாரணங்களாக இருந்தன என்பார். ஆனால், இவை குறித்து தமிழினி தன் நூலில் இதற்கு மேல் விரிவாக்கவில்லை. மேலும், முஸ்லீம் மக்களைக் கட்டாயமாக வெளியேற்றியது பற்றித் தமிழினி கூறும் பொழுது, "மிகவும் சராசரியான வாழ்க்கைத் தரத்தைக் கொண்டிருந்த அந்த மக்களைச் சந்தித்த பொழுது என் மனதில் மிகுந்த குற்றவுணர்ச்சி ஏற்பட்டது. அடக்குமுறைக்கு எதிராகப் போராடுவதாகக் கூறிக்கொண்ட எமது இயக்கம் இந்த அப்பாவி மக்களின் வாழ்வுரிமையை அடக்குமுறைக்கு உள்ளாக்கியதன் நியாயத்தை எனது இதயத்தால் ஏற்றுக் கொள்ள முடியாமலிருந்தது" என்பார்.

1996 இல் இராணுவத்தினர் வடமராட்சியைக் கைப்பற்றி வலிகாமத்தை முழுமையாகக் கைப்பற்றும் நடவடிக்கையை மேற்கொண்ட போது இயக்கத்தின் கட்டளைக்கேற்ப அனைத்து மக்களும் வன்னி நோக்கி இடம்பெயர்ந்தனர். "சில மணி நேரத்திற்குள் ஏறக்குறைய ஐந்து இலட்சம் மக்கள் நாவற்குழி பாலத்தைக் கடந்த நிகழ்வை எப்படிப் பதிவு செய்தாலும் புரிய வைக்க முடியாத மனித அவலம் என்றே கூற வேண்டும்" என்பார். கிழக்கு மாகாணத் தளபதியான கருணா அம்மானின் பிரிவினைத் தொடர்ந்து இயக்கத்திற்குள் நடந்த சகோதர யுத்தத்தைப் பற்றிக் குறிப்பிடுகையில் தமிழினி "கிழக்கு மாகாணப் போராளிகளை மீட்டெடுக்கும் நடவடிக்கைகள் என்ற பெயரில் இயக்கத்திற்குள் அனைவரும் வெறுக்கத்தக்க ஒரு கொடூரமான சகோதர யுத்தம் முன்னெடுக்கப்பட்டது. பல வருட காலமாக என்னுடன் பழகிய பல போராளிகள் இரு தரப்பிலும் உயிரிழந்து போயிருந்தனர்." என்று கூறுவார்.

விடுதலைப் புலிகள் அமைப்பு பெற்ற வெற்றிகளின் காரணமாக "ஓர் அரச இயந்திரம்

போல் தன்னை விசாலித்துக் கொண்டதனால் இயக்கத்தின் கூடுதலான மூளைப் பலம் நிர்வாகச் சிக்கலில் வீணே சிதறடிக்கப்பட்டது. பல திறமையான போராளிகள் பொறுப்பாளர்களாக நியமிக்கப்பட்டு நிர்வாகச் சிக்கல்களில் தமது நேரத்தையும் திறமையையும் வீணடித்துக் கொண்டிருந்தனர்" என்பார்.

இது இயக்கத்தின் வளர்ச்சியைத் தடைசெய்ததாகத் தமிழினி கூறுகிறார். மேலும், இராணுவரீதியில் சாதனைகளைப் படைத்த இயக்கத்தால் சமாதானக் காலகட்டத்தில் அரசியல் ரீதியான வெற்றிகளைக் குவிக்க முடியவில்லை என்பதும் தமிழினியின் நிலைப்பாடு. இதனை, "யுத்தக் களத்தில் பல வெற்றிகளைக் குவித்த தலைவர் சமாதானச் சூழ்நிலையில் அரசியல் ராஜதந்திர நுணுக்கங்களைத் துணிச்சலுடன் பயன்படுத்தித் தமிழர்களுக்கு உறுதியான ஒரு அரசியல் தீர்வை பெற்றுக் கொள்ளும் நிலையை நோக்கி முன்னேற முடியாமல் திணறினார்" எனக் கூறுவார்.

அதே நேரத்தில், "புலிகளின் போரியல் வெற்றிகளில் மக்களுக்கிருந்த பிரமிப்பான நம்பிக்கையும், எதிர்பார்ப்பும் தூர நோக்குடனான புலிகளின் அரசியல் செயற்பாடுகளில் எப்போதுமே இருந்ததில்லை" என்பது தமிழினியின் கூற்று.

ஏனெனில், "ஆயிரமாயிரம் உயிர்களின் அர்ப்பணிப்பு வீண் போகாதபடி கனிந்து வந்த அரசியல் சூழ்நிலைகளைத் தலைவர் பயன்படுத்தி மக்களுக்கு ஒரு நிரந்தரமான சமாதானத்தை ஏற்படுத்துவார் என அனைத்துப் போராளிகளையும் போல் நானும் உறுதியாக நம்பினேன். இறுதிப் போருக்கான முடிவைத் தலைமை எடுத்த போது, எனது சிறிதான அறிவுக்கெட்டிய வகையில் அது ஒரு சரியான முடிவாகப் படவேயில்லை" என்பார்.

தனது நூலில் தமிழினி பெண் விடுதலை பற்றிக் குறிப்பிடும் பொழுது, "எனது பாடசாலைக் காலத்தில் விடுதலைப் புலிகள் இயக்கம் தனிப்பெரும் விடுதலை இயக்கமாகப் பெரும் வளர்ச்சி அடைந்திருந்தது. மகளிர் படையணிகள் கள முனைகளில் வீர தீரச் சாதனைகளையும், உயிர் அர்ப்பணிப்புகளையும் நிகழ்த்திக் கொண்டிருந்தார்கள். நான் இயக்கத்தில் இணைந்து கொண்டமைக்குப் பொதுவான போராட்டச் சூழ்நிலைகளே காரணமாக இருந்த போதிலும், ஒரு பெண் என்ற நிலையில் எனது குடும்பத்தினதும், என்னைச் சூழ்ந்திருந்த சமூகத்தினதும், பெண் சார்ந்த கருத்துநிலையை உடைத்து ஒரு புரட்சி செய்யக் கூடிய சந்தர்ப்பமாகவும் அதைக்

கருதினேன். நான் இயக்கத்தில் இணைந்த பள்ளிப் பருவத்தில் ஒரு வேகமும் துடிப்பும் என்னிடம் இருந்ததே தவிர, அக்காலகட்டத்தில் இருந்த அரசியல் நிலைமைகள் மற்றும் சமூகம் பற்றிய எவ்விதமான புரிதலும் எனக்கிருக்கவில்லை" என்பார்.

மேலும், "பெண்கள் ஆயுதப் பயிற்சி பெற்ற போது, அவர்களால் தமது உடல் வலிமையை நிரூபிக்கக் கூடியதாக இருந்த போதிலும், அவர்களுடைய அடிப்படைச் சிந்தனைகளில் எந்தளவுக்கு மாற்றம் ஏற்பட்டிருந்தது என்பது கேள்விக்குரியதாயிருந்தது. குடும்பம் என்ற அமைப்புக்குள்ளிருந்து வெளியே வந்து, இயக்கம் என்ற அமைப்பிற்குள் புகுந்து கொண்ட புலிப் பெண்கள் அனைவருமே புரட்சிகரமான புதிய சிந்தனை மாற்றத்திற்கு உட்பட்டவர்கள் என்று கூறி விட முடியாது. எவ்வாறு ஒரு கட்டுக்கோப்பான குடும்பப் பெண்ணாக வீட்டில் வளர்க்கப்பட்டோமோ, அதேபோலக் கடினமான இராணுவப் பயிற்சிகளைப் பெற்ற, கட்டுக்கோப்பான மகளிர் படையணிப் போராளிகளாகவே இயக்கத்திலும் வளர்க்கப்பட்டோம்" எனக் கூறுவார்.

"பெண்களிடையே சுதந்திரமான ஒரு மனோபாவத்தை வளர்ப்பதற்குரிய தீர்க்கமான கொள்கைத் திட்டங்கள் எவையும் எங்களிடமிருக்கவில்லை. பெண்கள் வீட்டுக்கு வெளியே வந்து ஆயுதமேந்துவதன் மூலம், சமூகத்தையே நாம் மாற்றி விடலாம் எனக் கனவு கண்டோம். ஆனால் உண்மையில் நடந்தது என்னவென்றால், பெண் போராளிகள் ஆயுதமேந்திப் போராடியதால், போர்க்களத்தின் பல வெற்றிகளுக்குக் காரணகர்த்தாக்களாக இருக்க முடிந்ததே தவிர, சமூகத்தில் பெண்கள் சார்ந்த கருத்தமைவில் எவ்விதமான மாற்றங்களையும் எங்களால் ஏற்படுத்தி விட முடியவில்லை. தமிழ்ச் சமூகத்தில் பெண்களின் விடுதலைக்கான பாய்ச்சல் வளர்ச்சியானது ஆயுதப் பெண்களின் பிம்பமாகவே தொடங்கி ஆயுதப் போராட்டத்தின் தோல்வியுடனே அது முடிந்தும் போனது."

"பெண்கள் ஆயுதப் போராட்டத்தில் பங்கெடுப்பதன் மூலமே சமூக மாற்றத்தை ஏற்படுத்த முடியுமென்ற கருத்துகளை நான் கூறியிருக்கிறேன். ஆனாலும், ஆயுதப் போராட்டத்தோடு சமாந்தரமான நிலையில் சமூக மாற்றத்திற்கான வேலைத் திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டன என்று கூறுவதற்கில்லை" என்பார்

"அரசியல்துறை மகளிர் பிரிவினுடைய பணிகளாக சமூகத்தில் பெண்ணுரிமை பற்றிய

விழிப்புணர்வை ஏற்படுத்துவதும், பெண்களின் வாழ்கைத் தரத்தை மேம்படுத்துவதும், சமூகத்தில் பாதிக்கப்பட்ட பெண்களை இனங்கண்டு அவர்களுக்கான புனர்வாழ்வளிப்பதும், இன்னும் பரந்துபட்ட ரீதியில் சமூக மாற்றத்துக்காக உழைப்பதும் என்பனவாகவே இருந்தன. இதன் அடிப்படையில்தான் அரசியல் மகளிர் பிரிவின் வேலைத்திட்ட அலகுகளும் பிரிக்கப்பட்டிருந்தன. ஆனாலும் நடைமுறையில் சாத்தியமானது என்னவோ இயக்கத்திற்கு புதிய போராளிகளை இணைப்பதும், பெண்களுக்கென குறிப்பிட்ட சில வேலைகளை மாத்திரம் செய்ய முடிந்ததுமேயாகும். ஏனெனில் இயக்கத்தின் முழுக் கவனமும், மொத்த வளங்களும் யுத்தத்தில் ஈட்டப்பட வேண்டிய வெற்றியை நோக்கியே திருப்பபட்டிருந்தன."

அந்த அர்ப்பணிப்பின் அனுகூலங்களை அனுபவிக்கச் சித்தமாயிருக்கும் சமூகம் அவளின் போராட்டத்திற்குப் பின்னரான வாழ்வை கொச்சைப்படுத்தியே பார்க்கிறது. பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்ட பெண்களின் உடல்களை விளம்பரப்படுத்தி, அரசியல் பிழைப்பு நடத்துகிறது. போராட்டத்தில் பங்குபெற்று உயிர் மீண்ட பெண்கள் அனைவருமே மானமிழந்து போய்த்தான் வந்திருக்கிறார்கள் என்ற கருத்துகளைப் பரப்புவது எத்தனை மோசமான இழிசெயல் எனவும் கடிந்துரைக்கிறார். எனவே, தனது நூலில் பெண்கள் பற்றிய சமூகம் மீதான விமர்சனத்தையும்கூட மிகவும் நேரிடையாக வெளிப்படுத்தியிருக்கிறார் தமிழினி.

விடுதலைப் புலிகளின் அரசியல், போர்ச் செயற்பாடுகளையும், புலிகளின் வன்னிப் போர், பூநகரிச் சமரான தவளைப் பாய்ச்சல், முள்ளிவாய்க்காலில் போரின் இறுதிக் காலத்து அனுபவங்கள், போரின் பின்னரான தடுப்பு முகாம், வெலிக்கடைச் சிறை வாழ்வு மற்றும் பூந்தோட்டத்துப் புனர்வாழ்வு போன்ற பல்வேறு நிகழ்வுகளை தமிழினி இந்நூலில் விரிவாகவே ஆவணப்படுத்தியிருக்கின்றார். மேலும், தமிழினி இயக்கத்தில் சேர்ந்த பொழுது, ஆயுதப்பயிற்சி எடுப்பதற்கு முன்னர் தான் ஆற்றிய அரசியற் செயற்பாடுகளையும், அவரது அச்செயற்பாடுகள் பற்றிய சிந்தனைகளையும், புலிகளின் மக்களுடனான அரசியல் நடவடிக்கைகளையும் தனது நூலில் சுயவிமர்சனம் செய்துள்ளார்.

புலிகளின் புலனாய்வுத்துறைப் பொறுப்பாளர் பொட்டு அம்மானின் மேற்பார்வையில் பயிற்சி கொடுக்கப்பட்டு புலிகளின் தாக்குதல் வரலாற்றிலேயே முதல் தடவையாக ஒரு இராணுவ - கடற்படைக் கூட்டுப் படைத்தளம் மீது நடத்தப்பட்ட தாக்குதல் 'ஒப்பரேசன் தவளை'

எனப்படும் தவளைப் பாய்ச்சலாகும். தவளையானது நீரிலும் நிலத்திலும் வாழும் வல்லமை மிக்கது. மேற்படி தாக்குதல் நீரிலும் நிலத்திலுமுள்ள படைகள் மீது நடத்தப்பட்ட தாக்குதல். விடுதலைப் புலிகள் நீரிலும் நிலத்திலும் ஒரே நேரத்தில் தாக்குதல் நடத்தும் வல்லமை மிக்கவர்கள் என்பதை உணர்த்துவதற்காக இடப்பட்ட பெயர்தான் 'தவளைப் பாய்ச்சல்.' இப்போரில் ஈடுபட்ட போராளிகளின் உண்மையான உணர்வுகளை தமிழினி தனது நூலில் பதிவு செய்திருக்கிறார்.

"பல போராளிகள் தமது குடும்பத்தவர்களுக்கு தமது இறுதி மடல்களை எழுதிக் கொண்டிருந்தனர். எனது நெருங்கிய பல நண்பிகளும் இத்தாக்குதலில் பங்கெடுத்தனர். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான கனவுகள், நம்பிக்கைகள், அவநம்பிக்கைகள், உயிர் மீதான உத்தரவாதமின்மை, வெளிப்படுத்தமுடியாத விரக்தி என நிச்சயிக்கப்பட்ட யுத்தமொன்றில் பங்குபெறும் போராளிகளின் இறுதிக் கணங்களில் அவர்களுடைய கண்களில் தேங்கியிருக்கும் உணர்ச்சிகளைப் புரிந்து கொள்ள முடிந்த எவராலும் மீண்டுமொருமுறை யுத்தத்தைப் பற்றிப் பேசவோ அல்லது நினைத்துப் பார்க்கவோ முடியாது என்பார்.

இந்த யுத்தத்தில் பெரிய வெற்றிகளை அடைந்த விடுதலைப் புலிகள் இயக்க வரலாற்றில் முதல் தடவையாக இராணுவத்தினரின் 'யுத்த டாங்கி' ஒன்று கைப்பற்றப்படுகின்றது என்பதனை எடுத்துரைக்கும் தமிழினி, இச்சமரில் இழந்த தனது தோழிகள் பற்றியும் விவரித்திருக்கின்றார். அதில், அவர்களது காதல் அந்தரங்க உணர்வுகளைச் சொல்லி நெஞ்சினைத் தொடும் வகையில் அவர்களது உயிரிழப்பையும் எடுத்துரைக்கின்றார். குறிப்பாக சாம்பவி பற்றிய அவரது கூற்று முக்கியத்துவம் பெறுகிறது. ஏனெனில், "வயல் வெளிகளுக்கூடாக நானும் சாம்பவியும் தவழ்ந்தபடி முன்னேறிக் கொண்டிருந்தோம். மழை தொடர்ந்து பெய்து கொண்டேயிருந்ததால் வெள்ளம் தேங்கிக் கிடந்தது. தூரத்தே உயரமான நிலை ஒன்றிலிருந்து தொடர்ந்து தாக்குதல் நடத்திக் கொண்டிருந்த இராணுவத்தின் குறிபார்த்துச் சுடுபவனின் இலக்குத் தவறாத ரவைகள் அந்த வயல்வெளியில் பல போராளிகளின் உயிர்களைக் குடித்துக் கொண்டிருந்தன. சிறிதாகக் கூடத் தலையை நிமிர்த்திப் பார்க்க முடியாத நிலையில் சேற்று வயல்களுக்கூடாக நாங்கள் தவழ்ந்து கொண்டிருந்தோம். எனது பக்கவாட்டில் ஊர்ந்து கொண்டிருந்த சாம்பவியிடமிருந்து திடீரென 'ஹக்' என வினோதமான சத்தம் கேட்டது. திரும்பிப் பார்த்தேன். அவளது முகம் சேற்றுக்குள் புதைந்து போய்க் கிடந்தது. நான் அவளது தலையை நிமிர்த்திப் பார்த்த போது

கடைவாயில் இரத்தம் கசிந்துகொண்டிருந்தது" என்பார்.

இது போலவே, இச்சமரில் பலியான தன் நெருங்கிய தோழி தாமரை பற்றியும் தமிழினி குறிப்பிடுகிறார். "நீ யாரை நினைப்பாய் தாமரை, அவளின் வழமையான சோக விழிகள் ஒரு தடவை மின்னியது. காய்ந்து போயிருந்த உதடுகளில் மெல்லிய புன்னகை நெளிந்தது. நான் விரும்பியிருந்தவரைத்தான் நினைப்பேன் என்றால், அவளுக்குள் ஆழப்புதைந்து கிடந்த காதலின் இரகசியக் காயத்தை அப்போதுதான் எனக்குத் திறந்து காட்டியிருந்தாள். ஆனால், முன்னொரு யுத்தத்தில் அவளுடைய போராளிக் காதலன் ஏற்கனவே உயிரிழந்திருந்தான் எனவும் குறிப்பிடுவார்." மேலும், "போர்க் களத்தில் கண்ட இன்னொரு மறக்க முடியாத காட்சியும் எனது ஆழ்மனதில் பதிந்து போன சித்திரமாகி விட்டிருந்தது. இராணுவத்தினரினதும், விடுதலைப் புலிகளினதும் உயிரற்ற உடல்கள் மழைத் தண்ணீரில் ஊறிப்போய், ஆங்காங்கே விறைத்துக் கிடந்தன. அவர்கள் உடல்களிலிருந்து வடிந்திருந்த சிவப்புக் குருதி மழை நீரில் கரைந்து தண்ணீரோடு கலந்து ஓடிக்கொண்டிருந்தது. சற்று நேரத்திற்கு முன்புவரை தீராப் பகையுணர்ச்சியோடு எதிரும் புதிருமாக நின்று போரிட்டவர்கள் நிலத்தில் சடலங்களாகச் சிதறிக் கிடந்த காட்சி ஒரு தாயின் மடியில் உறக்கத்தில் புரண்டு கிடக்கும் குழந்தைகளையே


தோழர் தியாகுவின் அறிவுக்குரல் கேட்க

கீழுள்ள இணைப்பை சொடுக்கவும்

https:www.youtube.com/user/ajanthavalga?fbclid=IwAR0APppP9wjVctyVG1DShVLvQWRKtHOTuuR4g7zwwBeqLE-6zcuyiKZjxoQ


நினைவுபடுத்தியது. எல்லா வேறுபாடுகளும், முரண்பாடுகளும், பகைமைகளும் அர்த்தமிழந்து போகும் இடம் போர்க்களம்தான் என்பதை முழுமையாக உணரக் கூடிய அறிவு உண்மையாகவே

அப்போது எனக்கிருக்கவில்லை” என்பார்.

இவ்விதமான தமிழினியின் விவரிப்பு, போரில் நேரடியாகப் பங்குபெற்ற அவரது அனுபவத்தைச் சிறப்பாக ஆவணப்படுத்தி இருப்பதாகச் சொல்லலாம். மேலும், தமிழினியின் தன்னுணர்வுகளையும், தன் வாழ்வின் சம்பவங்களையும் கவித்துவமான மொழிச்சிறப்பால் வெளிப்படுத்தியிருக்கும் விதம் உண்மையில் பாராட்டத்தகும். ஏனெனில், பிரச்சாரமற்ற, அனுபவத்தின் வெளிப்பாடாக, மானுட நேயம் மிக்க அவரது எழுத்து போர்க்களக் காட்சிகளை விவரித்திருந்த விதம் நெஞ்சைத் தொடுவதாகவும், யுத்தம் பற்றிய புரிதல்கள் இலக்கியச் சிறப்பு மிக்கதாகவும் அமைந்து சிறக்கின்றது.

மேலும், “எந்த ஓர் உயிரினமும் போராடினால்தான் வாழ்க்கை. இது இயற்கையின் நியதி. அந்த வகையில் எமது மக்கள் தமது அரசியல் உரிமைகளுக்காகப் போராட வேண்டியவர்களாகவே இருக்கிறார்கள். ஆனால் இனியும் ஆயுதப் போராட்டம் என்ற வழிமுறையில் எமது அடுத்த சந்ததி சிந்திக்கக் கூடாது என்பதை எனது ஆத்மாவிலிருந்து கூறுகிறேன். இந்த நாட்டில் இனியும் இரத்த ஆறு பாயக் கூடாது. ஏந்த அன்னையர்களும் தனது பிள்ளையைச் சுமக்கும் பிரேதப் பெட்டிகளில் அடித்துக் கொண்டு அழக்கூடாது. எமது எதிர்காலச் சந்ததி தமது அறிவாற்றலால் உலகத்தை வென்றெடுக்க வேண்டும். மனங்கள் ஒன்றுபட்ட நவீன உலகத்தின் தரிசனங்களை அவர்கள் நேரடியாக அனுபவிக்க வேண்டும். போர்க் களங்களில் உயிரைக் கொடுத்த வீரர்கள் ஒவ்வொருவரும் இந்த யுத்தம் எங்களோடு முடிந்து போக வேண்டும் என்றுதான் எண்ணினார்களே தவிர அடுத்த சந்ததிக்கும் அது தொடர வேண்டும் என அவர்கள் நினைத்ததில்லை” எனக் கூறுவார்

முதல் முறையாக விடுதலைப் புலிகளின் முக்கியத் தலைவர்களில் ஒருவர் தன்னை, தான் சார்ந்திருந்த இயக்கத்தை சுய விமர்சனத்துக்குள்ளாக்கியது வரவேற்கத்தகுந்த செயலாகும். ஏனெனில், சுயவிமர்சனங்கள் எப்பொழுதுமே ஆரோக்கியமானவை. இதனை நினைத்தவரெல்லாம் எழுதிவிட முடியாது. அவை எதிர்காலத்தில் அனைவரையும் சரியான பாதையில் நடப்பதற்கு வழிகோலுபவையாக அமைய வேண்டும். அப்போதுதான் சுயசரிதை என்பதும் முக்கியத்துவம் பெறும். அந்த வகையில், ‘ஒரு கூர்வாளின் நிழலில்’ என்னும் தனது சுயசரிதை நூலில் தமிழினி பெண் விடுதலை பற்றித் தெரிவித்திருந்த கருத்துகள்; ஆயுதமெடுத்துப் போராடிய அமைப்பின்

பெண் போராளி என்ற வகையில் அனைத்தும் முக்கியமானவையே. மேலும், தான் இணைந்து இயங்கிய மிகவும் கடுமையான கட்டுப்பாடுகளுடன் கூடிய இயக்கமொன்றினை விமர்சித்ததால் 'ஒரு கூர்வாளின் நிழலில்' என்னும் பெயரினை தன் சுயசரிதைக்குத் தரித்து அர்த்தம்தர முயன்றிருப்பதாகவும் தோன்றுகிறது.

இந்தச் சுய விமர்சனத்தால் தமிழினி என்னும் பெண் போராளியொருவர் வந்தடையும் முடிவு 'தொடர்ந்து போராடுவேன்' எனப்தே. போருக்கான பாதையைவிடக் கடினமானது உண்மையான சமாதானத்தின் வழி என்பதையும் நானறிவேன் எனக் கூறுவதோடு, "எனது மாணவப் பருவத்தில் நான் சார்ந்த சமூகத்திற்கு ஏதாவது நன்மையான செயலை ஆற்ற வேண்டுமென்ற பெரு விருப்போடுதான் ஒரு போராளியாக மாறினேன். எனது வாழ்வின் இறுதி மூச்சு வரை ஒரு போராளியாகவே இருந்து மக்களுக்கு உதவ விரும்புகின்றேன். ஆயுதம் ஏந்துவதன் மூலமோ அல்லது பழிக்குப் பழி வாங்குதலின் மூலமாகவோ எனது சமூகத்திற்கும் நாட்டிற்கும் உலகத்திற்கும் எந்த நன்மைகளையும் நாம் செய்து விட முடியாது என்பதை அனுபவத்தின் பாடங்கள் கற்றுத் தந்து விட்டன. அமைதியும் சமாதானமுமே எந்தவொரு சமூகத்தினதும் வளர்ச்சிக்கான இயல்பான சாத்தியப்பாட்டை உருவாக்கும். அந்த வகையில் எனது இறுதிக் காலம் வரை எனது சமூகத்திலும் நாட்டிலும் மட்டுமல்ல, உலகத்தின் அமைதிக்காகவும் சமாதானத்திற்காகவும் எனது போராட்டம் தொடரும்." எனக் கூறிய தமிழினி இறுதிவரை போராடியே மறைந்திருக்கின்றார்.

விமர்சனங்கள் காரசாரமாக இல்லாதிருப்பதுபோல் தோன்றினாலும், சற்று ஆழ்ந்து நோக்கினால் மிகவும் கடுமையான விமர்சனங்கள் பொதிந்திருப்பதும் தெரியவரும். விடுதலைப்புலிகளின் தலைவரைத் தனிப்பட்ட முறையில் விமர்சிக்கவில்லையெனினும், தமிழினி அவர்கள் கோட்பாட்டு வகையில் விடுதலைப்புலிகளின் அமைப்பை அது பின்பற்றிய கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு விமர்சித்திருக்கின்றார். அந்த அமைப்பில் போராடி, இறுதியில் நிராதரவாகக் கைவிடப்பட்டு, இராணுவத்திடம் சரணடைந்து, சிறைவாழ்க்கை, தடுப்புமுகாம் வாழ்க்கை, புனர்வாழ்வு எனப் பல்வேறு பரிமாணங்களில் சென்று மீண்டும் சமூகத்திற்குள் நுழைந்த இவரைச் சமூகம் எதிர்கொண்ட விதம் அதிர்ச்சியூட்டுகின்றது. இந்நிலையில் அவரது வாழ்க்கை அனுபவங்களின் அடிப்படையில் தமிழினி என்னும் பெண் போராளியொருவர் மனம் திறந்த நிலையில் தன் வாழ்வில் நடந்தவற்றை ஆராய்ந்து முடிவுக்கு வருவதற்கும் தன் சிந்தையில் நினைத்தவாறு பேசுவதற்கும் முழு உரிமையுள்ளது. அவரது கருத்துகளை வாசிப்பு

வெளியில் வீற்றிருப்பவர்கள் ஏற்கலாம் அல்லது ஏற்காமலும் இருக்கலாம்.

தமிழினி தன் சுயசரிதையில் தான் ஏன் விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் தலைமையின் கீழ் ஆயுதம் தாங்கிப் போராடப் புறப்பட்டேன் என்பதிலிருந்து, 2009இல் முள்ளிவாய்க்காலில் யுத்தம் முடிவுக்கு வந்ததையும், அதன் பின்னரான தடுப்புமுகாம் மற்றும் புனர்வாழ்வு முகாம் போன்ற அனுபவங்களையும், சிறை வாழ்வின் பின்னர் தன் கடந்த கால வாழ்க்கையினை மீளாய்வு செய்தது வரை தன்னிலைகளை பல பரிமாணங்களில் தமிழினி விவரித்திருக்கின்றார். இந்நூலில் தமிழினி தன் குடும்பம், பள்ளி வாழ்க்கை, தான் பிறந்த நகரம் எவ்வாறு போர்க்களமாக மாறுகின்றது, தான் இணைந்த இயக்க வாழ்க்கையின் புரிதல், இயக்கத்திலிருந்த அரசியல் மற்றும் ஆயுதப் போராளிகளின் நிலைகள், விடுதலைப் புலிகளின் வெற்றிகரமான போர்களில் ஈடுபட்ட தனது வாழ்வனுபங்கள், யுத்தத்தின் இறுதிக் காலத்தில் இயக்கத்தின் நிலை, மக்களின் நிலை எனப் பல்வேறு விதமான அனுபவங்களினூடே யுத்தத்தின் பின்னரான தன் வாழ்வின் முக்கிய நிகழ்வுகள் அனைத்தையும் பெருமளவு இந்நூலில் விவரித்திருக்கின்றார். மிகுதியான பக்கங்களை உடைய பெரிய அளவிலான நூல் என்றில்லா விட்டாலும், அத்தியாயம் ஒவ்வொன்றுமே விரிவான தகவல்களை உள்ளடக்கிதாக அமைந்துள்ளது.

அந்த வகையில் கட்டுக்கோப்பானதொரு சுயசரிதையாக இயற்றப்பட்டிருக்கும் இந்நூல், உலகளாவிய பெண் சுயசரிதைப் படைப்புகளினூடே முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுவதோடு, தமிழினியின் எழுத்தாற்றல் இலக்கியச் சிறப்புமிக்கதொரு இடத்தில் அவரை இந்நூலின் வழியாக நிலைநிறுத்தியுள்ளது.

தமிழினி தன் அறிவுக்கும், ஆளுமைக்கும் உட்பட்டு தான் அறிந்த தகவல்கள் மற்றும் தரவுகளை அடிப்படையாக வைத்து சிறந்ததொரு அத்தியாயங்களில் தான் இயற்றிய நூலினை ‘ஒரு கூர்வாளின் நிழலில்’ என்னும் தலைப்பில் ஒரு போராளியாக நேர்மையாகப் பதிவு செய்திருக்கின்றார். தான் சார்ந்த செயற்பாடுகளில் ஏற்பட்ட தவறுகளைக் கூட தலைமையின் தலையில் ஏற்றித் தன்னைக் காப்பாற்றிக்கொள்ள ஒருபோதும் அவர் நினைத்ததில்லை. ஏனெனில், “போராட்டத்தை முழுவதுமாக தன்னகப்படுத்திக்கொண்ட விடுதலைப் புலிகள் இயக்கத்தில் நானும் ஒரு உறுப்பினராக இருந்தேன். போராட்டத்தின் இறுதி இருபது வருடங்கள் நானும் ஒரு சாட்சியாகப் போருக்குள்ளே வாழ்ந்திருக்கிறேன். போராளிகளான நாங்கள் எமது

மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளைக் காப்பாற்றத் தவறி விட்டோம். கையிலெடுத்த ஆயுதங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காக எமது அரசியல் இலட்சியத்தைத் தோற்கடித்து விட்டோம்" எனக் கூறுவதிலிருந்து நடந்தவை அனைத்திலும் தனக்கும் பங்கிருப்பதை ஒரு பொறுப்புணர்வவோடு ஆரம்பத்திலேயே ஏற்றுக்கொண்டுதான் தன் சுயசரிதையைத் தொடர்கின்றார். அதற்காக வருத்தமும் அடைகின்றார்.

எனவே, தமிழினி ஒரு போராளியாகத் தனது நூலில் எதையும் நேர்மையாகப் பதிவு செய்திருக்கின்றார் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை.

அதே நேரத்தில் இயக்கத்தின் எழுச்சிக் காலங்களில் எவரும் இயக்க நடவடிக்கைகளை எதிர்த்துக் கேட்கும் பூரண சுதந்திரம் பெற்றிருந்ததாகத் தான் அறியவில்லை என தமிழினி தன்நூலில் ஆங்காங்கே குறிப்பிட்டிருக்கின்றார். சில சமயங்களில் தன்னால் இயக்கத் தலைமையின் முடிவுகளை ஏற்க முடியா விட்டாலும், இயக்கக் கொள்கையை தான் ஏற்றுக் கொண்டதால் எந்நிலைமையிலும் இயக்கத்திற்காக அவர் அமைதியாகச் செயற்பட்டதையும் சுட்டிக்காட்டுகிறார். மேலும், தமிழினி தனது நூலில் விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும் மக்களுக்குமிடையே அதிக முரண்பாடுகளை ஏற்படுத்திய கட்டாய ஆட்சேர்ப்பு நிலை பற்றிக் குறிப்பிடும் பொழுது தனது எதிரான கருத்துகள் காரணமாகத் தன்னை வேறு துறைக்கு மாற்றியதாகக் குறிப்பிடுகின்றார். "சமாதானக் காலகட்டத்தில் விடுதலைப்புலிகளின் ஆட்பற்றாக்குறையைத் தீர்ப்பதற்காகச் செயற்படுத்தப்பட்ட 'கட்டாய ஆட்சேர்ப்பு' போராளிகளுக்கிடையில் விமர்சனங்களையும் முரண்பாடுகளையும் ஏற்படுத்தியதாகக் கூறுகின்றார்.

அத்துடன் "தலைவர் பிரபாகரன் எடுத்த மிகத்தவறான முடிவுகளில் முக்கியமானது கட்டாய ஆட்சேர்ப்பு என்பது என் நிலைப்பாடு, இந்தக் காரியத்தில் சூழ்நிலைக் கைதிகளாகப் பல போராளிகளும், பொறுப்பாளர்களும் மன விருப்பின்றியே செயற்பட்டுக் கொண்டிருந்தனர்" என்றும் தமிழினி கூறுகிறார்." இந்தச் செயல்பாடுகளில் மட்டும் இவரது முரண்பட்ட கருத்து நிலை காரணமாக அரசியல் துறை மகளிர் பொறுப்பாளராக மற்றொரு பெண் போராளி தன் இடத்தில் நியமிக்கப்பட்டதாகவும் தனது நூலில் தமிழினி குறிப்பிடுகின்றார்.

தமிழினி தன் படைப்பின் வழி கூறப்பட்டுள்ளவற்றில் எவையெவை உண்மை என்பதனை

நாம் பெரிதாக ஆராயத் தேவையில்லை. அதே நேரத்தில், அவர் கூறாத விசயங்களைச் சுட்டிக்காட்டி அவற்றுக்கு எதிராக உண்மையான ஆதாரங்கள் இருப்பின் தமிழினி ஏன் எழுதவில்லை என்று கேட்பதில் எந்த அர்த்தமுமில்லை. ஏனெனில் தன் வாழ்க்கையையே மக்களுக்காக அர்ப்பணித்துக் கொண்ட ஒரு பெண் போராளியின் நேர்மையான உணர்வுகளை அது கொச்சைப்படுத்துவதாக அமைந்து விடும். தன் வாழ்வின் பல்வேறு அவமானங்களை, துயரங்களை, தோல்விகளை அடைந்திருந்த நிலையிலும் தான் யாருக்காகப் போராடினாரோ அம்மக்கள்மீது கொண்டிருந்த பற்றினால் உடல்நிலை ஒத்துழைக்காத குறுகிய காலச் சூழ்நிலையிலும் தனது வாழ்வில் தன்னை அதிகம் பாதித்த உணர்வுகளை அடுத்த தலைமுறையினருக்கு எழுத்தின் வழி அறியத் தந்திருக்கிறார் என்றால் அவரது நோக்கத்திற்கு முதலில் தலைவணங்க வேண்டும்.

தமிழினி தன் எழுத்தினூடே ஒரு தலைமையின் அடிப்படையில் கட்டியெழுப்பட்ட அமைப்பினையும், அவ்வமைப்பின் அரசியலினையும் நியாயமாகக் கேள்விக்குட்படுத்தியிருக்கின்றார். முற்போக்குத் தேசியத் தத்துவம் என்னும் அடிப்படையிலும் அவற்றை விவரித்து அதன் பண்புகளையும் அவர் குறிப்பிடுகின்றார். அதாவது,

முற்போக்குத் தேசியமானது ஏகாதிபத்திய எதிர்ப்பினைக் கொண்டதாக இருக்க வேண்டும்.

அந்நிய ஆதிக்க சக்திகளின் (சீனா இந்தியா போன்ற) நலன்களுக்குச் சேவை செய்வதாக ஒருபோதும் இருக்கக் கூடாது.

சமூக முரண்பாடுகள் விசயத்தில் போதிய தெளிவு இருக்கும் அதே சமயத்தில் ஒடுக்கப்படும் மக்களுக்குச் சார்பாகவும் அது விளங்க வேண்டும்.

ஏனையத் தேசியங்களுக்கு ஈடான சம உரிமை வேண்டும் அதே நேரம் ஏனையத் தேசியங்களை அடக்குவதை, வெறுப்பதை மையமாகக்கொண்டு செயற்படக் கூடாது.

சமூகத்தில் இருக்கும் ஏற்றத்தாழ்வு விசயத்தில் பல்வேறு வகையான தப்பெண்ணங்கள் இருக்கும். இவற்றைக்கடந்து செயற்படும் வகையில் தெளிவு கொண்டிருக்க வேண்டும்.

முற்போக்குத் தேசியத்துக்குரிய உயர்ந்த மானுட விழுமியங்களைப் போராட்டத்தினூடே

உருவாக்க வேண்டும். அதாவது விரிவான கருத்துப் பரிமாறல்களை அனுமதிக்க வேண்டும். ஜனநாயகம் நிலவ வேண்டும். வன்முறை மற்றும் சித்திரவதைகளை நியாயப்படுத்தவோ அல்லது அனுமதிக்கவோ கூடாது என்பார்.

இவ்விதமான முற்போக்குத் தேசியத்தின் பண்புகளின் அடிப்படையில் நூலில் கூறப்பட்டுள்ள தலைமை மற்றும் அரசியல் சார்ந்த முக்கியமான குற்றச்சாட்டுகளை நூலைப் பற்றிக் குறிப்பிடாமல் நூலில் இடம்பெற்ற செய்திகளைக் கொண்டு அணுகுவதே அறிவார்ந்த செயலாகும்.

ஒரு நாட்டின் சமூக, அரசியல் மற்றும் பொருளியல் சூழல் காரணமாக ஒரு போராளி ஏன் உருவாகின்றார் என்பதற்கான உளவியல் காரணங்களை விவரிப்பதால் இந்நூல் உலக இலக்கியத்தினூடே முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகின்றது. ஆரம்பத்தில் கல்வி கற்று கல்வியால் எதையும் சாதிக்க வேண்டுமென்ற எண்ணத்துடன் இருந்த தமிழினியை இராணுவத்தினரின் எறிகணைத்தாக்குதல்கள், இந்தியப்படையினரின் தாக்குதல்கள், போரில் மரணத்தைத் தழுவிக்கொண்ட ஆண், பெண் போராளிகளின் நிலை, இவையெல்லாம் அவரது மனதைப்படிப்படியாக மாற்றுவதை இந்நூல் விவரிக்கின்றது.

பாடசாலையில் படிக்கும்போது புலிகளின் மாணவர் அமைப்பில் இணைந்து செயற்பட்ட தமிழினி, ஒரு கட்டத்தில் “ஆண், பெண் வேறுபாடில்லாமல் தினசரி நூற்றுக்கணக்கான இளைஞர்களும், யுவதிகளும் தமதுயிரைக் கொடுத்துக்கொண்டிருந்த சூழ்நிலையில் வெறும் பார்வையாளராக இருப்பது எனது மனதில் பெரும் குற்ற உணர்ச்சியை ஏற்படுத்திகிறது. அதனால் தொடர்ந்து படிக்கக் கூடிய சூழ்நிலையும் உருவாகுமென தான் நினைக்கவில்லை. ஒரு குடும்பத்தில் ஒருவராவது போராடச்சென்றால்தான் அடுத்த சகோதரர்களாவது நிம்மதியாக வாழ முடியுமென தான் நம்பியதாகக் குறிப்பிடுகிறார்” இவ்வாறு பள்ளிக்குச்சென்ற மாணவியொருத்தி எவ்விதம் ஆயுதம் தாங்கிய போராளியாகப் பரிணாமம் அடைகின்றார் என்பதை ஒரு வாக்குமூலமாகவே தனது நூலில் குறிப்பிடுகின்றார்.

இயக்கம் முழுவதும் தலைமையை மையமாக வைத்துக் கட்டமைக்கப்பட்டுள்ளதை அவர் கேள்விக்குட்படுத்துகின்றார்.

ஆரம்பத்தில் இயக்கத்தின் ஏனையப் போராளிகளைப் போல் அவரும் ஒரு தலைமை என்னும்

அடிப்படையில்தான் இயங்குகின்றார். ஆனால் அதுவே பின்னர் பேரழிவுகளுக்குக் காரணமாக விளங்கும் போது அவரால் அதனை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. “எத்தனையோ நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்து ஒரு போராட்டத்தை முப்பது வருடத்திற்கும் மேலாக பெரும் படைபலத்துடன் கட்டி வளர்த்தவர் என்ற பிரமிப்போடுதான் என்னைப்போன்ற பல்லாயிரக்கணக்கான போராளிகளும், மக்களும் தலைவரைப் பார்த்தோம். தலைவர் எடுத்த முடிவுகள் பல சந்தர்ப்பங்களில் விமர்சனத்துக்குள்ளாகும் போதும், அவர் மக்களின் நலனுக்காகவும், நாட்டின் விடுதலைக்காகவும்தான் இப்படியான முடிவுகளை எடுக்கின்றார் எனவும், தலைவர் ஒரு முடிவு எடுத்தால் அதில் நிச்சயமாக ஒரு நியாயம் இருக்கும் எனவும் ஒவ்வொரு போராளியும் எவ்வித ஐயப்பாடுமின்றி நம்பினோம். தலைவர் எடுக்கும் முடிவுகளை விமர்சிப்பதோ, கேள்வி கேட்பதோ தெய்வக் குற்றம் இழைப்பதற்குச் சமமானதாக இயக்கத்தினுள்ளே கருதப்பட்டது.

இந்தப் போக்கின் வளர்ச்சியே இயக்கத்தின் உள்ளேயான விவாதத்தையும் விமர்சனத்தையும் இல்லாதொழித்து அதன் மிக அவலகரமான முடிவுக்கும் வழி வகுத்தது. எல்லாம் அவர்தான் எனக்கொண்டாடியது மட்டுமில்லாமல் இறுதித்தோல்விக்கும் அவரே காரணம் என்ற குற்றத்தையும் வரலாறு அவர் மீது சுமத்தி நிற்க வேண்டியதாயிற்று என்பார் தமிழினி.” (பக்கம் 164) இதைப்பற்றி மேலும் கூறும் பொழுது “எத்தனையோ இலட்சம் பேருடைய இரத்தமும் கண்ணீரும் இயக்கத்தினுடைய வளர்ச்சிக்கு நீர் பாய்ச்சியிருக்கிறது. அப்படியிருக்கையில் விடுதலைப்புலிகள் இயக்கமும், தமிழ் மக்களுக்கான ஆயுதப்போராட்டமும் தனியொரு மனிதனுடைய விருப்பு வெறுப்புகளுக்கு மட்டுமே கட்டுப்பட்டு நின்றதும், அவருடைய விருப்பு வெறுப்புகளுக்கேற்ற தீர்மானங்களின்படியே வழிநடத்தப்பட்டதும் எத்தகைய மோசமான இன அழிவை ஏற்படுத்தியிருந்தது எனத் தன் சுயசரிதையின் வழி கடுமையாகச் சாடியிருக்கிறார் தமிழினி.

இவ்வாறான அவரது மன எண்ணங்கள் தனிப்பட்ட மனிதர் மீதான வெறுப்பல்ல. தான் சார்ந்திருந்த இயக்கத்தினூடான அதன் கட்டமைப்பு மீதான சாடல்களே ஆகும். ஏனெனில், “கள முனையில் நின்று எந்தக் கேள்விகளும் கேட்காது எமது சக போராளிகள் தமதுயிரை அர்ப்பணித்துக்கொண்டிருந்தார்கள். அத்தியாகங்களுக்கு முன்னால் வேறு எதுவுமே எழுந்து நிற்க முடியாதிருந்தது. வீரமரணம் அடையும் வரை விடுதலைப்புலிகள் இயக்கத்தின் விசுவாசமிக்க

போராளியாகக் கடமையாற்ற வேண்டும் என்பதைத் தவிர எனது சிந்தனைகளில் வேறு எதுவுமே தென்படவில்லை"எனத் தமிழினி கூறுவது போரின் உச்சகாலகட்ட எதார்த்தினை வெளிப்படுத்தும் விதமாக அமைந்துள்ளது.

இயக்கம் பற்றிய சுயவிமர்சனங்களில் முக்கியமானது சில பயிற்சி முகாம்களில் நடைபெற்ற அத்துமீறல்கள் என்பார் தமிழினி. ஏனெனில், தனது நெருங்கிய தோழியான சாம்பவி தனது பயிற்சி முகாம் அனுபவங்களைத் தன்னிடம் கூறும்பொழுது, "குறுகிய மனப்பாங்கும், வக்கிர குணம் கொண்டவர்களின் கரங்களில் ஆயுதங்களும், அதிகாரமும் போய்ச்சேரும் போது எத்தகைய அத்துமீறல்கள் நடைபெறும் என்பதற்கு அந்தப்பயிற்சி முகாமின் ஒரு சில ஆசிரியர்கள் உதாரணமாக இருந்தனர். அரசியல் போராளிகளாகப் பணியாற்றிய பின்னர் ஆயுதப் பயிற்சி பெறுவதற்காக வந்தார்கள் என்ற காரணத்துக்காக வயது வித்தியாசமின்றி அங்கே கொடூரமான முறையில் பயிற்சி பெறுவோர் நடத்தப்பட்டனர்.

இரத்தக் காயங்கள் ஏற்படுமளவுக்கு அடியுதைகளும், மனதை நோகடிக்கும் குரூரமான வார்த்தைகளும், தனிப்பட்ட பழிவாங்கல்களும் என அந்த மகளிர் பயிற்சி முகாமில் அரங்கேறிய சம்பவங்கள் ஒட்டுமொத்தமான பெண் போராளிகளுக்கும் மிகத்தவறான முன்னுதாரணங்களாக இருந்தன என்பார்." ஆனால், இவை எவ்வகையான சித்திரவதைகள் என்பதை மட்டும் தமிழினி தன் நூலில் விரிவாக எடுத்துரைக்கவில்லை. மேலும், முஸ்லீம் மக்களைக் கட்டாயமாக வெளியேற்றியது பற்றித் தமிழினி கூறும்பொழுது, "மிகவும் சராசரியான வாழ்க்கைத் தரத்தைக் கொண்டிருந்த அந்த மக்களைச் சந்தித்த பொழுது என் மனதில் மிகுந்த குற்றவுணர்ச்சி ஏற்பட்டது. அடக்குமுறைக்கு எதிராகப் போராடுவதாகக் கூறிக்கொண்ட எமது இயக்கம் இந்த அப்பாவி மக்களின் வாழ்வுரிமையை அடக்குமுறைக்கு உள்ளாக்கியதன் நியாயத்தை எனது இதயத்தால் ஏற்றுக்கொள்ள முடியாமலிருந்தது என்பார்.

1996இல் இராணுவத்தினர் வடமராட்சியைக் கைப்பற்றி வலிகாமத்தை முழுமையாகக் கைப்பற்றும் நடவடிக்கையை மேற்கொண்டபோது இயக்கத்தின் கட்டளைக்கேற்ப அனைத்து மக்களும் வன்னி நோக்கி இடம்பெயர்ந்தனர். "சில மணி நேரத்திற்குள் ஏறக்குறைய ஐந்து இலட்சம் மக்கள் நாவற்குழி பாலத்தைக் கடந்த நிகழ்வை எப்படிப் பதிவு செய்தாலும் புரிய வைக்க முடியாத மனித அவலம் என்றே கூறவேண்டும் என்பார்." கிழக்கு மாகாணத்தளபதியான

கருணா அம்மானின் பிரிவினைத் தொடர்ந்து இயக்கத்திற்குள் நடந்த சகோதர யுத்தத்தைப் பற்றிக் குறிப்பிடுகையில் தமிழினி “கிழக்கு மாகாணப்போராளிகளை மீட்டெடுக்கும் நடவடிக்கைகள் என்ற பெயரில் இயக்கத்திற்குள் அனைவரும் வெறுக்கத்தக்க ஒரு கொடூரமான சகோதர யுத்தம் முன்னெடுக்கப்பட்டது. பல வருட காலமாக என்னுடன் பழகிய பல போராளிகள் இரு தரப்பிலும் உயிரிழந்து போயிருந்தனர்.” என்று கூறுவார்.

விடுதலைப்புலிகள் அமைப்பு பெற்ற வெற்றிகளின் காரணமாக “ஓர் அரச இயந்திரம் போல் தன்னை விசாலித்துக் கொண்டதனால் இயக்கத்தின் கூடுதலான மூளைப்பலம் நிர்வாகச்சிக்கலில் வீணே சிதறடிக்கப்பட்டது. பல திறமையான போராளிகள் பொறுப்பாளர்களாக நியமிக்கப்பட்டு நிர்வாகச் சிக்கல்களில் தமது நேரத்தையும் திறமையையும் வீணடித்துக் கொண்டிருந்தனர்” என்பார்.

இது இயக்கத்தின் வளர்ச்சியைத் தடைசெய்ததாக தமிழினி தன் நூலின் வாயிலாகக் கூறுகிறார். மேலும், இராணுவரீதியில் சாதனைகளைப் படைத்த இயக்கத்தால் சமாதானக் காலகட்டத்தில் அரசியல் ரீதியான வெற்றிகளைக் குவிக்க முடியவில்லை என்பதும் தமிழினியின் நிலைப்பாடு. இதனை, “யுத்தகளத்தில் பல வெற்றிகளைக் குவித்த தலைவர் சமாதானச் சூழ்நிலையில் அரசியல் ராஜதந்திர நுணுக்கங்களைத் துணிச்சலுடன் பயன்படுத்தித் தமிழர்களுக்கு உறுதியான ஒரு அரசியல் தீர்வை பெற்றுக்கொள்ளும் நிலையை நோக்கி முன்னேற முடியாமல் தி ணறினார் எனக்கூறுவார்.”

அதேநேரத்தில், “புலிகளின் போரியல் வெற்றிகளில் மக்களுக்கிருந்த பிரமிப்பான நம்பிக்கையும், எதிர்பார்ப்பும் தூர நோக்குடனான புலிகளின் அரசியல் செயற்பாடுகளில் எப்போதுமே இருந்ததில்லை” என்பது தமிழினியின் கூற்று.

ஏனெனில், “ஆயிரமாயிரம் உயிர்களின் அர்ப்பணிப்பு வீண்போகாதபடி கனிந்து வந்த அரசியல் சூழ்நிலைகளைத் தலைவர் பயன்படுத்தி மக்களுக்கு ஒரு நிரந்தரமான சமாதானத்தை ஏற்படுத்துவார் என அனைத்துப் போராளிகளையும் போல் நானும் உறுதியாக நம்பினேன். இறுதிப் போருக்கான முடிவைத் தலைமை எடுத்த போது, எனது சிறிதான அறிவுக்கெட்டிய வகையில் அது ஒரு சரியான முடிவாகப்படவேயில்லை என்பார்.”

தனது நூலில் தமிழினி பெண் விடுதலை பற்றி குறிப்பிடும் பொழுது, “எனது பாடசாலைக் காலத்தில் விடுதலைப்புலிகள் இயக்கம் தனிப்பெரும் விடுதலை இயக்கமாகப் பெரும் வளர்ச்சியை அடைந்திருந்தது. மகளிர் படையணிகள் கள முனைகளில் வீர, தீரச் சாதனைகளையும், உயிர் அர்ப்பணிப்புகளையும் நிகழ்த்திக்கொண்டிருந்தார்கள். நான் இயக்கத்தில் இணைந்து கொண்டமைக்குப் பொதுவான போராட்டச் சூழ்நிலைகளே காரணமாக இருந்த போதிலும், ஒரு பெண் என்ற நிலையில் எனது குடும்பத்தினதும், என்னைச்சூழ்ந்திருந்த சமூகத்தினதும், பெண் சார்ந்த கருத்து நிலையை உடைத்து ஒரு புரட்சி செய்யக்கூடிய சந்தர்ப்பமாகவும் அதைக் கருதினேன். நான் இயக்கத்தில் இணைந்த பள்ளிப்பருவத்தில் ஒரு வேகமும், துடிப்பும் என்னிடம் இருந்ததே தவிர, அக்காலகட்டத்தில் இருந்த அரசியல் நிலைமைகள் மற்றும் சமூகம் பற்றிய எவ்விதமான புரிதலும் எனக்கிருக்கவில்லை என்பார்.”

மேலும், “பெண்கள் ஆயுதப்பயிற்சி பெற்றபோது, அவர்களால் தமது உடல் வலிமையை நிரூபிக்கக்கூடியதாக இருந்த போதிலும், அவர்களுடைய அடிப்படைச் சிந்தனைகளில் எந்தளவுக்கு மாற்றம் ஏற்பட்டிருந்தது என்பது கேள்விக்குரியதாயிருந்தது. குடும்பம் என்ற அமைப்புக்குள்ளிருந்து வெளியே வந்து, இயக்கம் என்ற அமைப்பிற்குள் புகுந்து கொண்ட புலிப்பெண்கள் அனைவருமே புரட்சிகரமான புதிய சிந்தனை மாற்றத்திற்கு உட்பட்டவர்கள் என்று கூறிவிட முடியாது. எவ்வாறு ஒரு கட்டுக்கோப்பான குடும்பப்பெண்ணாக வீட்டில் வளர்க்கப்பட்டோமோ, அதேபோலக் கடினமான இராணுவப்பயிற்சிகளைப்பெற்ற, கட்டுக்கோப்பான மகளிர் படையணிப் போராளிகளாகவே இயக்கத்திலும் வளர்க்கப்பட்டோம் எனக்கூறுவார்.”

“பெண்களிடையே சுதந்திரமான ஒரு மனோபாவத்தை வளர்ப்பதற்குரிய தீர்க்கமான கொள்கைத்திட்டங்கள் எவையும் எங்களிடமிருக்கவில்லை. பெண்கள் வீட்டுக்கு வெளியே வந்து ஆயுதமேந்துவதன் மூலம், சமூகத்தையே நாம் மாற்றி விடலாம் எனக்கனவு கண்டோம். ஆனால் உண்மையில் நடந்தது என்னவென்றால், பெண் போராளிகள் ஆயுதமேந்திப் போராடியதால், போர்க்களத்தின் பல வெற்றிகளுக்குக் காரணகர்த்தாக்களாக இருக்க முடிந்ததே தவிர, சமூகத்தில் பெண்கள் சார்ந்த கருத்தமைவில் எவ்விதமான மாற்றங்களையும் எங்களால் ஏற்படுத்திவிட முடியவில்லை. தமிழ்ச் சமூகத்தில் பெண்களின் விடுதலைக்கான பாய்ச்சல் வளர்ச்சியானது ஆயுதப் பெண்களின் பிம்பமாகவே தொடங்கி ஆயுதப் போராட்டத்தின் தோல்வியுடனே அது முடிந்தும் போனது."

பதிவு எண் :R.Dis. No. 1964/2014

“பெண்கள் ஆயுதப் போராட்டத்தில் பங்கெடுப்பதன் மூலமே சமூக மாற்றத்தை ஏற்படுத்த முடியுமென்று கருத்துகளை நான் கூறியிருக்கிறேன். ஆனாலும், ஆயுதப்போராட்டத்தோடு சமாந்தரமான நிலையில் சமூக மாற்றத்திற்கான வேலைத்திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டன என்று கூறுவதற்கில்லை என்பார்

“அரசியல்துறை மகளிர் பிரிவினுடைய பணிகளாக சமூகத்தில் பெண்ணுரிமை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதும், பெண்களின் வாழ்கைத்தரத்தை மேம்படுத்துவதும், சமூகத்தில் பாதிக்கப்பட்ட பெண்களை இனங்கண்டு அவர்களுக்கான புனர்வாழ்வளிப்பதும், இன்னும் பரந்துபட்ட ரீதியில் சமூக மாற்றத்துக்காக உழைப்பதும் என்பனவாகவே இருந்தன. இதன் அடிப்படையில்தான் அரசியல் மகளிர் பிரிவின் வேலைத்திட்ட அலகுகளும் பிரிக்கப்பட்டிருந்தன. ஆனாலும் நடைமுறையில் சாத்தியமானது என்னவோ இயக்கத்திற்கு புதிய போராளிகளை இணைப்பதும், பெண்களுக்கென குறிப்பிட்ட சில வேலைகளை மாத்திரம் செய்ய முடிந்ததுமேயாகும். ஏனெனில் இயக்கத்தின் முழுக்கவனமும், மொத்த வளங்களும் யுத்தத்தில் ஈட்டப்பட வேண்டிய வெற்றியை நோக்கியே திருப்பபட்டிருந்தன.”

அந்த அர்ப்பணிப்பின் அனுகூலங்களை அனுபவிக்கச் சித்தமாயிருக்கும் சமூகம் அவளின் போராட்டத்திற்குப் பின்னரான வாழ்வை கொச்சைப்படுத்தியே பார்க்கிறது. பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்ட பெண்களின் உடல்களை விளம்பரப்படுத்தி, அரசியல் பிழைப்பு நடத்துகிறது. போராட்டத்தில் பங்குபெற்று உயிர் மீண்ட பெண்கள் அனைவருமே மானமிழந்து போய்த்தான் வந்திருக்கிறார்கள் என்ற கருத்துகளைப் பரப்புவது எத்தனை மோசமான இழிசெயல் எனவும் கடிந்துரைக்கிறார். எனவே, தனது நூலில் பெண்கள் பற்றிய சமூகம் மீதான விமர்சனத்தையும்கூட மிகவும் நேரிடையாக வெளிப்படுத்தியிருக்கிறார் தமிழினி;.

விடுதலைப்புலிகளின் அரசியல், போர்ச்செயற்பாடுகளையும், புலிகளின் வன்னிப்போர், பூநகரிச்சமரான தவளைப்பாய்ச்சல், முள்ளிவாய்க்காலில் போரின் இறுதிக்காலத்து அனுபவங்கள்,

பதிவு எண் :R.Dis. No. 1964/2014

போரின் பின்னரான தடுப்பு முகாம், வெலிக்கடைச்சிறை வாழ்வு மற்றும் பூந்தோட்டத்துப் புனர்வாழ்வு போன்ற பல்வேறு நிகழ்வுகளை தமிழினி இந்நூலில் விரிவாகவே ஆவணப்படுத்தியிருக்கின்றார். மேலும், தமிழினி இயக்கத்தில் சேர்ந்தபொழுது, ஆயுதப்பயிற்சி எடுப்பதற்கு முன்னர் தான் ஆற்றிய அரசியற் செயற்பாடுகளையும், அவரது அச்செயற்பாடுகள் பற்றிய சிந்தனைகளையும், புலிகளின் மக்களுடனான அரசியல் நடவடிக்கைகளையும் தனது நூலில் சுயவிமர்சனம் செய்துள்ளார்.

புலிகளின் புலனாய்வுத்துறைப் பொறுப்பாளர் பொட்டு அம்மானின் மேற்பார்வையில் பயிற்சி கொடுக்கப்பட்டு புலிகளின் தாக்குதல் வரலாற்றிலேயே முதல் தடவையாக ஒரு இராணுவ - கடற்படைக்கூட்டுப் படைத்தளம் மீது நடத்தப்பட்ட தாக்குதல் 'ஒப்பரேசன் தவளை' எனப்படும் தவளைப்பாய்ச்சலாகும். தவளையானது நீரிலும், நிலத்திலும் வாழும் வல்லமை மிக்கது. மேற்படி தாக்குதலும் நீரிலும், நிலத்திலுமுள்ள படைகள் மீது நடத்தப்பட்ட தாக்குதல். விடுதலைப்புலிகள் நீரிலும், நிலத்திலும் ஒரே நேரத்தில் தாக்குதல் நடத்தும் வல்லமை மிக்கவர்கள் என்பதை உணர்த்துவதற்காக இடப்பட்ட பெயர்தான் 'தவளைப்பாய்ச்சல்.' இப்போரில் ஈடுபட்ட போராளிகளின் உண்மையான உணர்வுகளை தமிழினி தனது நூலில் பதிவு செய்திருக்கிறார்.

"பல போராளிகள் தமது குடும்பத்தவர்களுக்கு தமது இறுதி மடல்களை எழுதிக் கொண்டிருந்தனர். எனது நெருங்கிய பல நண்பிகளும் இத்தாக்குதலில் பங்கெடுத்தனர். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான கனவுகள், நம்பிக்கைகள், அவநம்பிக்கைகள், உயிர் மீதான உத்தரவாதமின்மை, வெளிப்படுத்தமுடியாத விரக்தி என நிச்சயிக்கப்பட்ட யுத்தமொன்றில் பங்குபெறும் போராளிகளின் இறுதிக் கணங்களில் அவர்களுடைய கண்களில் தேங்கியிருக்கும் உணர்ச்சிகளைப் புரிந்து கொள்ள முடிந்த எவராலும் மீண்டுமொரு முறை யுத்தத்தைப்பற்றி பேசவோ அல்லது நினைத்துப் பார்க்கவோ முடியாது என்பார்.

இந்த யுத்தத்தில் பெரிய வெற்றிகளை அடைந்த விடுதலைப் புலிகள் இயக்க வரலாற்றில் முதல் தடவையாக இராணுவத்தினரின் 'யுத்த டாங்கி' ஒன்று கைப்பற்றப்படுகின்றது என்பதனை எடுத்துரைக்கும் தமிழினி, இச்சமரில் இழந்த தனது தோழிகள் பற்றியும் விவரித்திருக்கின்றார்.

அதில், அவர்களது காதல் அந்தரங்க உணர்வுகளைச் சொல்லி நெஞ்சினைத் தொடும் வகையில் அவர்களது உயிரிழப்பையும் எடுத்துரைக்கின்றார். குறிப்பாக சாம்பவி பற்றிய அவரது கூற்று முக்கியத்துவம் பெறுகிறது. ஏனெனில், "வயல் வெளிகளுக்கூடாக நானும் சாம்பவியும் தவழ்ந்தபடி முன்னேறிக்கொண்டிருந்தோம். மழை தொடர்ந்து பெய்து கொண்டேயிருந்ததால் வெள்ளம் தேங்கிக் கிடந்தது. தூரத்தே உயரமான நிலை ஒன்றிலிருந்து தொடர்ந்து தாக்குதல் நடத்திக்கொண்டிருந்த இராணுவத்தின் குறிபார்த்துச் சுடுபவனின் இலக்குத் தவறாதவைகள் அந்த வயல்வெளியில் பல போராளிகளின் உயிர்களைக் குடித்துக்கொண்டிருந்தன. சிறிதாகக் கூடத்தலையை நிமிர்த்திப் பார்க்க முடியாத நிலையில் சேற்று வயல்களுக்கூடாக நாங்கள் தவழ்ந்து கொண்டிருந்தோம். எனது பக்கவாட்டில் ஊர்ந்து கொண்டிருந்த சாம்பவியிடமிருந்து திடீரென 'ஹக்' என விநோதமான சத்தம் கேட்டது. திரும்பிப் பார்த்தேன். அவளது முகம் சேற்றுக்குள் புதைந்துபோய்க் கிடந்தது. நான் அவளது தலையை நிமிர்த்திப் பார்த்தபோது கடைவாயில் இரத்தம் கசிந்து கொண்டிருந்தது என்பார்."

இதுபோலவே, இச்சமரில் பலியான தன் நெருங்கிய தோழி தாமரை பற்றியும் தமிழினி குறிப்பிடுகிறார். "நீ யாரை நினைப்பாய் தாமரை, அவளின் வளமையான சோக விழிகள் ஒரு தடவை மின்னியது. காய்ந்து போயிருந்த உதடுகளில் மெல்லிய புன்னகை நெளிந்தது. நான் விரும்பியிருந்தவரைத்தான் நினைப்பேன் என்றால், அவளுக்குள் ஆழப்புதைந்து கிடந்த காதலின் இரகசியக் காயத்தை அப்போதுதான் எனக்குத் திறந்து காட்டியிருந்தாள். ஆனால், முன்னொரு யுத்தத்தில் அவளுடைய போராளிக் காதலன் ஏற்கனவே உயிரிழந்திருந்தான் எனவும் குறிப்பிடுவார்." மேலும், "போர்க்களத்தில் கண்ட இன்னொரு மறக்க முடியாத காட்சியும் எனது ஆழ்மனதில் பதிந்து போன சித்திரமாகி விட்டிருந்தது. இராணுவத்தினரினதும், விடுதலைப் புலிகளினதும் உயிரற்ற உடல்கள் மழைத் தண்ணீரில் ஊறிப்போய், ஆங்காங்கே விறைத்துக்கிடந்தன. அவர்கள் உடல்களிலிருந்து வடிந்திருந்த சிவப்புக் குருதி மழை நீரில் கரைந்து தண்ணீரோடு கலந்து ஓடிக்கொண்டிருந்தது. சற்று நேரத்திற்கு முன்புவரை தீராப் பகையுணர்ச்சியோடு எதிரும் புதிருமாக நின்று போரிட்டவர்கள் நிலத்தில் சடலங்களாக சிதறிக்கிடந்த காட்சி ஒரு தாயின் மடியில் உறக்கத்தில் புரண்டு கிடக்கும் குழந்தைகளையே நினைவுபடுத்தியது. எல்லா வேறுபாடுகளும், முரண்பாடுகளும், பகைமைகளும் அர்த்தமிழந்து போகும் இடம் போர்க் களம்தான் என்பதை முழுமையாக உணரக் கூடிய அறிவு உண்மையாகவே அப்போது எனக்கிருக்கவில்லை என்பார்.

இவ்விதமான தமிழினியின் விவரிப்பு, போரில் நேரடியாகப் பங்கு பெற்ற அவரது அனுபவத்தைச் சிறப்பாக ஆவணப்படுத்தியிருப்பதாகச் சொல்லலாம். மேலும், தமிழினியின் தன்னுணர்வுகளையும், தன் வாழ்வின் சம்பவங்களையும் கவித்துவமான மொழிச் சிறப்பால் வெளிப்படுத்தியிருக்கும் விதம் உண்மையில் பாராட்டத்தகும். ஏனெனில், பிரச்சாரமற்ற, அனுபவத்தின் வெளிப்பாடாக, மானுட நேயம் மிக்க அவரது எழுத்து போர்க்களக்காட்சிகளை விவரித்திருந்த விதம் நெஞ்சைத்தொடுவதாகவும், யுத்தம் பற்றிய புரிதல்கள் இலக்கியச்சிறப்பு மிக்கதாகவும் அமைந்து சிறக்கின்றது.

மேலும், "எந்த ஓர் உயிரினமும் போராடினால்தான் வாழ்க்கை. இது இயற்கையின் நியதி. அந்த வகையில் எமது மக்கள் தமது அரசியல் உரிமைகளுக்காகப் போராட வேண்டியவர்களாகவே இருக்கிறார்கள். ஆனால் இனியும் ஆயுதப் போராட்டம் என்ற வழிமுறையில் எமது அடுத்த சந்ததி சிந்திக்கக் கூடாது என்பதை எனது ஆத்மாவிலிருந்து கூறுகிறேன். இந்த நாட்டில் இனியும் இரத்த ஆறு பாயக்கூடாது. ஏந்த அன்னையர்களும் தனது பிள்ளையைச் சுமக்கும் பிரேதப் பெட்டிகளில் அடித்துக்கொண்டு அழக்கூடாது. எமது எதிர்காலச் சந்ததி தமது அறிவாற்றலால் உலகத்தை வென்றெடுக்க வேண்டும். மனங்கள் ஒன்றுபட்ட நவீன உலகத்தின் தரிசனங்களை அவர்கள் நேரடியாக அனுபவிக்க வேண்டும். போர்க்களங்களில் உயிரைக் கொடுத்த வீரர்கள் ஒவ்வொருவரும் இந்த யுத்தம் எங்களோடு முடிந்துபோக வேண்டும் என்றுதான் எண்ணினார்களே தவிர அடுத்த சந்ததிக்கும் அது தொடரவேண்டும் என அவர்கள் நினைத்ததில்லை எனக்கூறுவார்

முதல் முறையாக விடுதலைப் புலிகளின் முக்கிய தலைவர்களில் ஒருவர் தன்னை, தான் சார்ந்திருந்த இயக்கத்தை சுய விமர்சனத்துக்குள்ளாக்கியது வரவேற்கத்தகுந்த செயலாகும். ஏனெனில், சுயவிமர்சனங்கள் எப்பொழுதுமே ஆரோக்கியமானவை. இதனை நினைத்தவரெல்லாம் எழுதிவிட முடியாது. அவை எதிர்காலத்தில் அனைவரையும் சரியான பாதையில் நடப்பதற்கு வழிகோலுபவையாக அமையவேண்டும். அப்போதுதான் சுயசரிதை என்பதும் முக்கியத்துவம் பெறும். 'ஒரு கூர்வாளின் நிழலில்' என்னும் தனது சுயசரிதை நூலில் ஆயுதமெடுத்துப் போராடிய அமைப்பின் பெண் போராளி என்ற வகையில் தமிழினி பெண் விடுதலை பற்றித் தெரிவித்திருந்த கருத்துகள் அனைத்தும் முக்கியமானவையே. மேலும், தான் இணைந்து இயங்கிய மிகவும்

கடுமையான கட்டுப்பாடுகளுடன் கூடிய இயக்கமொன்றினை விமர்சித்ததால் 'ஒரு கூர்வாளின் நிழலில்' என்னும் பெயரினை தன் சுயசரிதைக்கு தரித்து அர்த்தம் தர முயன்றிருப்பதாகவும் தோன்றுகிறது.

இந்தச் சுய விமர்சனத்தால் தமிழினி என்னும் பெண் போராளியொருவர் வந்தடையும் முடிவு 'தொடர்ந்து போராடுவேன்' போருக்கான பாதையைவிடக் கடினமானது உண்மையான சமாதானத்தின் வழி என்பதையும் நானறிவேன் எனக் கூறுவதோடு, "எனது மாணவப் பருவத்தில் நான் சார்ந்த சமூகத்திற்கு ஏதாவது நன்மையான செயலை ஆற்ற வேண்டுமென்ற பெரு விருப்போடுதான் ஒரு போராளியாக மாறினேன். எனது வாழ்வின் இறுதி மூச்சு வரை ஒரு போராளியாகவே இருந்து மக்களுக்கு உதவ விரும்புகின்றேன். ஆயுதம் ஏந்துவதன் மூலமோ அல்லது பழிக்குப் பழி வாங்குதலின் மூலமோ எனது சமூகத்திற்கும் நாட்டிற்கும் உலகத்திற்கும் எந்த நன்மைகளையும் நாம் செய்து விட முடியாது என்பதை அனுபவத்தின் பாடங்கள் கற்றுத் தந்து விட்டன. அமைதியும் சமாதானமுமே எந்தவொரு சமூகத்தினதும் வளர்ச்சிக்கான இயல்பான சாத்தியப்பாட்டை உருவாக்கும். அந்த வகையில் எனது இறுதிக் காலம் வரை எனது சமூகத்திலும் நாட்டிலும் மட்டுமல்ல உலகத்தின் அமைதிக்காகவும் சமாதானத்திற்காகவும் எனது போராட்டம் தொடரும்." எனக் கூறிய தமிழினி இறுதிவரை போராடியே மறைந்திருக்கின்றார்.

**சமந்தா**

**நக்வெய்ன் மார்க்சியப் பள்ளியில் (12)**


## விழிப்பே துணை!

**சாத்தான்குளம் காவல்நிலைய இரட்டைப் படுகொலைக் குற்றவாளிகளைத் தப்ப அரசு தரப்பு சூழ்ச்சிகளை முறியடிப்போம்!**

**காவல் சித்திரவதைக்கு எதிரான கூட்டியக்கம்**
**JAACT - TN**


**தோழர் தியாகு, 8939154752.**

**செயலாளர்:**
**தோழர் மீ.த. பாண்டியன்,**
**9080427640.**

## முதலாளித்துவ நெருக்கடி குறித்த மார்க்ஸின் பகுப்பாய்வு:

### ஆசிரியர்: வெங்கடேஷ் ஆத்தரேயா

பொருளாதார நெருக்கடிகள், முதலாளித்துவ உற்பத்தி முறைக்கு மட்டும் பிரத்யேகமானவை அல்ல, ஆனால் முதலாளித்துவ உற்பத்தி முறையில் ஏற்படும் பொருளாதார நெருக்கடிகள் முரண்பாடான தன்மைகளை கொண்டுள்ளன. முதலாளித்துவத்தில் நெருக்கடி என்பது பற்றாக்குறை என்பதைக் காட்டிலும் அதீத உற்பத்தியாலே ஏற்படும் போக்கைக் கொண்டுள்ளது. முதலாளித்துவத்திற்கு முந்தைய சமூக அமைப்புகளில், பொருளாதார நெருக்கடி என்பது பற்றாக்குறையினால் ஏற்படும். வறட்சி, வெள்ளம், பூகம்பங்கள் போன்ற இயற்கைச் சீற்றங்களால் அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் சேவைகளில் ஏற்படும் கடுமையான பற்றாக்குறையால் உருவாகும். அச்சமூக அமைப்புகளில் உற்பத்தி சக்திகளின் வளர்ச்சி ஒப்பீட்டளவில் குறைந்த அளவில் இருந்தது. அதற்கு முற்றிலும் மாறாக, முதலாளித்துவத்தின் கீழ் பொருளாதார நெருக்கடிகள் மிகை உற்பத்தியால் ஏற்படுகின்றன. ஒருபுறம், குறைந்த விலையிலும் விற்க முடியாதபடி பொருட்கள் கடைகளில் குவிந்து கிடக்கின்றன. மறுபுறம், கோடிக் கணக்கான தொழிலாளர்கள் வேலையில்லாமல் இருப்பதால் அத்தியாவசியப் பொருட்களைக் கூட வாங்க இயலாத நிலையில் உள்ளனர்.



முதலாளித்துவ நெருக்கடியினால் பொருளாதார வாழ்வு சிதைவுறுகிறது, முதலாளித்துவ மறுவுற்பத்தி நடைமுறை தடைபடுகிறது. பொருளாதார நெருக்கடியினால் சமூக மூலதனத்தின் மறுவுற்பத்தி- இது தனிப்பட்ட மூலதன மறுவுற்பத்தி செயல்முறைகளின் கூடுதல் - செயல்முறை பாதிக்கப்படுகிறது.

முதலாளித்துவத்தின் ஒவ்வொரு பொருளாதார நெருக்கடியும் பல முரண்பாடுகளின் ஒருங்கிணைந்த செயல்பாட்டின் விளைவாக ஏற்படுகிறது.முதலாளித்துவத்தில் பொருளாதார நெருக்கடி ஏற்படுவதற்கான முதன்மையான மூன்று மூல காரணிகளாவன;

1.முதலாளித்துவத்தின் தான்தோன்றித்தனமான உற்பத்தி முறையால் ஏற்படும் விகிதப் பொருத்தமின்மை,

2. குறை-நுகர்வு (நுகர்வுப் பற்றாக்குறை),

3. லாப வீதத்தின் வீழ்ச்சிப் போக்கு

**விகிதப் பொருத்தமின்மை நெருக்கடிகள்:**

சமூகத்தின் ஒட்டுமொத்த உற்பத்தியையும் இரண்டு பெரிய உற்பத்தித் துறைகளாக பிரிக்கலாம். i) துறை I உற்பத்திச் சாதனங்களை உற்பத்தி செய்யும் துறை, ii) துறை II நுகர்வு பொருட்களை உற்பத்தி செய்யும் துறை.

சமூக மறுவுற்பத்தி அதே அளவிலோ அல்லது விரிந்த அளவிலோ நடைபெற வேண்டும் என்றால், ஒவ்வொரு துறையிலும் உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்கிடையே சமநிலை ஏற்படும் விதமாக ஒரு குறிப்பிட்ட விகிதாசாரத்தில் இருக்குமாறு சரியான அளவில் உற்பத்தி செய்ய வேண்டும். ஆனால் முன்னரே தீர்மானிக்கப்பட்ட சமூகத் திட்டங்களின் படி முதலாளித்துவ உற்பத்தி நடைபெறுவதில்லை. மாறாக, உற்பத்தி மற்றும் முதலீடு தொடர்பான முடிவுகள் சமூகத் தேவையின் அடிப்படையில் செய்யப்படாமல், ஒவ்வொரு முதலாளியின் முடிவுகளும் தன்னிச்சையாக மற்ற முதலாளிகளின் முடிவுகளைச் சாராமல் செய்யப்படுகிறது. ஆகையால், பல்வேறு கிளைகளில் உற்பத்தி செய்யப்படும் பொருள்களுக்கிடையேயான ‘சரியான’ விகிதாசாரங்கள் - குறிப்பாக உற்பத்தி சாதனங்களுக்கும் நுகர்வு பொருட்களுக்கும் இடையில் - உறுதி செய்யப்படும் என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை. இத்தகைய விகிதப் பொருத்தமின்மையே நெருக்கடி உருவாவதற்கான முக்கியக் காரணமாக அமைகிறது. நுகர்வுப் பொருட்கள் மற்றும் உற்பத்தி சாதனங்கள் ஆகியவை சரியான விகிதாசாரத்தில் உற்பத்தி செய்யப்படாததால், மறுவுற்பத்தியை உறுதிசெய்யும் விதமாக உற்பத்திப் பொருட்களை எதிர்பார்த்த விலைகளில் விற்பது சாத்தியமில்லாமல் போகிறது. முதலாளித்துவத்தின் தான்தோன்றித்தனமான உற்பத்தி முறையால் விகிதப் பொருத்தமின்மையும் அதன் விளைவாகப் பொருளாதார நெருக்கடியும் ஏற்படுகின்றன.

ஒவ்வொரு சரக்கையும் போலவே முதலாளித்துவ பொருளாதாரத்தின் மொத்த உற்பத்தி மதிப்பும் மூன்று பகுதிகளைக் கொண்டுள்ளது. முதலாவதாக, மொத்த உற்பத்திக்குத் தேவையான மாறாமூலதனம் உள்ளது. இரண்டாவதாக உற்பத்தி வேலையில் ஈடுபடுத்தத் தேவையான

மாறுமூலதனமும், இறுதியாக, தொழிலாளி வர்க்கத்தால் உற்பத்தி செய்யப்படும் உபரி மதிப்பும் உள்ளது. உபரி மதிப்பு முதலாளி வர்க்கத்தால் முழுமையாக நுகரப்படும் போது எளிய மறுவுற்பத்தி நடைபெறுகிறது. முதலாளர்கள் உபரி மதிப்பின் ஒரு பகுதியை மூலதனமாக மாற்றும் போது விரிவாக்கப்பட்ட மறுவுற்பத்தி நடைபெறுகிறது. அப்போது, உற்பத்தியை விரிவுபடுத்தும் நோக்கில் உபரி மதிப்பிலிருந்து உற்பத்தி மூலதனத்தின் கூறுகளான , உழைப்பு சக்தி மற்றும் உற்பத்தி சாதனங்கள் வாங்கப்படுகின்றன

.

பொருளாதாரத்தை சமூக உற்பத்தியின் இரண்டு பெரிய துறைகளாகப் பிரிக்கலாம். துறை I உற்பத்தி சாதனங்களை உற்பத்தி செய்கிறது. அதன் தயாரிப்புகள் பல்வேறு உற்பத்திச் செயல்முறைகளில் ஈடுபடுத்தப்பட்ட போதிலும், தனிநபர் நுகர்வுக்கு நேரடியாகப் பயன்படுத்தப்படுவதில்லை. துறை II நுகர்வுப் பொருட்களை உற்பத்தி செய்கிறது. அதன் தயாரிப்புகள் நேரடியாகத் தனிநபரால் நுகரப்படுகின்றன. ஒவ்வொரு துறையிலும் உற்பத்தி செய்யப்படும் மதிப்புகளைக் கீழ்வருமாறு பிரிக்கலாம்.

துறை I:

மொத்த மதிப்பு ($V_I$)

$V_I = c_I+v_I+s_I$

துறை II:

மொத்த மதிப்பு ($V_{II}$)

$V_{II} = c_{II} +v_{II} +s_{II}$

இங்கே $c_I$, $c_{II}$ ஆகியவை முறையே துறை I, துறை IIஇல் ஈடுபடுத்தப்படும் மாறாமூலதனங்கள் ஆகும். $v_I$, $v_{II}$ ஆகியவை முறையே துறை I, துறை IIஇல் ஈடுபடுத்தப்படும் மாறுமூலதனங்கள் ஆகும். $s_I$, $s_{II}$ ஆகியவை முறையே துறை I, துறை IIஇல் ஈடுபடுத்தப்படும் உபரி மதிப்புகள் ஆகும்.

முதலில், எளிய மறுவுற்பத்தியைக் கருத்தில் கொள்வோமானால் துறை-I உற்பத்திச் சாதனங்களைத் தயாரிப்பதால், அவற்றை நேரடியாகத் தனிப்பட்ட முறையில் நுகர முடியாது. ஆகவே, துறை Iஐச் சேர்ந்த முதலாளிகளும், தொழிலாளர்களும் தங்களுக்கான நுகர்வுப் பொருட்களைப் பெறுவதற்கு, துறை Iக்கும் துறை IIக்கும் இடையில் பரிமாற்றம் நடைபெற வேண்டும். அதேபோல், துறை IIஇல் உற்பத்தி பழைய அளவில் தொடர வேண்டுமானால், அதன்

முதலாளிகள் துறை Iஇலிருந்து நுகரப்பட்டதை பதிலீடு செய்யத் தேவையான மாறாமூலதனத்தைப் பெற வேண்டும். இவை சுமுகமாக நடைபெற $v_I$க்கும் $v_{II}$க்கும் இடையே திட்டவட்டமான விகிதாசார உறவு கீழ்கண்டவாறு இருக்க வேண்டும். (i) உற்பத்தி செய்யப்படும் மொத்த உற்பத்திச் சாதனங்களின் மதிப்பு, துறை I மற்றும் துறை IIஇல் பயன்படுத்தப்பட்டவற்றுக்குச் சமமாக இருக்க வேண்டும்.

அதாவது,

$$V_I = c_I+v_I+s_I=c_I+c_{II}$$

அல்லது

(ii) $c_{II} = v_I+s_I$

(ii) நுகர்வுப் பொருட்களின் மொத்த உற்பத்தி மதிப்பு இரு துறைகளின் முதலாளிகள் மற்றும் தொழிலாளர்களால் முழுமையாக நுகரப்பட வேண்டும். அதாவது,

$$V_{II} = c_{II}+v_{II}+s_{II} = v_I+v_{II}+s_I+s_{II}$$

அல்லது

$$c_{II} = v_I+s_{II}$$

மறுவுற்பத்தியை உறுதி செய்ய, துறைகள் I மற்றும் IIக்கு இடையில் மேற்குறிப்பிட்டவாறு ஒரு திட்டவட்டமான விகித உறவை (மதிப்பு அடிப்படையில்) பராமரிக்க வேண்டியது அவசியம்.

முக்கியமாக துறை IIஇல் நுகரப்பட்டவற்றை மாற்றீடு செய்யத் தேவைப்படும் மாறாமூலதனத்தின் அளவு துறை Iஇன் முதலாளிகள் மற்றும் தொழிலாளர்களுக்குத் தேவைப்படும் நுகர்வு பொருட்களின் மதிப்புக்குச் சமமாக இருக்க வேண்டும். எளிதாகச் சொன்னால், துறை ஒன்று, துறை இரண்டிடம் வாங்கியவற்றின் மதிப்பு, துறை இரண்டு, துறை ஒன்றிடம் வாங்கியவற்றின் மதிப்புக்குச் சமமாக இருக்க வேண்டும். ஒரு முதலாளித்துவப் பொருளாதாரத்தில், உற்பத்தி மற்றும் முதலீடு பற்றிய முடிவுகள் பல லட்சக் கணக்கான முதலாளிகள் மற்றும் நிறுவனங்களால் தன்னிச்சையாக எடுக்கப்படுவதால், எளிமையான மறுவுற்பத்தியே நடைபெறுவதாக கொண்டாலும் கூட, இந்த விகிதாசாரச் சமநிலை தானாகவே நிறுவப்படும் என்று எதிர்பார்க்க வாய்ப்பு இல்லை. விரிவாக்கப்பட்ட மறுவுற்பத்தி சீராகத் தொடர வேண்டுமானால் இதையொத்த மேலும் சிக்கலான நிலைமைகள் நிறைவு செய்யப்பட வேண்டும். எனவே, இந்நிலைமைகள் பூர்த்தி செய்யப்படும் என்று எதிர்பார்க்கவும் வாய்ப்பு இல்லை.

உற்பத்தியின் பல்வேறு முக்கியக் கிளைகளின் விளைபொருட்களுக்கிடையே சரியான விகிதாசார உறவுகளை - நுகர்வுப் பொருட்கள் மற்றும் மூலதனப் பொருட்களுக்கு இடையில் - பெறத் தவறும் போது விகிதப் பொருத்தமின்மை நெருக்கடிகள் ஏற்படுகின்றன.

**<u>குறை நுகர்வு:</u>**

முதலாளித்துவத்தில் காணப்படும் ஒரு முக்கியமான ஏற்றத்தாழ்வு முதலாளித்துவத்தின் உற்பத்திச் சக்திக்கும், அதன் நுகர்வுச் சக்திக்கும் இடையிலான முரண்பாட்டை அடிப்படையாகக் கொண்டது. இது உற்பத்திச் சாதனங்கள், நுகர்வுப் பொருட்களின் உற்பத்திக்கு இடையிலான விகிதச் சமமின்மையால் உருவாகிறது.

'நுகர்வு' என்பது இரண்டு வகைப்படும்: 1. தொழிலாளர்கள், முதலாளிகள் ஆகியோரின் தனிநபர் நுகர்வு (உணவு, உடை) 2. உற்பத்திச் சாதனங்களையும், உழைப்புச் சக்தியையும் பல்வேறு உற்பத்திச் செயல்முறைகளில் ஈடுபடுத்தும் உற்பத்தித் திறனுள்ள நுகர்வு.

முதலாளித்துவத்தில் உபரி மதிப்பைப் பெறுவதே உற்பத்தியின் நோக்கம் ஆகும். முதலாளிகளிடையே ஏற்படும் போட்டி மேலும் மேலும் உபரி மதிப்பைப் பெறும் பொருட்டு மூலதனத்தை குவிக்க அவர்களை நிர்ப்பந்திக்கிறது. மூலதனக் குவிப்பு என்பது உற்பத்தித் திறனுள்ள நுகர்வை மேலும் மேலும் அதிகரிப்பதற்காகவே செய்யப்படுகிறது. முதலாளித்துவப் பொருளாதாரத்தில் 'நுகர்வுச் சக்தியின்' ஒரு அங்கமாக உற்பத்தித் திறனுள்ள நுகர்வின் இந்த வளர்ச்சி உள்ளது. முதலாளித்துவத்தில் போட்டியால் ஏற்படும் நிர்ப்பந்தங்களே தனிநபர் நுகர்வு வளர்ச்சியை ஒப்பீட்டளவில் சாராமல் உற்பத்தித் திறனுள்ள நுகர்வு வளரக் காரணமாகிறது.

முதலாளித்துவ உற்பத்தியில் அறுதி உபரி மதிப்பு, ஒப்பீட்டு உபரி மதிப்பு ஆகியவற்றை அதிகரிப்பத்தற்காக மூலதனம் திரட்டப்படுகிறது. உழைப்புச் சக்தியின் மதிப்பைக் குறைக்கும் விதமாகச் சேம உழைப்புப் பட்டாளத்தை பெருக்குவது முதலாளித்துவத்தின் பொது விதிகளில் ஒன்று. ஆனால் முதலாளிகளுக்கு உபரி மதிப்பை உற்பத்தி செய்தால் மட்டும் போதாது, தொழிலாளர் வர்க்கத்தின் உபரி உழைப்பு பொதிந்துள்ள சரக்குகளை உகந்த விலையில் விற்றுப் பணமாக ஈடேற்றம் செய்யவும் வேண்டும். உபரி மதிப்பு ஈடேற்றம் பெறுவது சமூகத்தின் நுகர்வுச் சக்தியை பொறுத்துள்ளது. ஆகவே உபரி மதிப்பை உற்பத்தி செய்வதற்கான

நிபந்தனைகளும், நுகர்வைத் தீர்மானிக்கும் நிபந்தனைகளும் - உபரி மதிப்பின் ஈடேற்றம் - ஒத்தவை அல்ல. இவை இரண்டுமே முரண்பாடான தொடர்புடையவை. நேரடிச் சுரண்டலுக்கான நிபந்தனைகளும் அதை ஈடேற்றம் செய்வதற்கான நிபந்தனைகளும் ஒத்தவை அல்ல. அவை இடத்தால், காலத்தால் மட்டுமல்லாது, தர்க்கரீதியாகவும் வேறுபடுகின்றன. சுரண்டலானது சமூகத்தின் உற்பத்திச் சக்தியால் மட்டுமே வரம்பிடப்படுகிறது, சுரண்டலின் ஈடேற்றத்தைப் பல்வேறு வகையான உற்பத்திகளுக்கிடையேயான விகிதாசார உறவுகளும், சமூகத்தின் நுகர்வு சக்தியும் நிர்ணயிக்கிறது. சமூகத்தின் நுகர்வு சக்தியானது உற்பத்தி சக்தி அல்லது நுகர்வு சக்தியால் மட்டுமே தீர்மானிக்கப்படுவதில்லை. முரண்பாடான விநியோக நிலைமைகளின் கீழ் அமையும் நுகர்வு சக்தியால் தீர்மானிக்கப்படுகிறது, இதுவே சமுதாயத்தின் பெரும்பகுதியினரின் நுகர்வைக் குறைக்கக் காரணமாகிறது.

முதலாளித்துவ உற்பத்தி முறையால் உற்பத்தி சக்திகளில் மிகப்பெரிய வளர்ச்சி ஏற்படுகிறது. முதலாளிகளிடையிலான போட்டியும், உபரி மதிப்புக்கான வேட்கையும், மூலதனத்தைத் திரட்டவும், குறிப்பாக உழைப்பின் உற்பத்தித்திறனை உயர்த்துவதற்கும் கட்டாயப்படுத்துகிறது. இயந்திரங்கள் மற்றும் நவீன தொழிற்துறையின் வளர்ச்சியால் உற்பத்தி செய்யப்படும் ஒப்பீட்டு உபரி மதிப்பு, ஒரே நேரத்தில் சமூகத்தின் உற்பத்தி சக்தியையும் சேமப் பட்டாளத்தையும் பெரிதும் அதிகரிக்கிறது. சேமப் பட்டாளத்தின் வளர்ச்சியும், அதனால் வரம்பிடப்படும் கூலி உயர்வும், இவை இரண்டுமே நுகர்வுக்கான தளத்தை குறுகச் செய்கின்றன. இவ்வாறு உற்பத்தி சக்திகளின் வளர்ச்சிக்கும், முதலாளித்துவ உற்பத்தி உறவுகளுக்கும் இடையிலான முரண்பாடு சமூகத்தின் உற்பத்தி மற்றும் நுகர்வு சக்திகளுக்கு இடையிலான முரண்பாடாக வெளிப்படுகிறது.

முதலாளித்துவத்தில் உற்பத்திக்கும் நுகர்வுக்கும் இடையில் உள்ள அடிப்படை முரண்பாட்டை மார்க்சிய பொருளாதாரம் அறிந்தேற்கிறது. முதலாளித்துவம் உற்பத்தி சக்திகளை வளர்க்கிறது, எனவே சமூகத்தின் உற்பத்தி ஆற்றலை விரைவாக அதிகரிக்கிறது. ஆனால் அதன் உற்பத்தி உறவுகளும் (விநியோகமும்) சமூகத்தின் நுகர்வு சக்தியின் வளர்ச்சியை கட்டுப்படுத்துகின்றன. இந்த முரண்பாடானது முதலாளித்துவத்தின் சாத்தியமற்ற தன்மையையோ அல்லது முதலாளித்துவம் தானே வீழும் என்பது போன்ற எந்த குறுகிய பொருளாதார கண்ணோட்டத்தையோ குறிப்பிடவில்லை, மாறாக, இந்த முரண்பாடு குறை நுகர்வு போக்கையே

குறிக்கிறது. 'குறை நுகர்வு ' என்ற சொல் நிச்சயமாக ஒரு ஒப்பீட்டளவிலான பொருளிலே கூறப்படுகிறது, அதாவது சமூகத்தில் உள்ள உற்பத்தி சக்திகளின் வளர்ச்சியுடன் ஒப்பிடும் போது நுகர்வு சக்தி குறைவாக உள்ளது என்பதையே குறிக்கிறதே தவிர குறை-நுகர்வுவாதிகள் குறிப்பிடுவது போல் அறுதியான பொருளில் கூறப்படவில்லை.

முதலாளித்துவத்தில் நுகர்வுப் பற்றாக்குறையின் காரணமாக வெளிப்புற சந்தைகள் இல்லாமல் உபரி மதிப்பை ஈடேற்றம் செய்ய முடியாது, ஆகையால் விரிவான மறுவுற்பத்திக்கு வாய்ப்பு இல்லை என்பதே ரோசா லக்சம்பர்க் முன்வைக்கும் வாதம். உபரி மதிப்பை கூடுதல் உற்பத்தி மூலதனமாக மாற்றுவதன் மூலமும், முதலாளி வர்க்கத்தின் நுகர்வை மேலும் அதிகரிப்பதன் மூலமும் ஈடேற்றம் செய்து விரிவான மறுவுற்பத்தியை சாத்தியப்படுத்த முடியும் என்பதால் ரோசா லக்ஸம்பர்கின் வாதம் பிழையுடையது,

**லாபவீத வீழ்ச்சிப் போக்கு விதி** :

முதலாளித்துவ நெருக்கடிகளில் ஒரு முக்கிய அங்கமாக குறை- நுகர்வை மார்க்ஸ் அங்கீகரித்தார். இந்த போக்கினால் உற்பத்தியான உபரி மதிப்பை ஈடேற்றம் செய்வதில் அவ்வப்போது நேரிடும் சிரமங்களினால்- முதலாளிகள் தங்களது சரக்குகளை அதன் உற்பத்தி விலையில் விற்க முடிவதில்லை- பொருளாதார நெருக்கடி ஏற்படுகிறது. ஆனால் உற்பத்தியின் கிளைகளுக்கிடையே காணப்படும் விகிதபொறுத்தமின்மை, குறை-நுகர்வு ஆகியவை மட்டுமே முதலாளித்துவ பொருளாதார நெருக்கடிகளுக்கான மூல காரணங்களாக மார்க்ஸ் கருதவில்லை. முதலாளித்துவத்தின் ஒரு அடிப்படையான போக்கை ஆராய்வதில் அவர் கணிசமான கவனம் செலுத்தினார், அதை லாபவீத வீழ்ச்சி நோக்கிய போக்கு குறித்த விதியாக விவரித்தார். முதலாளித்துவ மூலதனத்திரட்டல் செயல்முறையிலிருந்து இந்த விதியை எளிதாக வருவிக்கலாம்.

சமூகத்தின் உபரி மதிப்பு முழுவதும் முதலாளி வர்க்கத்தால் தனதாக்கப்படுகிறது. சமூக உற்பத்தியில் பயன்படுத்தப்படும் மொத்த சமூக மூலதனத்தை மாறா மூலதனம்(c) மற்றும் மாறு மூலதனம் (v) என இரண்டு பகுதிகளாகப் பிரிக்கலாம். சமூக உபரி மதிப்பை (s) மொத்த மாறும் மூலதனத்தால்(v) வகுப்பதன் மூலம் ($s' = s/v$) சுரண்டல் வீதத்தை (உபரிமதிப்பு வீதத்தை) பெறலாம். ஆனால் முதலாளித்துவம் விரும்புவது உபரி மதிப்பு வீதத்தை அப்படியே அல்ல,

அவர்களின் அக்கறை எல்லாம் இலாப வீதத்தில் தான் உள்ளது.

இலாப விகிதம் ஒரு சமூக சராசரியாக வருவிக்கப்படுகிறது.

p= s/c+v

p = இலாப வீதம், s = சமூகத்தின் மொத்த உபரி மதிப்பு, v = சமூக உற்பத்தியில் பயன்படுத்தப்படும் மொத்த மாறு மூலதனம், c = சமூக உற்பத்தியில் பயன்படுத்தப்படும் மொத்த மாறா மூலதனம்.

தொழிலாளி வர்க்கத்திற்கும், முதலாளி வர்க்கத்துக்கும் இடையிலான வர்க்கப் போராட்டம் மற்றும் போட்டி ஆகியவற்றின் விளைவாக மாறாமூலதனத்தின் பயன்பாட்டை அதிகரிப்பது முதலாளித்துவ உற்பத்தி முறையின் அடிப்படையான போக்காக உள்ளது. எனவே முதலாளித்துவத்தில் மூலதனத் திரட்டல் தொடரும் போது, மூலதனத்தின் அங்கக மதிப்பு (c/v) தொடர்ந்து அதிகரிக்கும். அதே நேரத்தில், உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியால் ஒப்பீட்டு உபரி மதிப்பின் உற்பத்தியும் அதிகரிக்கும். ஆகையால் சுரண்டல் வீதமும் (s/v) மேலும் அதிகரிக்கும், அதுவே c/v அதிகரிப்புக்கும் வழிவகுக்கும்.

இலாப வீதத்தில் ஒன்றுக்கொன்று எதிரான சக்திகள் செயல்படுகின்றன. மாறுமூலதனத்தை விட மாறாமூலதனத்தை ஒப்பீட்டளவில் அதிகமாகப் பயன்படுத்துவது லாபவீதத்தைக் குறைக்கும். ஆனால் உற்பத்தித்திறனில் ஏற்படும் அதிகரிப்பும் அதனால் உயரும் சுரண்டல் வீதமும் (s/v) லாபவீதத்தை அதிகரிக்கும். மூலதனத் திரட்டல் தொடரும் போது லாப வீதம் வீழ்ச்சியடையும் போக்கு ஏற்படும் என்று மார்க்ஸ் குறிப்பிடுகிறார்.

முதலாளித்துவ உற்பத்தி முறையில், தொழில்நுட்ப வளர்ச்சியால், அதிக இறந்த உழைப்பை பயன்படுத்தும் போக்கு உருவாகிறது. மாறாமூலதனத்துடன் ஒப்பிடும் போது மாறுமூலதனத்தின் அளவு ஒப்பீட்டளவில் குறைக்கப்படுகிறது. இதன் விளைவாக மொத்த மூலதனத்தின் அங்கக மதிப்பு தொடர்ச்சியாக அதிகரிப்பதால் பொது இலாப வீதம் வீழும் போக்கு ஏற்படுகிறது.

பொது இலாப வீதத்தின் வீழும் போக்கு குறித்த விதியின் மூலம் மார்கஸ் முதலாளித்துவத்தின் அடிப்படை முரண்பாட்டை வெளிப்படுத்தினர். இலாப வீதம் வீழ்ச்சியடையும் போக்கை எதிர்க்கும்

சக்திகளும் செயல்படுவதாக மார்க்ஸ் குறிப்பிடுகிறார். லாப வீத வீழ்ச்சியை எதிர்கொள்ளும் போது, முதலாளிகள் உழைப்புச் சுரண்டலைத் தீவிரப்படுத்த முயற்சிக்கின்றனர். உழைப்புச் சக்தியின் மதிப்பிற்குக் குறைவாக கூலி அளிக்கின்றனர். (இதில் சேம உழைப்புப் பட்டாளத்தின் இருப்பு அவர்களுக்கு உதவுகிறது). மூலதனத்  திரட்டலின் மூலம் உழைப்பின் உற்பத்தித் திறன் அதிகரிக்கப்படுவதால் வேலையற்றோரின் எண்ணிக்கை (சேம உழைப்புப் பட்டாளம்) அதிகரிக்கிறது. இதனால் அதிக மாறுமூலதனத்தையும், குறைந்த மாறாமூலதனத்தையும் கொண்டு உற்பத்தி செய்யும் முறைகள் பயன்படுத்தப்பட்டு அங்கக மதிப்பின் உயர்வும், லாப வீதத்தின் வீழ்ச்சியும் தடுக்கப்படுகிறது. கூடுதலாக இரண்டு எதிர்ச் சக்திகள் செயல்படுகின்றன. முதலாளித்துவ மூலதனத் திரட்டலின் உள்ளார்ந்த இயந்திரமயம் மாறா மூலதனத்தின் அதிகரிப்பைக் குறிக்கிறது. ஆனால் உற்பத்தி சாதனங்களின் உற்பத்தியிலும் உழைப்பின் உற்பத்தித்திறன் அதிகரிப்பதால், மாறாமூலதனத்தின் மதிப்பு மலிவாக்கப்படுகிறது. எனவே ஓரலகு மாறுமூலதனத்துக்கு அதிக அளவில் மாறா மூலதனம் பயன்படுத்தப்பட்டாலும், அங்கக மதிப்பு அதிகரிக்காமல் தடுக்கப்படுகிறது. வெளிநாட்டு வர்த்தகத்தின் மூலம் பெறப்படும் மலிவான மூலப் பொருட்களாலும், இயந்திரங்களாலும் அங்கக மதிப்பின் அதிகரிப்பும் லாப வீழ்ச்சியும் தடுக்கப்படுகின்றன.

முதலாளித்துவத்தில் நெருக்கடி தொடங்கியவுடன், பல்வேறு நிகழ்முறைகளின் மூலம் இயல்புநிலை  மீட்டெடுக்கப்படுகிறது.  பல நிறுவனங்கள் மூடப்படுகின்றன, இதனால் சமூக மூலதனத்தில் ஒரு குறிப்பிட்ட பகுதி செயல்படாமல் தடுக்கப்படுகிறது. செயலின்மையாலும், தேய்மானத்தாலும் மூலதனம் அதன் மதிப்பை இழக்கிறது. இலாப வீதம் வீழ்கிறது. சரக்குகளின் விலைகள் வீழ்ச்சியடைகின்றன. சரக்குகளின் விலைகள் குறைவதால், மாறாமூலதனம் மற்றும் சுற்றோட்ட மூலதனத்தின் மதிப்பில் வீழ்ச்சி ஏற்படுகிறது. நெருக்கடியால் ஏற்பட்ட விலைவீழ்ச்சியால் மூலதன மறுவுற்பத்தி பாதிக்கப்படுகிறது. மூலதனத்தை மீட்டெடுக்க முடியாத முதலாளிகளால், மறுவுற்பத்தியை அதே அளவில் தொடர முடியாமல் போகிறது. கடன்களைத் திருப்பிச் செலுத்த முடியாததால் பலர் கடன் நெருக்கடியால் பாதிக்கப்படுகின்றனர். மூலதன மதிப்பிழப்பும், கடன் நெருக்கடியும் ஆயிரக்கணக்கான தொழிலாளர்களைப் பணிநீக்கம் செய்வதற்கும் கூலியை மேலும் குறைக்கவும் வழிவகுக்கும். இவை அனைத்தின் ஒட்டுமொத்த விளைவாக மூலதனம் மலிவாக்கப்படுவதால் உற்பத்திசாதனங்கள் மாற்றீடு செய்யப்படுவதாலும்,

குறைந்த கூலியில் உழைப்புச் சக்தி வாங்கப்படுவதாலும், இலாப வீதம் உயர்ந்து பொருளாதாரம் நெருக்கடியிலிருந்து மீட்கப்படும். இலாப விகிதம் வீழ்ச்சியடையும் போக்கே முதலாளித்துவப் பொருளாதார நெருக்கடிகளுக்கான மூல காரணம் என்பதையும், நெருக்கடிகளின் மூலமே இலாப வீதம் மீட்கப்பட்டு முதலாளித்துவ விரிவாக்கம் புதுப்பிக்கப்படுகிறது என்பதையும் மார்க்ஸ் கண்டறிந்தார்.

**நெருக்கடியும் சுழற்சியும்:**

அவ்வப்போது பொருளாதார நெருக்கடிகள் ஏற்படுவது முதலாளித்துவத்தின் பண்புகளில் ஒன்றாக உள்ளது. முதலாளிகள் எதிர்பார்த்த அளவிற்கு லாபத்தை ஈட்ட இயலாமல் இழப்போ அல்லது லாபக் குறைவோ ஏற்படுகிறது. பொருட்களை விற்க இயலாத சூழல் ஏற்படுகிறது. அதிக எண்ணிக்கையிலான தொழிலாளர்கள் பணிநீக்கம் செய்யப்படுகிறார்கள். நெருக்கடிகள் முதலாளித்துவத்தின் சில அடிப்படை உள் முரண்பாடுகளின் விளைவாக ஏற்படுகின்றன. அதன் திட்டமிடப்படாத தன்மை (விகிதப் பொருத்தமின்மை); உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சி நிகழ்முறையின் உள்ளார்ந்த முரண்பாடுகள் (இலாப விகிதம் வீழ்ச்சியடையும் போக்கு); மற்றும் முதலாளித்துவ சமூக உற்பத்திச் சக்திகளின் விரைவான வளர்ச்சிக்கும், சமூக நுகர்வுச் சக்தியின் மட்டுப்படுத்தப்பட்ட வளர்ச்சிக்கும் இடையிலான முரண்பாடு (குறை-நுகர்வுப் போக்கு) ஆகிய காரணங்களால். நெருக்கடிகளின் மூலம்தான் முதலாளித்துவ விரிவாக்கம் மீண்டும் நிகழக் கூடிய நிலைமைகள் மீட்டெடுக்கப்படுகின்றன. நெருக்கடிகளே (i) தேய்மானத்தாலும், செயலின்மையாலும் மாறாமூலதனம் மற்றும் சுற்றோட்ட மூலதனத்தின் கூறுகள் விரைவாக மதிப்பிழக்க அனுமதிப்பதன் மூலமாகவும், உற்பத்திச் சாதனங்களின் விலைச் சரிவினாலும், (ii) சேம உழைப்புப் பட்டாளத்தின் அளவை அதிகரித்து கூலியைக் குறைத்தும் இந்த பணியைச் செய்கின்றன. பொருளாதார நெருக்கடிகள், முதலாளித்துவ உற்பத்தி முறையின் அடிப்படை பொருளாதார முரண்பாடுகளின் வெளிப்பாடாகவும், அதற்கான முதலாளித்துவ ‘தீர்வு’ ஆகவும் உள்ளன. இந்தத் தீர்வு, முதலாளித்துவ கோட்பாடுகள் கூறுவது போல் நிச்சயமாக, முதலாளித்துவ வர்க்கத்தின் பிரதிநிதிகளால் விழிப்புணர்வுடன் தீர்மானிக்கப்படுகிற ஒன்றல்ல. தனிநபர்களின் விருப்பத்திற்கு மாறாக புறவயமான நெறிகளால் இவை முதலாளித்துவப் பொருளாதாரத்தின் மீது திணிக்கப்படுகின்றன.

முதலாளித்துவப் பொருளாதாரத்தின் வளர்ச்சிப் பாதையில் அடுத்தடுத்து வரும் முதலாளித்துவ

விரிவாக்கமும், பொருளாதார நெருக்கடிகளும் இடம்பெறுதையும், அத்தகைய வடிவமே முதலாளித்துவத்தின் இயக்கத்தின் அடிப்படை நியதியாக இருப்பதையும் மார்க்சியப் பகுப்பாய்வு அறிந்தேற்கிறது. இது முதலாளித்துவப் பொருளாதாரத்தில் சமநிலையையும் ஒத்திசைவையும் காண்பதாகப் பாசாங்கு செய்யும் சமகால முதலாளித்துவப் பொருளாதாரக் கோட்பாட்டிற்கும், முதலாளித்துவப் பொருளாதாரத்தின் முரண்பாடான தன்மையிலிருந்து அதன் சாத்தியமற்ற தன்மையை ஊகிக்கும் குட்டி-முதலாளித்துவ கற்பனாவாதப் போக்குகளுக்கும் முற்றிலும் மாறுபட்டது.

(தொடரும்)

---

## டாலருக்கு வந்த வாழ்வு (7):

## டாலரை நீக்கிப் பன்முனைத்துவத்தை நோக்கி:

### சமந்தா

அமெரிக்க டாலர்களில் செய்யப்படும் எந்தவொரு பரிவர்த்தனையும், அமெரிக்க சட்ட அதிகார எல்லைக்குள் கொண்டுவரப்படுகிறது. இதையே கருவியாகப் பயன்படுத்தி அமெரிக்கா பொய்க் குற்றச்சாட்டுகளால் பிற நாடுகளைப் பொருளாதாரத் தடைகளுக்குட்படுத்தி அந்நாடுகளின் முக்கிய அலுவலர்கள், தனிநபர்களின் பொருளாதார நடவடிக்கைகளை முடக்கி வருகிறது. ரஷ்யா, ஈரான், வெனிசுலா, கியூபா, சூடான், ஜிம்பாப்வே, மியான்மர், காங்கோ, வட கொரியா சீனா, பாகிஸ்தான் மற்றும் துருக்கி எனப் பல நாடுகளின் மீது அமெரிக்கா பொருளாதாரத் தடைகள் விதித்துள்ளது. இதனால் அந்த நாடுகள் மட்டுமல்லாது அந்நாடுகளுடன் பரிவர்த்தனை செய்து வந்த பிற நாடுகளும், நிறுவனங்களும் கூட பாதிக்கப்படுகின்றன. இதனால் அமெரிக்காவின் பகை நாடுகள் மட்டுமல்லாது, நட்பு நாடுகளும் கூட டாலர் ராஜ்யத்தை விட்டு வெளியேறி ஒரு மாற்றுக் கட்டமைப்பை உருவாக்க வேண்டியதன் அவசியத்தை உணர்ந்துள்ளன. அதுவே பல்முனைத்துவ நாணய முறையை ஏற்பதற்கான காரணமாகவும் உள்ளது. தகவல் தொழில் நுட்ப வளர்ச்சியும், கிரிப்டோ நாணயங்களின் வளர்ச்சியும், டாலரின் மேலாதிக்கத்திலிருந்து விடுபட ஒரு மாற்று வாய்ப்பை அளித்துள்ளன.

டாலர் மீதான நம்பிக்கையின்மையால் நெதர்லாந்து, ஜெர்மனி, ரஷ்யா, சீனா, பெல்ஜியம், ஆஸ்திரியா, துருக்கி, அஸெர்பைஜன் ஆகிய நாடுகள் அமெரிக்காவில் உள்ள தங்களது தங்கச்

சேமிப்புகளை திரும்பப் பெற்றுள்ளன. அமெரிக்காவுக்குக் கடனளித்த நாடுகளான சீனா, ரஷ்யா, ஜப்பான், ஐக்கிய முடியரசு, அயர்லாந்து, சுவிட்சர்லாந்து, லக்ஸம்பர்க், கனடா, மெக்சிகோ, துருக்கி ஆகியவை அமெரிக்க பத்திரங்களிலான முதலீடுகளைக் குறைத்து டாலர் மதிப்பிலான சொத்துக்களிலிருந்து வெளியேறியுள்ளன. வளரும் நாடுகள், எண்ணெய் உற்பத்தி நாடுகள் அனைத்துமே டாலரின் மேலாதிக்கத்தால் பாதிக்கப்பட்டுள்ளன.

பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா ஆகிய நாடுகளை ஒன்றிணைத்து 2009இல் உருவாக்கப்பட்ட பிரிக் (BRIC) கூட்டமைப்பு சர்வதேச அரங்கில் வளரும் நாடுகளின் அரசியல் செல்வாக்கை மேம்படுத்த வேண்டும் என்ற இலக்குடன் உருவாக்கப்பட்டது. 2009 ஜூன் 16இல் ரஷ்யாவின் யெகாடெரின்பர்க் நகரில் நடைபெற்ற முதல் உச்சி மாநாட்டில் உலக நிதி அமைப்பில் சீர்திருத்தத்தை ஏற்படுத்த வேண்டும் என்றும், ஐக்கிய நாடுகள் சபை போன்ற சர்வதேச அமைப்புகளில் வளரும் நாடுகளின் பிரதிநிதித்துவத்தையும், அதிகாரத்தையும் அதிகரிக்க வேண்டும். டாலரின் மேலாதிக்கத்தை குறைத்து, பன்முகப்படுத்தப்பட்ட சர்வதேச நாணய அமைப்பை உருவாக்க வேண்டும் என்றும் அறிக்கையிடப்பட்டது. 2010இல் தென் ஆப்பிரிக்காவையும் இணைத்து ஐந்து நாடுகளின் கூட்டமைப்பாக விரிவடைந்த 'பிரிக்ஸ்' உலக மக்கள்தொகையில் 40 சதவீதத்தினரைக் கொண்டுள்ளது.

2020 ஜூனில் ரஷ்ய வர்த்தக அமைச்சர் டெனிஸ் மந்துரோவ், வர்த்தகப் பரிவர்த்தனைகளில் அமெரிக்க டாலரின் பயன்பாட்டைக் கைவிட பிரிக்ஸ் நாடுகளுக்கு அழைப்பு விடுத்தார். தேசிய நாணயங்களில் செய்யப்படும் பரிவர்த்தனைகளின் அளவை அதிகரித்து வாஷிங்டனின் கொள்கைகளிலிருந்து விடுபட்டுத் தற்சார்பைக் கடைபிடிக்குமாறும், அதன் மூலம் தமது நாடுகளின் பொருளாதாரங்களின் நிலைத் தன்மையை அதிகரித்து, அமெரிக்காவின் கொள்கைகள் மீதான சார்பைக் குறைக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார். இதற்காகவே உருவாக்கப்பட்ட பிரிக்ஸ் புதிய வளர்ச்சி வங்கியை (என்.டி.பி) மிகவும் முனைப்புடன் பயன்படுத்துமாறும் மந்துரொவ் சக அமைச்சர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

தேசிய நாணயங்களில் வர்த்தகம் செய்ய வேண்டும் என்பது பிரிக்ஸ் ஒத்துழைப்பின் முக்கிய அம்சமாகும். அதை இலக்காகக் கொண்டே 2014 ஜூலை 15ஆம் நாள் புதிய வளர்ச்சி வங்கி உருவாக்கப்பட்டது. உலக வங்கி, ஆசிய வளர்ச்சி வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியம்

போன்ற சர்வதேச நிதி நிறுவனங்களுக்கு சவாலாகவும், மாற்றாகவும் இந்த வங்கி ஆசியாவில் நிறுவப்பட்டது. பிரிக்ஸின் புதிய வளர்ச்சி வங்கி, 2015ஆம் ஆண்டிலிருந்து நிதிகளைத் தேசிய நாணயங்களில் அளிக்கிறது. 2020 ஏப்ரலில் பிரிக்ஸ் நிதி அமைச்சர்களுடனான ஆளுநர் குழுவின் சந்திப்பின் போது, அவ்வங்கியின் தலைவர் கே.வி. காமத் 2019 ஆம் ஆண்டில், 15 பில்லியன் அமெரிக்க டாலர் அளவிலான நிதி உதவி தேசிய நாணயங்களில் வழங்கப்பட்டதாகவும், இவ்வங்கி தன் நிதித் திட்டங்களில் 50 சதவீத நிதியுதவியைத் தேசிய நாணயங்களிலேயே அளிக்க உள்ளதாகவும், தற்போதுள்ள சர்வதேச வளர்ச்சி வங்கிகளால் கோரப்படும் விரும்பத்தகாத நிபந்தனைகளை விடக் குறைவாகவே இவ்வங்கி விதிக்கும் என்றும் குறிப்பிட்டுள்ளார். கடனானது உறுப்பு நாடுகளின் நாணயத்திலே வழங்கப்படும். பொதுவாக்க் கடன் பெறும் போது வட்டி விகிதம் முக்கியமானதாகக் கருதப்படுகிறது. ஆனால் வளரும் நாடுகள் வலுவான சர்வதேச நாணயங்களில் நிதிக் கடன் பெறும் போது எதிர்கொள்ளும் ஒரு பெரிய ஆபத்து நாணயத்தின் பரிமாற்ற விகிதத்தில் ஏற்படும் ஏற்ற இறக்கமாகும். இதனால் அந்நாடுகளின் கடனளவானது அதன் உண்மையான மதிப்பைக் காட்டிலும் 15-20% அதிகரித்திருப்பதாகவும் அதற்குப் பதிலாக அந்த நாடுகளின் தேசிய நாணயத்திலே கடன் பெற்றால் கடன் சுமை கணிசமாகக் குறையும் என்றும் கூறுகிறார் காமத்.

பிரிக்ஸ் உறுப்பு நாடுகளின் நாணயங்களைத் தேவைப்படும் போது பரிமாற்றிக் கொள்ள ஒரு நாணயப் பரிமாற்ற ஒப்பந்தமும், குறுகிய காலப் பணப் புழக்க அழுத்தங்களைத் தடுக்கவும், நிதிச் சமநிலையை ஏற்படுத்தவும் 100 பில்லியன் அமெரிக்க டாலர் ஆரம்பத் தொகையில் அவசரகால இருப்பு ஏற்பாட்டிற்கான (சிஆர்ஏ) ஒப்பந்தமும் பிரிக்ஸ் கூட்டமைப்பில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பிரிக்ஸ் கூட்டமைப்பில் உள்ள பிரேசில் மற்றும் இந்தியா இரு நாடுகளின் தலைவர்களான பொல்ஸனாரோவும், நரேந்திர மோடியும் அமெரிக்காவின் நெருங்கிய நண்பர்களாக உள்ளனர் என்பதால் பிரிக்ஸ் கொள்கைகளுக்கு ஒத்துழையாது பின்னடைவை ஏற்படுத்துகின்றனர். ஆனால் ரஷ்யா ஆரம்பத்திலிருந்தே டாலர் ஆதிக்கத்தை குறைப்பதில் உறுதியாய் இருந்தது. சீனா அமெரிக்காவிற்குப் பெருமளவில் ஏற்றுமதி செய்ததாலும், பெரும் முதலீடுகளை அமெரிக்காவில் கொண்டிருந்ததாலும், ஆரம்பத்தில் வெளிப்படையாக டாலரை எதிர்க்கவில்லை. அமெரிக்காவே சீனாவின் மீது பொருளாதாரப் போரை ஆரம்பித்த பிறகுதான் ரஷ்யாவுடன் இணைந்து சீனா டாலரை விலக்கும் நடவடிக்கைகளில் முனைப்பாகச் செயல்படுகிறது. ரஷ்யாவும் சீனாவும்

கடந்த பல ஆண்டுகளாக இருதரப்பு வர்த்தகத்தில் டாலரின் பயன்பாட்டை வெகுவாகக் குறைத்துள்ளன. சீனா-ரஷ்யா இருதரப்பு வர்த்தகத்தில் அமெரிக்க டாலரின் பயன்பாடு 2015ஆம் ஆண்டில் 90%ஆக இருந்தது தற்போது 46%ஆகக் குறைந்துள்ளது. சீனாவுக்கும் ரஷ்யாவிற்கும் இடையிலான வர்த்தகத்தில் அமெரிக்க டாலர் பயன்பாடு ஒவ்வொரு ஆண்டும் 10% குறைந்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. 2019 ஜூனில் மாஸ்கோவும் பெய்ஜிங்கும் டாலருக்குப் பதிலாக ரூபிள் மற்றும் ரென்மின்பியில் தங்களுக்கு இடையிலான சர்வதேசப் பரிவர்த்தனை செய்வதாக ஒப்பந்தம் மேற்கொண்டன.

2001இலேயே, சீனாவுக்கும் ரஷ்யக் கூட்டமைப்பிற்கும் இடையில் நல்ல அண்டை நாட்டு நட்புக்கான ஒத்துழைப்பு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது. 2010இல் ரஷ்ய நிதி நெருக்கடியின் போது சீனா நிதியுதவி அளித்தது. 2015ஆம் ஆண்டில் ரஷ்யாவுக்கும் சீனாவுக்கும் இடையே வர்த்தகம் தொடர்பான நாற்பது ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டன. இந்த வர்த்தக ஒப்பந்தங்கள் அடுத்த 30 ஆண்டுகளுக்கு ரஷ்ய எரிவாயுவை 400 பில்லியன் டாலருக்கும் அதிகமாக வாங்கவும், கிழக்கு ஐரோப்பா, தென்கிழக்கு ஆசியா மற்றும் ஆப்பிரிக்காவிற்கு ரஷ்யப் பொருட்களைக் கொண்டு செல்வதற்கும் சீனா உதவ முன்வந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.

2018இல் ரஷ்யா வாங்க வேண்டிய ஆயுதங்களுக்கான 20% பரிவர்த்தனைகளை அமெரிக்கா தடுத்தது. அமெரிக்காவால் ரஷ்யாவின் சர்வதேச பரிவர்த்தனைகள் தடுக்கப்படுவதால் ஸ்விஃப்டு முறைக்கு மாறாக எஸ்.எஃப்.பி.எஸ் நிதிச் செய்திகளை அனுப்பும் அமைப்பை உருவாக்கி அதன் மூலம் 18% பணப் பரிவர்த்தனைகளைச் செய்துள்ளது. இவ்வாறு ரஷ்யாவும் சீனாவும் ஸ்விஃப்ட்டுக்கு இணையான எல்லை தாண்டிய வங்கிக் கட்டண முறைகளைப் பயன்படுத்துகின்றன. நவம்பர் 2016இல் ரஷ்யா செயிண்ட் பீட்டர்ஸ்பர்க் சர்வதேசப் பங்குச் சந்தையில் உரால் கச்சா எண்ணெய் வருங்கால ஒப்பந்தங்களை ரூபிளில் அறிமுகம் செய்தது. அமெரிக்கப் பொருளாதாரத் தடைகளிலிருந்து விடுபட புதிய தொழில்நுட்பத் தீர்வுகளும் ஆலோசிக்கப்பட்டு பிரிக்ஸ் 2018 உச்சி மாநாட்டில் பிரிக்ஸ் நாடுகளுக்கான மின்ம(கிரிப்டோ) நாணயம் உருவாவதற்கான திட்டமும் விவாதிக்கப்பட்டுள்ளது. ரஷ்ய மத்திய வங்கி "கிரிப்டோரூபிள்" என்று அழைக்கப்படும் ஒரு தேசிய கிரிப்டோ நாணயத்தை உருவாக்கப்

பரிசீலித்து வருகிறது. வெனிசுலா கிரிப்டோகரன்சியான "பெட்ரோ"வை அறிமுகப்படுத்த ரஷ்யா உதவியது. ஐரோப்பிய நாடுகள் இன்ஸ்டெக்ஸ் என்ற கிரிப்டோ நாணயத்தின் மூலம் ஈரானுடன் வர்த்தகம் செய்கிறது. சீன மத்திய வங்கி மின்ம நாணயத்தின் வளர்ச்சியை விரைவுபடுத்தி அதை நாட்டின் பிற நிதி நிறுவனங்களுடன் ஒருங்கிணைக்கத் திட்டமிட்டுள்ளது.

2020 மார்ச்சில் சீனா, ரஷ்யா, மத்திய ஆசிய நாடுகள், இந்தியா, பாகிஸ்தான் ஆகியவற்றை உள்ளடக்கிய ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் நிதியமைச்சர்களின் மாநாட்டில் இருதரப்பு வர்த்தகம், முதலீடுகள், பரிவர்த்தனைகள், கடன் பத்திரங்களை தேசிய நாணயங்களில் செய்வதற்கான ஒரு திட்டத்தை இறுதி செய்வதற்கான பரிந்துரைகளை அனுப்ப ஒப்புதல் பெறப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

துருக்கிக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான நிதி மோதல் வெடித்த பின், வர்த்தகத்தில் டாலரை விலக்குவதாக துருக்கி அறிவித்தது. ரஷ்யா துருக்கியை டாலர் எதிர்ப்பு முகாமில் சேர்க்க ஆதரவளித்தது. ஜோகன்னஸ்பர்க்கில் நடந்த பிரிக்ஸ் உச்சி மாநாட்டில் துருக்கி, ஜமைக்கா, இந்தோனேசியா, அர்ஜெண்டினா மற்றும் எகிப்து போன்ற நாடுகளை டாலர் மேலாதிக்கத்திற்கு எதிராக பிரிக்ஸ் பிளஸில் இணையுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியம் (ஐ.எம்.எஃப்) எட்டு உலக இருப்பு நாணயங்களை அங்கீகரிக்கிறது: அவை அமெரிக்க டாலர், யூரோ, சீன ரென்மின்பி (சீனாவுக்குள் யுவான் என்றழைக்கப்படுகிறது), ஜப்பானிய யென், பிரிட்டிஷ் பவுண்டு, ஆஸ்திரேலிய டாலர், கனடிய டாலர் மற்றும் சுவிஸ் பிராங்க். சீன நாணயம் ரென்மின்பி 2016இல் சர்வதேச இருப்பு நாணயமாக அங்கீகரிக்கப்பட்டது. ரஷ்யா தன் அந்நிய செலாவணி இருப்புக்களில் ரென்மின்பியின் பங்கை அதிகரித்து வருகிறது. 2019ஆம் ஆண்டின் முற்பகுதியில், ரஷ்யாவின் மத்திய வங்கி அதன் டாலர் பங்குகளைப் பாதிக்கும் மேலாக (101 பில்லியன் டாலர்) குறைத்துள்ளது. ரஷ்ய மத்திய வங்கி சீன ரென்மின்பியில் 44 பில்லியன் டாலர் அளவுக்கு முதலீடு செய்த பின் ரஷ்யாவின் அந்நிய

செலாவணி இருப்புகளில் ரென்மின்பியின் பங்கு 5 சதவீதத்திலிருந்து 15 சதவீதமாக உயர்ந்தது, உலகின் ரென்மின்பி இருப்புக்களில் கால்வாசியை ரஷ்யா வைத்துள்ளது. ரென்மின்பியின் சர்வதேசப் பயன்பாட்டை விரிவுபடுத்துவதற்காக வடிவமைக்கப்பட்ட உள்கட்டமைப்புத் திட்டங்கள் மற்றும் பொருளாதார மண்டலங்களின் பரந்த வலையமைப்பை சீனா உருவாக்கி வருகிறது. தற்போது 1900க்கும் மேற்பட்ட நிதி நிறுவனங்கள் சீன யுவானைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவந்துள்ளன. யுவான் பத்திரங்களிலான அந்நிய முதலீடுகள் அதிகரித்துள்ளன. கோவிட்-19 தாக்கத்தால் சீனாவிலிருந்து முதலீடுகள் வெளியேறிய போதும் அந்நாடு ஒப்பீட்டளவில் பொருளாதார நிலைத் தன்மையுடன் உள்ளது.

2009 ஜூலை 10இல் ரஷ்ய அதிபர் மெத்வதெவ் லண்டனில் நடைபெற்ற ஜி-8 மா நாட்டில் டாலருக்கு மாற்றாக ஒரு புதிய உலக நாணயத்தை உருவாக்க வேண்டும் என்று முன்மொழிந்தார். ஐ.நா வர்த்தகம் மற்றும் வளர்ச்சிக்கான பேரவை 2010இல் வெளியிட்ட ஒரு அறிக்கையில் அமெரிக்க டாலர் ஒரே இருப்பு நாணயமாக, உலகப் பணமாக இருக்கும் நிலையைக் கைவிட வேண்டும் என்றும், ஒரு புதிய இருப்பு நாணயத்தை உருவாக்க வேண்டும், ஆனால் அது ஒரு நாட்டினுடைய நாணயம் அல்லது பல நாடுகளுடைய நாணயங்களின் அடிப்படையில் அமையாமல் சர்வதேசப் பணப் புழக்கத்தை அனுமதித்து உலக அளவில் நிதிச் சமநிலையை ஏற்படுத்துமாறு அமைய வேண்டும் என்றும் கோரப்பட்டது. ஜி-20 நாடுகளுக்கான சந்திப்பிலும் இது குறித்த விவாதங்கள் நடைபெற்றன.

1997இல் ஏற்பட்ட ஆசிய நிதி நெருக்கடிக்குப் பிறகு தாய்லாந்து, இந்தோனேசியா, கொரியா ஆகிய நாடுகள் நிதியுதவிக்காக சர்வதேச நாணய நிதியத்தை நாடின. அதன் நிபந்தனைகளின் படி மேற்கொள்ளப்பட்ட அரசு சிக்கன நடவடிக்கைகள் அந்நாடுகளில் கூலிக் குறைப்பையும், வேலையின்மையையும் அதிகப்படுத்தி அந்நாட்டு மக்களை மேலும் வறுமைக்கு தள்ளின. சர்வதேச நாணய நிதியத்தின் கடுமையான நிபந்தனைகள் அந்நாடுகளிடையே கடும் அதிருப்தியை ஏற்படுத்தின. நிதியுதவி பெறுவதற்கான மாற்று அமைப்புகளை ஏற்படுத்த

வேண்டியதன் அவசியம் விவாதிக்கப்பட்டது.

1997 செப்டம்பர் 20-25ல் ஹாங்காங்கில் நடந்த ஜி7-சர்வதேச பண நிதியத்தின் சந்திப்பில் போது ஜப்பானிய அரசு அப்போதைய மற்றும் எதிர்காலப் பொருளாதார நெருக்கடியைச் சமாளிக்க ஆசிய நாடுகளால் நிதியளிக்கப்பட்ட பிராந்திய வலையமைப்பை அமைப்பதற்கு ஒரு ஆசியப் பண நிதியம் உருவாக்க வேண்டும் என்ற முன்மொழிவைக் கொண்டுவந்தது. ஆனால் அமெரிக்காவின் கடும் எதிர்ப்பின் காரணமாக அத்திட்டத்தை நடைமுறைப்படுத்தவில்லை. எங்கே இதன் மூலம் ஜப்பானின் ஆதிக்கம் ஓங்கி விடுமோ என்று ஜப்பானை போட்டியாகக் கருதிய ஆஸ்திரேலியாவும், சீனாவும் அத்திட்டத்தை ஆதரிக்கவில்லை.

ஆசிய நிதி நெருக்கடிக்குப் பின்னர், ஆசிய வளர்ச்சி வங்கியின் நிர்வாகிகளுக்கான வருடாந்திர சந்திப்பில் தென்கிழக்கு ஆசிய நாடுகளின் கூட்டமைப்பான ஆசியனின் பத்து உறுப்பு நாடுகள், சீனா, ஜப்பான் மற்றும் தென் கொரியா (ஆசியான் பிளஸ் மூன்று நாடுகள்) பிராந்தியத்தில் குறுகிய காலப் பணப்புழக்க சிக்கல்களை நிர்வகிப்பதற்கு ஓர் அமைப்பை ஏற்படுத்த 2000 மே 6 அன்று தாய்லாந்தின் சியாங்மாயில் ஆலோசனை நடத்தின. அதன் விளைவாக ஆசியான் பிளஸ் மூன்று நாடுகளுக்கிடையே பலதரப்பு நாணய பரிமாற்ற ஒப்பந்தங்களுக்கான வலையமைப்பை ஏற்படுத்த சியாங்மாய் முன்முயற்சி உருப்பெற்றது.

2009இல், உலகளாவிய நிதி நெருக்கடியால் ஆசியா மீண்டும் ஒரு முறை தாக்குற்ற பின்னர், அவசர காலங்களில் அந்நிய செலாவணிப் பரிமாற்றத்திற்கான இருப்பை உருவாக்கி சியாங்மாய் முன்முயற்சி பன்முகப்படுத்தப்பட்டது (சிஎம்ஐஎம்). 2014இல், அதன் அந்நியச் செலவாணி இருப்புகளின் அளவு 240 பில்லியன் டாலராக இரட்டிப்பானது. சர்வதேச நாணய நிதியத்தின் "சாராத" பகுதி, (சர்வதேச நாணய நிதியத்தின் இணை நிதி மற்றும் நிபந்தனை இல்லாமல் உறுப்பினர்கள் பெறக் கூடிய அதிகபட்சத் தொகை) 30 சதவீதமாக உயர்த்தப்பட்டுள்ளது.

நவீன தாராளமயத்தாலும், சர்வதேச நிதி நிறுவனங்களாலும் கடுமையாக சுரண்டப்பட்டு மீளாத் துயரில் உள்ள ஆப்பிரிக்காவுக்குப் பொருளாதார தற்சார்பே மீட்சி அளிக்கும். அங்கும் தேசிய நாணயங்களில் சர்வதேசப் பரிவர்த்தனைகள் ஊக்குவிக்கப்பட்டால் சுரண்டலின் கடுமை குறையும். பத்தாண்டுகளுக்கும் மேலாக ஆப்பிரிக்க பண நிதியம் உருவாக்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஆப்பிரிக்கத் தலைவர்கள் 2014இல் ஆப்பிரிக்கப் பண நிதியம் உருவாக்குவதற்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். ஆனால் இன்னும் இத்திட்டம் கிடப்பில் உள்ளது. இது வரை இந்த ஒப்பந்தத்தில் பதினொன்று ஆப்பிரிக்க ஒன்றிய உறுப்பு நாடுகள் கையெழுத்திட்டுள்ளன, ஆனால் ஒப்புதல் அளிக்கவில்லை. ஆப்பிரிக்க பண நிதியம் செயல்படுவதற்கு பதினைந்து உறுப்பு நாடுகள் கையெழுத்திட்டுச் சட்டங்களை அங்கீகரித்து ஒப்புதல் அளித்து உறுதி செய்ய வேண்டும். ஆப்பிரிக்கப் பண நிதியம் செயல்பாட்டுக்கு வந்தால் உறுப்பு நாடுகளின் 22.64 பில்லியன் அமெரிக்க டாலர் அளவிலான மூலதனப் பங்களிப்புடன் அதற்கு இரண்டு மடங்குக்குச் சமமான கடன்களை வழங்க முடியும்.

.

உலக அளவில் நாடுகளிடையே நடைபெறும் இருதரப்பு நாணய மாற்று ஒப்பந்தங்களின் அளவு தொடர்ந்து அதிகரித்து வருகிறது. டாலரின் பயன்பாடு குறைந்து வருகிறது. டாலருக்கு பதிலாக அந்தந்தப் பிராந்தியத்தில் வலிமையான நாணயங்களில் செய்யப்படும் பரிவர்த்தனைகளின் அளவு அதிகரித்து வருகிறது. டாலருக்கு மாற்று ஒற்றை நாணயம் என்றில்லாமல் ஐரோப்பியப் பகுதியில் யூரோ, ஆசியப் பகுதியில் ரென்மின்பி என பலமுனைப்புத் தன்மையுடைய ஒரு நாணய அமைப்பு தற்போது உருவாகி வருவது கண்கூடு.

(தொடரும்)

## தமிழ்த் தேசிய விடுதலை இயக்கம்

பொதுச்செயலாளர்: தோழர் ***தியாகு***

அன்பிற்குரியீர்! வணக்கம்.

தமிழ்த் தேசிய விடுதலை இயக்கத்தின் அரசியல்-கருத்தியல் நிலைப்பாடுகளையும் நடைமுறைச் செயல்பாடுகளையும் தொடர்ந்து கவனித்து வருவீர்கள் என நம்புகிறேன். தமிழ்த் தேசிய விடுதலைக்கும் சமூக நீதிக்குமான கொள்கைவழியைத் தொடர்ந்து பற்றி நிற்கிறோம். பதவி அரசியலைப் புறந்தள்ளிப் போராட்ட அரசியலை உறுதியாகக் கடைப்பிடிக்கிறோம். மக்கள் நலன் கருதி ஒன்றுபட்ட இயக்கங்களில் தொடர்ந்து எங்களால் இயன்ற பங்களிப்பைச் செய்து வருகிறோம். உணர்வு அரசியலில் மயங்காமல் அறிவார்ந்த அரசியல் களத்தில் ஊன்றி நிற்கிறோம். தமிழீழம் உள்ளிட்ட தமிழ் மக்களின் உரிமைப் போராட்ட அரசியலில் எமது இடம் சிறிதென்றாலும் இன்றியமையாத ஒன்றென்னும் அறிந்தேற்புப் பெற்றுள்ளோம்.

எம் கொள்கை நிலைப்பாடுகளையும் கருத்துகளையும் திங்கள்தோறும் வெளிவரும் ***உரிமைத் தமிழ்த்தேசம்*** மின்னிதழில் உங்கள் பார்வைக்குப் படைத்து வருகிறோம். ***அறிவுக்குரல்*** வாயிலாகவும் புரட்சியச் சிந்தனைகளை விரிய விதைத்து வருகிறோம். எம் விடாமுயற்சியின் பயனாக இயக்கம் சீராகவும் உறுதியாகவும் வளர்ந்து வருகிறது. அறிவியல் நோக்கும் ஈகவுணர்வும் உழைப்பார்வமும் கொண்ட புதிய ஆற்றல்களை இயக்கத்தின் பால் ஈர்த்துள்ளோம்.

ஆனால், இன்றைய அரசியல் சூழலின் தேவைகளை நிறைவு செய்ய எமது வலிமையும் வளர்ச்சியும் போத மாட்டா என்பதை உணர்ந்துள்ளோம். இயக்கத்தின் பரவலான வளர்ச்சிக்கும் மக்கள்-பணிக்கும் மேலும் முழுநேர, பகுதிநேர ஊழியர்களைக் களமிறக்க வேண்டும். சமூக ஊடகங்களை இன்னும் விரிவாகப் பயன்படுத்தவும், மெய்ந்நிகர் அரசியல் செயல்நிரலைக் கடைப்பிடிக்கவும் தொடர்ச்சியான பொருள்வளம் தேவைப்படுகிறது. இதற்கென எம் தலைமைக் குழுவில் பேசி முடிவெடுத்து இந்தத் திங்கள் பங்களிப்புத் திட்டத்தை அறிவிக்கிறோம்:

எம் இயக்கப் பணிகளில் உங்களுக்கு நம்பிக்கையும் அக்கறையும் இருக்குமானால் தொடர்ந்து ரூ.100/- முதல் 2000/-க்குள் திங்கள் பங்களிப்பாகத் தாருங்கள். இது ஓராண்டுக்கான திட்டமாகும். இதற்கான படிவம் நிரப்பித் தந்து இத்திட்டத்தில் இணைந்து கொள்ள வேண்டுகிறேன். சிறுதுளி பெருவெள்ளம்!

தமிழர் விடுதலைப் போர்முழக்கம்! சமூகநீதித் தமிழ்த்தேசம்!

நன்றி!

தோழமையுடன்

தியாகு / சென்னை /04/05/2020

**தமிழ்த் தேசிய விடுதலை இயக்கம்**

பொதுச்செயலாளர்: ***தியாகு***

**திங்கள் பங்களிப்புப் படிவம்**

| | |
|---|---|
| **பெயர்:** | |
| **ஊர் / முகவரி:** | |
| **தொலைபேசி / புலனம் எண்:** | |
| **மின்னஞ்சல் முகவரி:** | |
| **திங்கள் பங்களிப்பு:** | **ரூ.** |
| **திங்கள்தோறும் பங்களிப்பு நாள்:** | |
| **பங்களிப்பு வழி (நேரில்/ வைப்பகக் கணக்கு/ ஏனைய வழி)** | |
| **இயக்கத்திடம் உங்கள் எதிர்பார்ப்பு:** | |